
ஞானச்சுடர்
தை
சந்நிதியான் ஆச்சிரமம்
253 ஆவது மலர்
2019
ஓம்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

**பொருள்:** தவத்தினால் நினைத்தவை நினைத்தபடி கிடைக்குமாத லால் அறிவுடையோர் இம்மையில் தவம் செய்ய முயல்வர். (265)

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவஞ்செய்வா ராசையுட் பட்டு.

**பொருள்:** தவம் செய்கின்றவர்களே தமக்கு உறுதியாகிய நற் செய்கைகளைச் செய்கின்றவராவர்; தவம் செய்யாதவர் ஆசை வலைப்பட்டுத் தமக்குத் தீமை செய்பவராவர். (266)


# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### இலங்கை நம் நாடு

வெண்பா



சிந்திக்க நெஞ்சும் தெரிசிக்கக் கண்ணிரண்டும்
வந்திக்கச் சென்னிபிறர் வைத்தகுடி நாமல்லோம்– அந்திசந்தி
வாழ்த்தி வணங்குவோம் வாயாரப் போற்றுவோம்
தாழ்த்திநிற் போமிலங்கை தாள் 07

எல்லார்க்கு மாங்கடவு ளொன்றென் றியம்புவோம்
பொல்லாங்கு செய்யோம் பிறர்குடி – யல்லோம்
கொலைகளவு கோபத்தைக் கொள்கிலேம் நெஞ்சில்
நிலையென் றிலங்கை நினை 08

நிற்போம் சமாதியிலே யென்றும் நிலைத்திருப்போம்
பெற்றோம் பிறர்க்கடிமை நாமல்லோம் – சுற்றந்
துறந்தோம் பிறவாத தொல்பதியைச் சேர்ந்தோம்
சிறந்தோ மிலங்கை தெரி 09

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்



வெளியீடு - 3 சுடர் - 253

2019 தை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பக்தி இலக்கியம் | அ. சுப்பிரமணியம் | 01 -04 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 05 -08 |
| சீர்குலையும் சமய... | செல்வி ச. சரணியா | 09 -11 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 12 -16 |
| ஆறுமுகமானபொருள் | எம்.பி. அருளானந்தன் | 17 -19 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 20 -22 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 23 -24 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 25 -26 |
| ரகு குல திலகன் | திருமதி செல்வக்காந்திமதி | 27 -29 |
| சைவ சமயம் | கௌ. சித்தாந்தன் | 30 -33 |
| பண்பில் உயர்ந்தவர்கள்... | க. சிவசங்கரநாதன் | 34 -35 |
| "ஆறு" எண்ணின் மகிமை | செல்வி பா. வேலுப்பிள்ளை | 36 -38 |
| புண்படா உடலும் புரைபடா... | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 39 -41 |
| அருட்சித்தர் குடைச்சுவாமிகள் | அ. நளினாசினி | 42 -44 |
| ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்... | பு. கதிரித்தம்பி | 45 -46 |
| இராவணனுக்குச் சிவன்... | ஆர்.வீ. கந்தசுவாமி | 47 -49 |
| பறம்பு மலை பாரி வள்ளலின்... | திருமதி ஜெகவதனராசா | 50 -51 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 52 -56 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 57 -59 |
| சந்நிதியான் ஆச்சிரமம்... | வல்வையூர் அப்பாண்ணா | 60 -65 |
| இனிமையாகப் பழகிப் பேசி... | பூ.க. இராசரத்தினம் | 66 -68 |
| வாசகர் போட்டி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 69 -70 |
| சந்நிதியான் ஆச்சிரமத்தின்... | மோகனதாஸ் சுவாமிகள் | 71 -72 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

சிவமயம்

குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்*

*இரண்டாவது குருமகா சந்நிதானம் அவர்கள்*

*வழங்கிய*

# ஆசிச் செய்தி



1998ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை மாதாந்தம் ஒரு மலராக, தொடர்ச்சியாக வெளிவந்து இன்று 253ஆவது "ஞானச்சுடர்" மலர் வெளியாகும் இத்தருணத்தில் யான் இந்த ஆசிச்செய்தியினை வழங்குவதில் பேருவகை கொள்கிறேன்.

இம்மலர் போர்ச்சூழல், காகித தட்டுப்பாடு போன்ற பல்வேறு நெருக்கடியான கட்டங்களைத் தாண்டி, உயரிய சமயக் கருத்துக்கள் கொண்ட தூய சஞ்சிகையாக வெளிவருவது சந்நிதி வேலவனின் திருவருள் என்றே கூறுவேன்.

இம்மலர் தொடர்ந்தும் பல்லாண்டு பல்லாண்டு மலர்ந்து - பிரகாசித்து சமயப் பணியாற்றிட நாம் அனை வரும் உறுதுணையாக நிற்க வேண்டும்.

"வாழ்க ஞானச்சுடர்"

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த*
*பரமாசார்ய ஸ்வாமிகள்.*

# வல்வை
# சிவன் தேவஸ்தான பிரதம குருவின் ஆசிச்செய்தி



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெளிவரும் ஞானச்சுடர் தமது 22ஆவது அகவையில் கால் பதிப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.


சந்நிதியான் ஆச்சிரமம் சிறு விருட்சமாக இருந்து பெரு விருட்சமாக வளர்ந்து சமயம் சார்ந்த பணிகளையும், இன்றைய காலகட்டத்தில் சமூகப் பணிகள் பலவற்றையும் முதன்மைப் படுத்தி செயல்படுவது எல்லாம் ஆற்றங்கரை வேலவனின் செயல் அன்றி வேறு ஒன்றும் இல்லை. ஞானச்சுடர் ஓர் அரிய பொக்கிஷமாகும். சமயம் சார்ந்த பல விடயங்களை பிரசுரம் செய்து மக்களை நல்வழியில் செல்வதற்கு வழிவகுக்கின்றது.

சுவாமிகள் அவர்கள் தொடர்ந்தும் இப்பணிகளைச் சிறப்புடன் செய்வதற்கு நீண்ட ஆயுளையும், தேக ஆரோக்கியத்தையும் ஆற்றங்கரை வேலவன் அவருக்குக் கொடுக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து நல் ஆசிகளையும் வாழ்த்துக் களையும் தெரிவிக்கின்றேன்.

"இன்பமே சூழ்க, வளர்க சந்நிதியான் ஆச்சிரமம்"

கிரியா க்ரம ஜோதி, கிரியா கலாப முக்தாமணி
*சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்கள்*
பிரதமகுரு:
வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி
தேவஸ்தானம்.
வல்வெட்டித்துறை.

# வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவின் ஆசிச் செய்தி



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஆன்மீக மலரான ஞானச்சுடர் தனது 22ஆவது அகவையில் தடம் பதிப்பதை இட்டு பேரவையின் போஷகர் என்ற வகையில் பேருவகை அடைகின்றேன்.

ஞானச்சுடர் மலரானது அனைவரது உள்ளங்களிலும் நீங்காத இடம்பெற்று இன்று இருபத்தி இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுவதையிட்டு எனது நல்லாசிகளைத் தெரிவிப்பதோடு ஆச்சிரம குருமுதல்வர் சிவத்திரு செந்திவேல் மோகனதாசின் ஆற்றுப்படுத்தலில் ஆச்சிரம பணிகள் அனைத்தும் சிறக்க எல்லாம் வல்ல அம்பிகையைப் பிரார்த்திக்கின்றேன்.

"சர்வே ஜனதா சுகினோ பவந்து"
"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"
"வாழ்க வளமுடன்"
"வாழ்க பல்லாண்டு"
சுபம் - மங்களம்.

*சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்* J.P
இந்துமத குருபீடாதிபதி
பிரதமகுரு:
வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
வல்வெட்டித்துறை.
ஆதீனகர்த்தாவும், தர்மகர்த்தாவும்
புற்றளை சித்தி விநாயகர் ஆலயம்.

## உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதாம் "சந்நிதியான் ஆச்சிரமம்"

சந்நிதியான் ஆச்சிரம "ஞானச்சுடர் தனது ஞான ஒளியை தமிழ் கூறும் நல் உலகம் முழுக்க சைவ சமயிகளிடையே பரப்பும் பணியில் 21 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து, 22ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இவ்வேளையிலே இஞ்ஞான ஒளியைத் தரிசிக்கக் கிடைத்த நற்பலன் காரணமாக உய்த உள்ளங்கள் பெற்ற புளகாகிதங்களை சற்றே மீட்டுப் பார்க்க முயற்சிக்கின்றோம்.



இவற்றிற்கெல்லாம் மூலகாரணமான சந்நிதி வேலவன் அருளாசியும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் வணக்கத்திற்குரிய மோகனதாஸ் சுவாமிகளின் ஓய்வு ஒழிச்சல் இல்லா உழைப்பும், உத்வேகமும், அர்ப்பணிப்பும் காரணமாகின்றன. அவரவர் செய்த முன்வினைப் பயனின் பலனாகப் பலரும் சந்நிதியான் ஆச்சிரமம் மூலமாகப் பயன்பெற்று வருகிறார்கள்.

பல்வேறு இடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல வருடங்களாக சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றிவரும் சிறந்த சமய, சமூகப் பணிகள் பற்றி நல்ல பல பதிவுகள் இருக்கின்றன. அவைபற்றி பட்டியல் இட பல பக்கங்கள் தேவைப்படும். ஆனால் ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என சமீபத்தில் நடந்த ஒரு விடயத்தை மாத்திரம் அடிக்கோடிட்டுக் கூறலாம் என விழைகிறோம்.

கடந்த இறுதி மாதத்தில் வன்னி மாவட்டத்தில் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட இயற்கை பேரிடரால் வெள்ளத்தில் மூழ்கித் தவித்த எம் மக்களிற்கு உடனடி உதவிகளை- ஒத்தாசைகளை- நிவாரணங்களை வழங்க சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் தன் ஆளணியினருடன் அந்தந்த இடங்களிலே ஆஜராகியிருந்து பல லெட்சம் பெறுமதியான உதவிப் பொருட்களை வழங்கியிருந்தார்கள். காலம் தாழ்த்தாது கிடைத்த இவ்வுதவிகள் சந்நிதியான் ஆச்சிரம முதல்வருக்கே உரிய பாணியில் மிக வேகமாக பங்கிடப்பட்டு வழங்கப்பட்டன. இப்பணிகள் எக்காலத்திலும் போற்றப்பட வேண்டியன.

இதுபோன்ற அழிவிலிருந்து சிறிதளவாவது எமது எதிர்காலச் சந்ததி காப்பாற்றப்பட எம்மால் இயன்றளவு மர நடுகைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். ஊக்குவிக்க வேண்டும். சொல்வது எளிது செய்வது கஷ்டம். தொடர்ந்து பேணுவது மிகக் கஷ்டம். இருந்தும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என முடிவு செய்தால் அவர் அதை செய்தே முடிப்பார்.


இவ்வளவு காலமும் அவர் இந்தத் தலைமுறையினருக்குப் பல்வேறு பணிகளைப் பல சிரமங்களுக்கு மத்தியிலும் ஆற்றிக்கொண்டிருக்கிறார். எமது எதிர்கால தலைமுறைக்காக, ஆச்சிரமத்தில், ஆலயப் புற வீதியில் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் மரநடுகை பற்றி அவர் சிந்தித்து செயலாற்றினால், எதிர்கால சந்ததியும் நன்றிக்கடன் உடையவராகவிருப்பர். எல்லாம் அவன் செயல்.

ஆச்சிரம அன்பர்
**திரு சி. பத்மநாதன்**
இளைப்பாறிய பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி, யாழ் பிராந்தியம்.

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதிமுதல்வரும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவருமாகிய திரு. ச.லலீசன் அவர்கள் வழங்கிய

# பிரார்த்தனை உரை

ஆற்றங்கரையில் வீற்றிருந்து அரசோச்சும் வேற்பெருமானின் கிருபையால் ஞானச்சுடர் 22 ஆவது ஆண்டில் கால்பதிக்கின்றது. யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி இந்துக்களுக்கு என வெளிவரும் சஞ்சிகைகளுடைய எண்ணிக்கை தற்போது சற்று அதிகரித்திருந்தாலும் ஞானச்சுடர் தனது தனித்துவத் தடத்தில் தொடர்ந்து பயணிக்கின்றது.



வழிபாட்டில் குரு லிங்க சங்கம வழிபாடுகளின் முக்கியத்துவம் பற்றி அனைவரும் அறிவர். ஆயினும் முன்னிரண்டிலும் கொண்டிருக்கும் ஆர்வத்தைச் சங்கம வழிபாட்டில் இந்துக்கள் காட்டுவது குறைவு என்பது என் கணிப்பு. சங்கமம் என்பது அடியார் திருக்கூட்டத்தைக் குறிக்கும்.

நாதன் விரும்பும் நல்லடியார்களுக்குச் சேவை செய்வது வழிபாட்டின் பயனை நல்க வல்லது. இதனைச் சமய இலக்கியங்கள் பல வலியுறுத்துகின்றன. எங்கள் மண்ணில் எம் கண்முன் காணும் தரிசனமாக அடியார் வழிபாட்டிற்கு முன்னுரிமை வழங்கி அதனை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாகச் சந்நிதியான் ஆச்சிரமத்தைக் காண்கின்றேன்.

மனித சேவையே தெய்வ வழிபாடு என்ற வகையில் முருக அர்ப்பணமாக எந்தக் காரியத்தையும் இங்கு மேற்கொள்கின்றனர். அடியார்களுக்குத் தமது உபகாரங்கள் கிட்ட வேண்டும் எனக் கருதுகின்ற அன்பர்கள் ஆச்சிரமத்தின் உதவியை நாடுகின்றனர். கொடுப்பாரும் கொள்வாரும் நிறைவுறும் வகையில் சேவைகள் இடம்பெறுகின்றன.

இதன் ஓர் அங்கமாகவே ஆன்மீக அறிவூட்டல் சேவை இடம்பெறுகின்றன. அதற்குரிய கருவியாகவே ஞானச்சுடரை நோக்க முடியும். ஞானச்சுடர் மூலம் அறிமுகமாகிய எழுத்தாளர்கள் பலர் இன்று உயர்நிலை பெற்று விளங்குகின்றனர். அதே சமயம் உயர் நிலை பெற்ற எழுத்தாளர்கள் ஞானச்சுடரில் தமது ஆக்கங்களைப் படைக்க விழைகின்றனர்.

ஆச்சிரமம் அறிமுகம் செய்து வைத்த ஆன்மீகப் பேச்சாளர்கள் வரிசையில் நானும் இடம்பெற்றிருப்பது நான் செய்த தவம். 1998 இல் எனது ஆசிரிய மாணவப் பருவத்தில் ஏற்பட்ட உறவு இன்றும் தொடர்கின்றது. ஆச்சிரம சுவாமிகளின் அன்பும் ஆதரவும் எனது ஆன்மீகம் சார்ந்த தேடல்களுக்குக் களம் அமைத்துத் தருகின்றன.

ஞானச்சுடர் சூரிய சந்திரர் ஆகிய இருசுடர் உள்ளவரை வாழும். ஆச்சிரம சுவாமிகளின் ஆன்மநேய சேவைகளுக்குத் தலைசாய்த்து ஞானச்சுடர் தொடர்ந்து ஒளிபரப்ப எனது பிரார்த்தனைகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

# ஞானச்சுடர்
# மார்கழிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

மார்கழி மாத ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆச்சிரமப் பணிகளுக்கு தன்னாலான ஆதரவை நல்கி வருபவரும் கிராம சேவையாளராக விளங்குபவரும் சமூக ஆர்வலராக விளங்கி வருபவருமாகிய திரு சோ. பரமநாதன் அவர்கள் வழங்கினார்கள்.

சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பலவிதமான அறப்பணிகளின் தன்மைபற்றிய தன்னுள் எழும் கருத்துக்களை சபையில் இருந்த அடியார்களுக்கு விளக்கிக்கூறி இப்பணிகள் மேன்மேலும் சிறக்க சந்நிதி வேலவனது பூரண அருள்கிட்ட பிரார்த்திப்பதுடன், நான் ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அது என்னவெனில் ஒரு புத்தகத்தை ஒருமுறை பார்த்தால் அதனைத் தூக்கி ஒரு பக்கமாக போட்டுவிடுவோம். ஆனால் ஞானச்சுடரில் வாசகர் போட்டி என்ற ஒரு பகுதியைப் புகுத்தியன்பேரில் அந்தந்த ஆண்டு வெளியிடப்பட்ட அத்தனை ஞானச்சுடர் மலர்களையும் திரும்பிப் பார்க்க வேண்டிய செயற்பாட்டினை இப்பேரவை ஏற்படுத்தி இருப்பது ஒரு முன்மாதிரியான ஆக்கபூர்வமான செயல் என்றே கூறவேண்டும் என்று கூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

252ஆவது மலராகிய ஞானச்சுடருக்குரிய மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளரும் சிவபூமி நிறுவனத்தோடு இணைந்து சேவையாற்றும் திரு ஆ. ஸ்ரீஸ்கந்த மூர்த்தி அவர்கள் மேற்கொண்டார்கள்.

அவர் தம் உரையில் கடந்த பல வருட காலமாக மார்கழி மாத மலருக்கு மதிப்புரை ஆற்றுவதற்கு சந்நிதி வேற்பெருமான் கருணை புரிந்துள்ளார். அதேபோன்று வெளியீட்டுரை ஆற்றும் திரு சோ. பரமநாதன் அவர்களும் இம்மாத மலருக்கு வெளியீட்டுரை ஆற்றுவதும் வழமையான ஒன்று. இருவரும் இணைந்து இம் மலர் வெளியீட்டில் கலந்துகொள்வது ஒரு சிறப்பு. ஏனெனில் இருவரும் குப்பிளானைச் சேர்ந்தவர்கள் என்று கூறி மலரில் இடம்பெற்ற கட்டுரைகளைத் தரம் பிரித்து சபையில் வீற்றிருந்த அடியவர்களுக்கு தனது தனித்துவம் மிக்க சொல்லாற்றல்மூலம் விளக்கிக் கூறினார்.

இறுதியில் சிறப்புப்பிரதி பெற வந்த அன்பர்களையும் போற்றி தனது மதிப்பீட்டுரை யினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

"ஞானச்சுடர்" தனது 21 வயதினைப் பூர்த்தி செய்து, 22ஆவது வயதில் கால் பதிக்கிறது. அகவை 22 என்பது ஆண் - பெண் இருபாலாரிலும் "திசைமாறும் பருவம்" ஆகும். 1998இல் பிறந்த குழந்தை "ஞானச்சுடர்" படிப்படியாக வளர்ந்து - தவழ்ந்து - நடந்து - விழுந்து - எழுந்து இன்று 21 வயதினைப் பூர்த்தி செய்கிறது. "விழுந்து" என நாம் குறிப்பிட்டது, கடுமையான போர்க்கால சூழலில் - சந்நிதிச் சுற்றாடலில் அனைவரும் இடம்பெயர்ந்த வேளை "ஞானச்சுடர்" வெளியீடும் சற்று முன்பின்னாக வெளியாகியபோதும், எந்த மாதத்திற்குரிய பிரதியும் வெளியாகாமல் இருந்ததில்லை என்பதையேயாகும்.

விளம்பரம் எதுவுமின்றி - அரசியற் கலப்பின்றி - கடைகளில் விற்பனைக்கென வைக்காமல் - சராசரி 70 பக்கங்களுடன் சந்தாதாரர் கைகளில் "ஞானச்சுடர்" பிரகாசிப்பது முருகன் கொடுத்த வரம். கட்டுரைகள் - கவிதைகளுக்காக ஆச்சிரம சுவாமிகள் வீடுகளில் காத்திருந்த காலம் மாறி, இன்று தபால்மூலமும் - நேரிலும் வந்து சேரும் கட்டுரைகளையும்- கவிதைகளையும் சரிபார்த்துத் தரம் பிரித்து அச்சுப் பகுதிக்கு அனுப்புவது என்பதே பெரும் விடயமாகவுள்ளது.

ஒரே கட்டுரையாளர்களின் கட்டுரைகள் அவற்றின் கனம் கருதி ஞானச்சுடரை அடிக்கடி அலங்கரித்தாலும், அறிமுக எழுத்தாளர்களையும் கைதூக்கிவிடும் கைங்கரியத்தில் நாம் என்றும் பின்நிற்கவில்லை. இந்த நோக்கில் கடந்த ஆண்டில் பல புதிய எழுத்தாளர்களையும்- கவிதை வடிப்போரையும் அறிமுகப்படுத்தியிருக்கிறோம். இன்னும்... இன்னும் புதியவர்களின் ஆக்கங்களுக்காகக் காத்திருக்கிறோம்.

"ஞானச்சுடர்" வளர்ச்சிக்கு உறுதுணையாகவிருந்து வாழ்த்தி நிற்கும் அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 12. வேடிச்சி காவலன் வகுப்பு

இதமகிதம் விட்டுருகி யிரவுபக லற்றவிட
 மெனதறவி ருக்கைபுரி யோகப் புராதனனும்
எனதுமன சிற்பரம சுகமவுன கட்கமதை
 யமன் முடி துணிக்கவிதி யாவைத்த பூபதியும்
எழுமையுமெ னைத்தனது கழல்பரவு பத்தனென
 இனிதுகவி யப்படிப்ர சாதித்த பாவலனும்
இமயவர் முடித்தொகையும் வனசரர் பொருப்புமென
 திதயமு மணக்குமிரு பாதச் சரோருகனும்
எழுதரிய கற்பதரு நிழலில்வளர் தத்தைதழு
 வியகடக வஜ்ரவதி பாரப் புயாசலனும்
எதிரில்புல வர்க்குதவு வெளிமுகடு முட்டவள
 ரிவுளிமுகி யைப்பொருத ராவுத்த னானவனும்
எழுபரி ரதத்திரவி யெழுநிலமொ டக்கரிக
 ளிடர்பட முழக்கியெழு சேவற் பதாகையனும்
இணையிலியு நிர்ப்பயனு மலமிலியு நிஷ்களனு
 மிளையவனும் விப்ரகுல யாகச் சபாபதியும்:,

மதுகையொடு சக்ரகிரி முதுகுநெளி யப்புவியை
 வளையவரும் விக்ரமக லாபச் சிகாவலனும்
வலியநிக ளத்தினொடு மறுகுசிறை பட்டொழிய
 வனஜமுனி யைச்சிறிது கோபித்த காவலனும்
வருசுரர் மதிக்கவொரு குருகுபெயர் பெற்றகன
 வடசிகரி பட்டுருவ வேல்தொட்ட சேவகனும்
வரதனு டநுக்ரகனு நிருதர்குல நிஷ்டுரனு
 மநுபவன சித்தனும நோதுக்க பேதனனும்
வயிரிசை முழக்கமிகு மழைதவழ் குறிச்சிதொறு
 மகிழ்குரவை யுட்டிரியும் வேடிக்கை வேடுவனும்
மரகத மணிப்பணியி னணிதழை யுடுத்துலவும்
 வனசரர் கொடிச்சிதனை யாசிக்கும் யாசகனும்
மதனன்விடு புட்பசர படலமுட லத்தனையு
 மடலெழுதி நிற்குமதி மோகத் தபோதனனும்
வரிசிலை மலைக்குறவர் பரவிய புனத்திதணின்
 மயிலென இருக்குமொரு வேடிச்சிக் காவலனே.

# தைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**மக்கள் வங்கி இளைப்பாறிய உத்தியோகத்தர்கள்**

திரு சி. பத்மநாதன்
திரு வ. சண்முகநாதமுதலி
திரு ந. நாகேஸ்வரன்
திரு இ. யோகராசா
திரு தி. சிவகுமாரன்
திரு க. சண்முகலிங்கம்
திரு இ. சிவஞானசுந்தரம்பிள்ளை
திரு பி. கிருஸ்ணானந்தன்
திரு க. ஞானசீலன்
திரு த. சிவகுமார்
திரு பொ. தங்கராசா
திரு எஸ். இராஜேந்திரம்
திரு க. ஞானச்சந்திரன்
திரு க. ஸ்ரீதரன்
திரு க. அமிர்தலிங்கம்
திரு து. பாலேந்திரா
திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
திருமதி சு. விஜயகுமார்
திரு K. சிவப்பிரகாசம்
செல்வி விமலா கந்தையா
திரு க. சுசீந்திரன்

**மக்கள் வங்கி யாழ். பிரதேச காரியாலய உத்தியோகத்தர்கள்**

திருமதி வி. பிரியகாந்தினி
திருமதி ச. நீரஜா
திருமதி சி. கீர்த்திகா
திருமதி T. பிரதீபா
திரு த. தவேந்திரராஜா
திரு சி. நித்தியானந்தன்
திரு ம. மாலவன்
திரு பொ. தேவநேசன்
திரு ப. உதயனன்
திரு வி. கிஷோ
திரு S. ஸ்ரீரங்கநாதன்
திரு க. ஸ்ரீதரன்

**மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லிவீதி உத்தியோகத்தர்கள்**

திரு ஆ. சத்தியமூர்த்தி
திருமதி செ. ஞானேஸ்வரி
திருமதி பி. ஜனனி
திருமதி இ. பத்மகலா
திருமதி தி. வானதி
திரு சி. றஜீவன்
திரு ச. சுஜென்
திருமதி ஜீ சயந்தினி
திருமதி க. செல்வமலர்
செல்வி மு. ஹேமப்பிரியா
செல்வி இ. ஜமுனாவாணி
திரு ஞா. யுகதாஸ்
திருமதி பி. சிந்துளா
திருமதி த. லோஜினி
திரு வா. வேணுகோபாலன்
திருமதி ஜெ. பகீரதி
திருமதி ப. சுதர்சினி
திருமதி சு. மலர்மதி
திரு த. ஜெயப்பிரதாப்
திரு கு. குலசீலன்

**மக்கள் வங்கி யாழ். பிரதான வீதி உத்தியோகத்தர்கள்**

திரு A. பிரான்ஸிஸ்
திருமதி ப. ரம்யா
திருமதி S. லாவண்யா
திருமதி S. ஜிராணு
திருமதி ஜெ. சயந்தினி
திரு G. லதிகரன்
திரு G. ஜெயகணேசன்
திரு ச. கெங்காதரன்
செல்வி சு. மைவிழி
திருமதி உ. சுபாஜினி

**மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள்**

திருமதி சு. யாழினி
திருமதி சு. வனஜா
திரு இ. சந்திரகோபன்
திரு தே. ரஜீவன்
திருமதி ல. நிஷங்கா
செல்வி க. சுமித்திரா
திரு பிரகாஸ்
செல்வி தேனுதயா
திரு கோகுலன்
செல்வி சௌ. யாழினி
செல்வி ம. சிந்துசா

**மக்கள் வங்கி யாழ். கன்னாதிட்டி உத்தியோகத்தர்கள்**

செல்வி லி. மயூரி
திரு சி. பகீரதன்
திருமதி கோ. பிரதக்ஷி
திருமதி இ. சுமணா
திருமதி ச. கிருபாளினி

**மக்கள் வங்கி சுன்னாகம் உத்தியோகத்தர்கள்**

திரு ப. பார்த்தீபன்
திரு கு. வெங்கடேஷ்
திருமதி தி. புஷாலினி
திருமதி கி. மனஸ்வினி
திருமதி அ. சுகன்யா
திரு ம. சுவிற்சன்
திரு கோ. அஜந்தன்
திருமதி பு. சாருலதா
திருமதி ச. சுகிர்தகுமாரி
திருமதி பி. சிவசொரூபி
செல்வி மு. தர்சனா

திரு இ. ஜெயகாந்தன்
செல்வி ச. ஹம்சா
திருமதி க. நந்திக்குமார்
செல்வி அ. டினோஷா
திரு த. தனரஞ்சன்
திரு சி. பிரதீபன்
திரு பிரதாப்

**மக்கள் வங்கி சங்கானை உத்தியோகத்தர்கள்**

திருமதி உ. தனுஷ்யா
திருமதி ஜசிகா
செல்வி ப. நிருஜா
திரு ம. லம்போதரன்
திரு ப. புவிராஜ்
திருமதி ஜிந்துஜா
திருமதி R. சரணியா
திரு ப. சுமன்
திருமதி K. சசிகலா
திரு R. சுகிர்தன்
திரு செந்தூர்

**மக்கள் வங்கி காங்கேசந்துறை உத்தியோகத்தர்**

திரு க. ரமேஸ்நேசன்

**மக்கள் வங்கி சாவகச்சேரி உத்தியோகத்தர்கள்**

திரு க. விஜயகுமார்
திருமதி இ. ஆர்த்திகா
திருமதி சி. தமயந்தி
செல்வி நா. கிருஷிகா
செல்வி ம. சிந்துஜா
திரு மு. தேவேந்திரன்
திரு என். சஞ்சீவ்
திருமதி பி. ஜனனி
திருமதி ஐ. அனோஜா
திரு T. அனுஷன்

**மக்கள் வங்கி கொடிகாமம் உத்தியோகத்தர்கள்**

திரு S. மோகனச்செல்வன்
திரு அ. பரணன்
திருமதி S. பானுஜா
திருமதி K. யாழினி
செல்வி C. பபிதா

**மக்கள் வங்கி அச்சுவேலி உத்தியோகத்தர்கள்**

திரு S. சிவகுமார்
திருமதி சு. மாதங்கி
திருமதி சு. துவாரகா
செல்வி R. சசிதா
செல்வி த. லக்கிமாலா

**மக்கள் வங்கி பருத்தித்துறை உத்தியோகத்தர்கள்**

திரு P. சஞ்சீவ்
திரு செ. உமாசங்கர்
திரு S. சசீவன்
திருமதி அ. மீரா
திருமதி பீ. கஸ்தூரி
திருமதி கே. உதயசாந்தி
திருமதி தி. வாகினி
செல்வி ம. சுபேந்தினி

**மக்கள் வங்கி நெல்லியடி உத்தியோகத்தர்கள்**

திரு தெ. ஹர்சன்
திரு சி. மனோராஜ்
திருமதி கோ. அஞ்சனா
செல்வி S. பிரசாந்தி

**மக்கள் வங்கி வல்வெட்டித்துறை உத்தியோகத்தர்கள்**

திரு ச. சர்வானந்தன்
திரு வி. ஜெயமோகன்
திரு க. கமலக்ஷன்

திருமதி ஜெ. நிமாலினி
திருமதி த. சுகந்தி
திருமதி ப. யாழினி
திருமதி த. சங்கீதா
திருமதி வை. மனோஜா
திரு வி. கஜதீபன்
செல்வி சு. அருணா

**மக்கள் வங்கி பரந்தன் உத்தியோகத்தர்கள்**

திருமதி ம. அகிலா
திரு க. தேவராசா
திரு என். கோபி
திரு T. லிங்கராஜ்
திரு த. ரஜிந்தன்

**மக்கள் வங்கி திருமலை மாவட்ட உத்தியோகத்தர்கள்**


திரு அ. ஐங்கரன்
திரு க. மதிவதனன்
திரு ம. பிறேம்குமார்
திரு எஸ். துஷாந்தன்
திருமதி கு. வையெந்தி
திரு N. சுபாகரன்
திருமதி கி. கைலாசினி

**மக்கள் வங்கி மட்டக்களப்பு உத்தியோகத்தர்**

திரு கு. கோடீஸ்வரன்

**மக்கள் வங்கி வவுனியா பிரதேச தலைமை அலுவலக உத்தியோகத்தர்**

செல்வி வ. கனகசபை



**செல்வி சரண்யா சத்தியநாதன்**
(கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்)
**திருமதி கலைச்செல்வி தயாளன்**
(திருகோணமலை)
**திரு S. திருநாவுக்கரசு**
(அச்செழு, நீர்வேலி)
**திரு E. செல்வேஸ்வரன்**
(பாட்டா பாதணி முகவர், திருமலை)
**திரு த. கணேசமூர்த்தி**
(இளை. நிறைவேற்று அதிகாரி, இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)
**திரு பொ. பாலசிங்கம்**
(காசாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)
**செல்வி ஹரினி ஹரிதரன்**
(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)
**செல்வி ஹம்ஷாலினி ஹரிதரன்**
(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)
**திரு பா. இராசேந்திரம்**
(இளை. கி. சேவகர், உடுப்பிட்டி)
**திரு செ. மதியாபரணம்**
(வளர்மதி புடவை அகம், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்)
**திரு நீ. சுப்பிரமணியன்**
(இளை. உத்தியோகத்தர், ப.நோ.கூ.ச, உடுப்பிட்டி)
**செல்வி தட்சாயிணி செல்வமாணிக்கம்**
(நாவலடி, உடுப்பிட்டி)
**திரு வே. இரத்தினசிங்கம்**
(சிவசக்தி மோட்டோர்ஸ், பருத்தித்துறை)
**திரு சி. கணேசலிங்கம்**
(தமிழ்ப்பூங்கா, நெல்லியடி)
**உரிமையாளர்**
(பெசன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(பெற்றா ஏசென்ஸ் விநியோகத்தர், யாழ்ப்பாணம்)
**செல்வன் செ. ஷஷ்டிகன்**
(மானிப்பாய்)
**செல்வன் செ. சர்வஜன்**
(மானிப்பாய்)

**உரிமையாளர்**
(சாரங்கா நகைமாடம், யாழ்ப்பாணம்)
**திரு வல்லிபுரம் சிவகுமாரன்**
(சங்கானை)
**உரிமையாளர்**
(வெங்கடேஸ்வரா, யாழ்ப்பாணம்)
**திரு இ. இராசநாயகம்**
(துர்க்கா மரக்காலை, சண்டிலிப்பாய்)
**திரு ஆ. சுந்தரலிங்கம்**
(இளை. பிரதம அஞ்சல் அதிபர்)
**திரு நா. கந்தப்பு**
(தோப்பு, அச்சுவேலி)
**திரு க. தர்மலிங்கம் J.P.**
(நீர்வேலி)
**திரு மு. தர்மலிங்கம்**
(சிங்காரராசா வாசா, உடுப்பிட்டி)
**உரிமையாளர்**
(மலாயன் கபே, யாழ்ப்பாணம்)
**திரு ஜெ. இராஜகோபால்**
(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)
**திரு சேனாதிராசா சற்குணராசா**
(பண்டத்தரிப்பு)
**திருமதி பாலகிருஸ்ணன் சிவனேஸ்வரி**
(முருகமூர்த்தி வீதி, சங்கானை)
**திரு க. இராஜதுரை**
(நீர்வேலி)
**திரு த. சிவசுப்பிரமணியம்**
(லீலா வெதுப்பகம், சங்கானை)
**திரு Dr சி. இராசலிங்கம்**
(இளை. வைத்திய பொறுப்பதிகாரி, அச்சுவேலி)
**செல்வன் ப. ஆரணன்**
(கொக்குவில்)
**செல்வி கு. சோதிநாயகி**
(யாழ்ப்பாணம்)
**செல்வன் தி. திருநாத்**
(சுதுமலை)

**திரு சிவஞானம் கிருபாகரன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திரு மு. சரவணபவான்**
(கலைமகள் விலாஸ், சங்கானை)
**செல்வி நா. ஜெயராணி**
(இளை. அதிபர், சங்கானை)
**திரு இ. கோபாலசுந்தரம்**
(சதா வெதுப்பகம், உரும்பராய்)
**திரு J. பிரபாகரன் மாஸ்ரர்**
(நெல்லியடி)
**திரு க. நாகராசா**
(காங்கேசந்துறை)
**திரு இ. சொக்கலிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியர், நாவற்குழி, கைதடி)
**திரு கு. கங்கைவேணியன்**
(உரிமையாளர், வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்)
**திரு ந. சத்தியரூபன்**
(சிறி நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)
**திரு க. சோமசேகரம்**
(மகாராணி புடவையகம், யாழ்ப்பாணம்)
**திரு ஐ. சிவகுமார்**
(சுதுமலை கிழக்கு, மானிப்பாய்)
**திருமதி வ. தபேந்திரன்**
(உப அஞ்சல் அதிபர், குப்பிளான்)
**திரு க. இராசநாயகம்**
(பிள்ளையார் ஸ்ரோர்ஸ், தொட்டிலடி, சங்கானை)
**திரு R.S. தனபாலன்**
(பாலன் மில், வட்டுக்கோட்டை)
**திரு சி. சச்சிதானந்தம்**
(சச்சியா இரும்பகம், வட்டுக்கோட்டை)
**உரிமையாளர்**
(V.M.K. நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
**திரு வே. பொன்னம்பலம்**
(பாக்கியரெத்தினம் இரும்பு விற்பனை நிலையம், சங்கானை)

# பக்தி இலக்கியம்

– **திரு அ. சுப்பிரமணியம்** அவர்கள் –

*விநாயகர் துதி*

"திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவோம்"

செந்தமிழ் இலக்கியப் பரப்பிலே பக்தி, வீரம், விளையாட்டு, சமுதாயநலன், ஒழுகலாறு, வாழ்வியல், பெண்மை ஆகிய பல விடயங்கள் பண்டுதொட்டு இன்றுவரை பேசப்படுகின்றன. இனிமேலும் பேசப்படும்.

இவற்றுள் "பக்தி இலக்கியம்" பற்றி எடுத்துக் கூறுதலே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். பக்தி இலக்கியத்தின் முன்னோடி யாகத் திகழ்ந்தவர் அருண்மொழித்தேவர் எனப் போற்றப்படுகின்ற சேக்கிழார்குடியெனும் தூய சைவ மரபில் அவதாரம் செய்துள்ளவ ராய உயர் சைவாகம பண்டிதராய சேக்கிழார் பெருமகனாவர். பரம்பொருளான சிவபெரு மானைப் பணிந்து வேண்ட அவர் "உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன்" என்று முதலடி எடுத்துக் கொடுக்க, அதனையே முதலும் இறுதியுமாக வைத்துப் பக்தி இலக்கியமாம் பெரியபுராணம் பாடித் தந்தருளியுள்ளார். இ∴து சைவத் திருமுறை வரிசையில் பன்னிரண்டாவ தாக உள்ளது. இதன் கண் 63 நாயன்மார் களினதும் 9 தொகையடியார்களதும் வரலாறு களும் செயற்கரும் செயல்களும் இறையருளி னாலே நிறைவேற்றியுள்ள அற்புதங்களும் சிவனடி சேர்ந்த வரலாறுகளும் பக்தி இலக் கிய வழியாகப் பரிமளிக்கின்றன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியுள்ள திருத்தொண்டத் தொகையே பெரியபுராணத்தின் அடிப்படை யாகும். "வெண்பாவில் புகழேந்தி" என்னும் பாடல்மூலம் பரணி, விருத்தம், கோவை உலா, அந்தாதி, கலம்பகம், வசைபாடல் ஆகிய பக்தி இலக்கியப் பனுவல்கள் முறையே புகழேந்தி சயங்கொண்டான், கம்பன், ஒட்டக் கூத்தன், இரட்டையர்கள், காளமேகம் ஆகி யோர் குறிப்பிடப்படுகிறார்கள். பக்தி இலக் கியத்துடன் மட்டும் நிற்காது.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டும் சந்தான குரவர்கள், ஆழ்வார்கள் மற்றும் ஆண்டாள் ஆகியவர்கள் பாடித்தந்துள்ளவை மாத்திரமன்றி அபிராமிப்பட்டர் பாடியுள்ள அபி ராமி அந்தாதி பக்தி மாலையாய் அம்பிகை யின் அருள் பொதிந்த பக்தி இலக்கியமாக மிளிர்கின்றது.

ஒளவைப்பாட்டி பாடித்தந்துள்ள விநா யகர் அகவல் பக்தி இலக்கியத்தின் மூலவேர் எனலாம். மூலவேரிலிருந்து சிறுமுளை தோன் றிப் பெரிய நாவல் மரமாக வளர்ந்து பூத்துக் காய்த்துப் பழமாகிப் பக்தி இலக்கியக் கனி யாகி கோல் கொண்ட இடைச் சிறுவனாக மரத்தின்மேல் நின்று பாட்டிக்கு சுட்ட பழம் கொடுத்து வேல் காட்டி வேலவனாகி மார் தட்டும் பக்தி இலக்கிய பண்டிதன் முருகன்.

பரஞ்சோதி முனிவர் பாடியருளியுள்ள திருவிளையாடற்புராணம் பக்தி இலக்கியத்தின் உச்சமாகும்.

*சபலம் பிறக்கும்போது எவனுக்கு வைராக்கியம் பிறக்கின்றதோ அவனே ஞானியாவான்.*

திருநாரையூரிலே பொல்லாப்பிள்ளை யாருக்குத் திருவமுது படைத்து உண்ண வைத்த சிறுவன் ஆகிய நம்பியாண்டார் நம்பி அடிகள் பாடசாலைக்குச் செல்லும் நேரம் பிந்திவிட்டதால் பிள்ளையாரைப் பணிந்து அவரிடமே கல்வியைக் கசடறக் கற்று ஞானம் கைகூடப் பெற்றவராகினார்.

பிள்ளையாரை உணவு உண்ண வைத்த அதிசயம் அறிந்த மன்னன் தாம் கொண்டு வந்த அமுதைச் சிறுவன்மூலம் உண்ணவைப்பித்து அதிசயித்து நம்பியாண் டாரைச் சிறப்பித்து அவர்மூலம் திருமுறை ஏடுகளை எடுப்பித்து முதல் பதினொரு திரு முறைகளையும் தொகுப்பித்தார். "தேவார முதலிகள்" எனப்படும் சமய குரவர் மூவர் பாடித் தந்துள்ள பக்தி இலக்கியமாம் தேவாரப் பதிகங்கள் முதல் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டன. எட்டாவது திருமுறையாக மணிவாசகப் பெருமான் பாடியருளிய பக்தி இலக்கியமாய திருவாசகமும் திருக்கோவை யாரும் வைக்கப்பட்டுள்ளது. ஒன்பதாவது திரு முறையில் சேந்தனார் முதலிய பலர் பாடித் தந்துள்ள திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முதலிய பல பக்தி இலக்கியங்கள் அடக்கப் பட்டுள்ளன. பத்தாவது திருமுறை திருமூல தேவ நாயனார் சுவாமிகள் அருளியுள்ள திருமந்திரம் பக்தி இலக்கியமாகவும் மந்திர தந்திர மருத்துவ நூலாகவும் விளங்குகிறது. சித்தர் பாடல்களும் யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைகளும் பக்தி இலக்கியத்தின் பெரும் பொக்கிஷம் ஆகும். பதினோராவது திருமுறையில் காரைக்காலம்மையார் தொடக் கம் பலர் பாடியுள்ள திருவிசைப் பதிகங்கள் அடக்கப்பட்டுள்ளன. திருமுறைகளைத் தொகுப்பித்த மன்னவனது வேண்டுதலுக் கமைய இத் திருமுறையுள் நம்பியாண்டார் நம்பி அடிகள் பாடித் தந்துள்ள விநாயகர் மகிமையை மெருகூட்டும் பக்தி இலக்கியமும் மலர்ந்துள்ளது. எங்கோ மறைந்து வாழ்ந்த வரான மணியம்மைமூலம் திருமுறைப் பதிகங் களுக்கு இசை அமைப்பித்த பெருமையும் மன்னவனையே சாரும். முதல் ஏழு திருமுறை கட்குமே இசை அமைப்பித்துள்ளார்.

சந்தான குரவர்கள் பாடித் தந்துள்ள சைவ சித்தாந்த பதிகங்கள் பக்தி இலக்கியத் தின் மைல் கல்லாகும். குரவர் எனும் சொல்லுக்கு சைவ சமய பாதுகாவலராய பரம்பரை அல்லது வாரிசு என்பது பொருள்.

இவர்களுள் அகச் சந்தானம் புறச் சந்தானம் என இருவகையினர் உளர்.

மெய்கண்டதேவர் அருளிய சிவஞான போதம் மெய்கண்ட சிவாசாரிய சுவாமிகள் பாடித் தந்துள்ள சிவஞான சித்தியார் மறை ஞான சம்பந்தர் பாடியுதவியுள்ள திருக் களிற்றுப்படியார், உமாபதி சிவாச்சாரியார் பாடித் தந்துள்ள "சித்தாந்த அட்டகம்" எனப் படும் திருவருட்பயன் முதலான எட்டு நூல்கள் பக்தி இலக்கியத்தின் ஒளி விளக்காகும்.

ஆழ்வார்கள் அருளித் தந்துள்ள நாலாயிரம் திவ்விய பிரபந்தங்கள், ஆண்டாள் பாடியுள்ள ஆண்டாள் பாவை, வைஸ்ணவ அடியவர்கள் பெற்றுள்ள பக்தி இலக்கிய பொக்கிஷமாகும். ஆண்டாள் கண்ணனைத் தன் நாயகனாக வரித்து பாடியுள்ள 30 பாடல் களும் பக்தி இலக்கியமாகப் பரிணமிக்கின் றன. இவை விஷ்ணு பக்தர்களின் ஒழுக்க நெறிகளையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

அருணகிரிநாத சுவாமிகள் முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள தலங்கள்தோறும் சென்று பாடியுள்ள சந்தத் திருப்புகழ் செவி நுகர் கனிகளாக பக்தி இலக்கியமாகவே மிளிர்கின்றன.

சுதந்திரதாகம் கொண்ட வரகவி சுப்பிரமணிய பாரதியார் பக்தி இலக்கியமும் பாடித் தந்துள்ளார் என்பது பலர் அறிந்த

*சொல்லிய வார்த்தைக்கு நீ அடிமை, சொல்லாத வார்த்தை உனக்கு அடிமை.*

உண்மை. "கணபதிராயன் அவனிருதாளைப் பிடித்திடுவோம். குணமுயர்ந்திடவே விடுதலை கோரி மகிழ்ந்திடுவோம்" என்றும் "வெற்றி வடிவேலன் அவனுடை வீரத்தினை புகழ் வோம். சுற்றி நில்லாபோ பகையே துள்ளி வருகுது வேல்" எனவும் "நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறி வதுண்டோ? சொல்லடி சிவசக்தி சுடர்விடும் எனை இங்கு படைத்து விட்டாய்" என்று வியந்து பாடிப் பரவசமாக நின்று பக்தி இலக் கியத்துக்கு மெருகூட்டுகின்றார். அத்தோடு புதுச்சேரிக் குளத்தங்கரைப் பிள்ளையார்மீது பக்தி இலக்கிய மாலையே நூலுருவில் அமைத்து அணி செய்துள்ளார்.

பண்டைய சைவத்தமிழ் இலக்கியப் பரப்பில் பத்துப்பாட்டு எட்டுத்தொகை, பதினெண் கணக்கு நூல்களும் ஐம்பெருங் காப்பியம், ஐந்து சிறுகாப்பியம் என்பனவும் பக்தி இலக்கியத்திற்கு ஒளியூட்டுகின்றன. பத்துப் பாட்டில் திருமுருகாற்றுப்படை முதல் பத்துப் பாடல்களும், எட்டுத் தொகையில் கலித் தொகை முதல் எட்டு நூல்களும், பதினெண் கீழ்க்கணக்கில் நற்றிணை முதல் 18 நூல் களும் உள்ளன.

திருமுருகாற்றுப்படை தமிழ்ச் சங்கத் தின் தலைமைப் புலவராயிருந்த நக்கீர தேவனாரினால் பாடப்பெற்றது. ஆற்றுப்படை என்பது வழிப்படுத்துவது, ஆட்படுத்துவது என்பது பொருள். முருகனிடத்து ஆன்மாவை ஐக்கியப்படுத்துவதாகும். நக்கீரதேவர் உல கையே முதலாகக் கொண்டு "உலகம் உவப்ப வனேர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு" என்று ஆரம்பிக்கிறார். திருச்சீரலைவாய் திருப்பரங் குன்று ஆகிய ஆறுபடை வீடுகளையும் பாடி பக்தி இலக்கியத்துக்கு மெருகூட்டுகின்றார். இதன் பெருமையை உணர்ந்த நல்லை நாவ லர் பெருமான் மிகச் சிறந்த உரையெழுதி வெளியீடு செய்துள்ளார்.

குழந்தைக் கவிஞர் அளவள்ளியப்பா, டி.கே.சி; வி. கல்யாணசுந்தரனார் போன்றவர் கள் பக்தி இலக்கிய ரசிகர்களாவர். கி.வா.ஜ எனும் ஜகநாத ஐயா அவர்கள் பக்தி இலக் கிய வளர்ச்சிக்காகக் "கலைமகள்" எனும் நாமம் பூண்ட மாத சஞ்சிகை வெளியிட்டு வந்தார்கள். அவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்து நீர்வை கந்தசுவாமி கோவிலின் பிரதம குரு இராசுக்குருக்களின் இல்லத்தில் தங்கும் காலங்களில் சிறுவனாக இருந்த நான் அன்னாரிடமிருந்து பக்தி இலக்கியம் பற்றிய அரிய பல தத்துவங்களைக் கற்றுக் கொண்ட வன். கண்ணதாசன் பாடித் தந்த "யேசு காவி யம்" பக்தியின் உச்சமெனலாம்.

வடமொழிப் புலவர் காளிதாசர் பாடித் தந்துள்ள "கனகதாராவும் குமரகுருபர சுவாமி கள் மொகலாயரிடம் உதவி வேண்டிப் பாடித் தந்துள்ள "சகலகலாவல்லிமாலை"யும் "சட கோபர் அந்தாதியும்" பக்தி இலக்கியத்தின் திறவுகோல்களாகும். கம்ப நாடாழ்வார் பாடி யுள்ள அந்தாதிமூலம் "மன்னர் செங்கோல் பெரும் சிறப்பினைப் பெறுவது காராளர் ஏர் அடிக்கும்சிறு கோலினால் (சவுக்கு) என்று பக்தி இலக்கியம் வாயிலாக உழவுத் தொழி லின் உயர்வையும் செங்கோலாட்சியின் மகிமை யையும் எடுத்தியம்புகின்றார். திருக்குறள், சிலப்பதிகாரம் மற்றும் தனிப் பாடல்கள் யாவும் பக்தி இலக்கியத்துக்கு அழகு சேர்ப்பன வாகும்.

எமது ஈழ நாட்டிலும் பக்தி இலக் கியத்திற்கு வலுவூட்டிய பாவலர்கள் பலருளர். சேனாதிராச முதலியார், அவர் தந்தை செந்தில் நாத முதலியார், ஆறுமுகநாவலர், சின்னத் தம்பிப் புலவர், அவர் தந்தை வில்லவராய முதலியார், சரவணமுத்துப் புலவர், வித்து வான் கணேசையா, சபாபதி நாவலர், வினாசித் தம்பிப் புலவர் ஆகியோர் வடபுலத்தை வளமாக்கியவர். கடல் கடந்த நாடுகளுக்கும்

*மனிதன் சிரிப்பது மற்றவர்களைப் பார்த்து, அவன் அழுவது தன்னைப் பார்த்து.*

சென்று பக்தி இலக்கியம் பரப்பியோர், கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோராவர். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்கள் பக்தி இலக்கியத்தின் பரம்பரையாளர். நாமெல்லாம் அப்பெரியவரின் வாரிசுதாரரேயாம். நவாலியூர் சோமசுந்தரப் புலவர், மட்டுவில் மகாலிங்கசிவம் என்போரும் பக்தி இலக்கிய முன்னோடிகளாவர். மணிஐயா என அழைக்கப்படும் நல்லை ஆதீன முதலாவது குருமகா சந்நிதானமும் இரண்டாவது குருமகா சந்நிதானமாகத் திகழும் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் பக்தி இலக்கியம் பரவ வித்திட்டவராவர். எமது சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளும் "ஞானச்சுடர்" வாயிலாகப் பக்தி இலக்கியம் மிளிர வைத்துள்ளார்கள். சகோதரி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் கூறுவது போன்று திருமுறை பாடிப் பணிவோம். இராமலிங்கம் பாடியுள்ள நாட்டுப் பாடல்களும் நகைச்சுவையான பக்தி இலக்கிய வித்துக்களேயாகும்.

கிழக்கு இலங்கையிலே விபுலானந்த அடிகளார் பக்தி இலக்கியத்தின் பரம்பொருள் எனலாம். அவர்கள் பாடித்தந்துள்ள வெள்ளைக் காகம் மற்றும் மதங்கசூடாமணியாகிய நூல்கள் பக்தி இலக்கியத்தின் பண்பாடாகும். அருணாசலப் புலவர் மற்றும் பெரிய தம்பிப் புலவர் ஆகியோரும் இன்னும் பலரும் பக்தி இலக்கியத்திற்கு ஒளியூட்டியுள்ளனர். இவற்றை ஓதியுணர்ந்து நல்லொழுக்கமுடையவராகவும் நல்லவராகவும் வல்லவராகவும் வாழ்வோமாக.

**"வாழ்க செந்தமிழ்; வளர்க பக்தி இலக்கியம்"**

## நம்பினோர் கெடுவதில்லை

வெயிலிற் செல்பவனுக்குத்தான் நிழலின் அருமை தெரியும். நல்ல பசியுடன் இருப்பவன் உணவை மகிழ்வுடன் சாப்பிடுவதுபோலப் பசியில்லாதவன் சாப்பிடுவதில்லை.

எல்லா முயற்சிகளையும் செய்து சிரமத்திற்கு ஆளானபின்புதான் எமக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்றிருக்கின்றது எனும் மனநிலை ஏற்பட்டு அந்த சக்தியைத் தேடி மனம் நாடிச் செல்கின்றது.

இயன்றவரை முயற்சிகள் எல்லாம் செய்து கடைசியிற்றான், தெய்வசக்தியாற்றான் தன் காரியம் நிறைவேறியது என்பதை மனிதன் முடிவு செய்கிறான்.

கல்வியிலும் மாணவர்கள் சோதனையிற் சித்தியடையக் காத்திருப்பதுபோல மக்களும் இறையருளைப் பெறக் காத்திருக்கவேண்டும். இறையருளைப் பெறக் காத்திருக்கும் காலத்திலே நன்முயற்சிகளைச் செய்ய வேண்டும். அந்த நன்முயற்சிகள்தான் திருவினையாக்கும்.

ஆறறிவு பெற்ற மனிதர்களுக்கும்; குறைவான அறிவுபெற்ற விலங்கினங்களுக்கும் இடையேயுள்ள பெருத்த வேறுபாடு தெய்வத்தை அறியக்கூடிய இயல்பு உள்ளமைதான். மனிதனுடைய உண்மையான சக்தியானது ஆத்மபலம்தான். இது எல்லோரிடமும் இருந்தாலும் எல்லோரும் இதனை நன்கு வளர்த்துக்கொள்வதில்லை. மனிதராகப் பிறந்தோர் யாவரும் ஆத்மபலமிக்கவர்களாகத் தம்மை நெறிப்படுத்த வேண்டும். அப்படி நெறிப்படுத்திக்கொண்டால் "அவனின்றி அணுவும் அசையாது" எனும் பேருண்மையை தத்தம் இதயத்திலிருத்தித் தாமும் நல்வாழ்வு வாழ்ந்து பிறரும் நலம் வாழ வழிகாணலாமன்றோ. எனவே நான்குமறைத் தீர்ப்பான "நம்பினோர் கெடுவதில்லை" எனும் நல் நம்பிக்கையை மனத்திலே இருத்தி நாமும் நல்வாழ்வு கண்டு மற்றோரையும் நன்னெறிப்படுத்துவோமாக.

-நீர்வைமணி-

*உண்மையை உனக்குச் சொல்லித் தரும் ஆசிரியன் உன் வீட்டுக்குள்ளேயே இருக்கிறான்.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

### 08. ஆனந்தத்தழுந்தல்

**இறைவனது பேரின்பத்தில் முழுகி நிற்றல்**

**எழுசீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்**

75 புணர்ப்ப தொக்க எந்தையென்னை யாண்டுபூண நோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்ற போது நின்னொ டென்னொ டென்னிதாம்
புணர்ப்ப தாக அன்றி தாக அன்பு நின்க ழற்கணே
புணர்ப்ப தாக அங்க ணாள புங்க மான போகமே.

**ப-ரை:**

எந்தை- என் தந்தையே; புணர்ப்பது ஒக்க என்னை ஆண்டு பூண நோக்கினாய்- என்னை நின்னொடு இயைவிப்பதாகிய பக்குவகாலம் ஒத்துவர அதனால் நீ என்னை வலிய வந்து ஆட்கொண்டு நான் அடிமைத் தொண்டு பூணும்படி திருவருட் பார்வை நல்கினாய்; இது புணர்ப்பது அன்று என்றபோது- இந்தப் பக்குவகாலம் நின்னொடு என்னை அத்துவிதமாகச் சேர்ப்பதற்குரியதன்று என்று திருவுள்ளங் கொண்டு என்னை நீ பிரிந்தபொழுது; நின்னொடு என்னோடு இது என்னாம்- நின்னொடும் என்னொடும் உள்ள இத்தொடர்பு யாதாகும்? அங்கணாள- கண்ணோட்டமுடையவனே; இது புணர்ப்பதாக அன்றாக- இக்காலம் என்னை நின்னொடு இயைவிப்பதாகுக, அல்லதாகுக; நின் கழல்கண் அன்பு- நின் திருவடிக்கணுள்ள என் மெய்யன்பு; புங்கமான போகம் புணர்ப்பதாக உயர்ந்த சிவானந்த போகத்தை இயைவிப்பதாக.

எந்தையே, என்னை நின்னொடு இயைவிப்பதாகிய பக்குவம் ஒத்துவர அதனால் நீ என்னை வலியவந்து ஆட்கொண்டது யான் அடிமைத் தொண்டு பூண நோக்கினாய்; இக்காலம் நின்னொடு என்னை அத்துவிதமாய் இயைவிப்பதற்குரியதன்று என்று திருவுளங் கொண்டு என்னை நீ பிரிந்தபொழுது நின்னோடும் என்னோடுமுள்ள இத்தொடர்பு யாதாகும்? அங்கணாள, இக்காலம் என்னை நின்னொடு இயைவிப்பதாக அல்லதாகுக. நின் திருவடிக்கணுள்ள மெய்யன்பு நின் உயர்ந்த சிவானந்த போகத்தை இயைவிப்பதாக அருள் செய்யவேண்டும் என்பதாம்.

புணர்ப்ப தொக்க என்புழி புணர்ப்பது என்றது அடிகளைத் திருவருட்பேற்றில் இயைவிக்கும் பக்குவ காலத்தைக் குறித்தது. என்னை ஆண்டு பூணநோக்கினாய் எனக் கூறினும் என்னை நோக்கி ஆண்டு பூணவைத்தாய் என்பது பொருளாகக் கொள்க. "குரம்பையிற் புகப்பெய்து நோக்கி.... யாண்டு தன்னடியரிற் கூட்டிய அதிசயம்" (அதிசயம் 8) "மருளனேன் மனத்தை

*நமது புத்திசாலித்தனத்தை எப்படி மறைத்துக்கொள்வது என்பதே பெரிய புத்திசாலித்தனம்.*

மயக்கற நோக்கி மறுமையோடிம்மையுங் கெடுத்த பொருளனே" (அருட்9) என வருவன காண்க. நோக்குதல் ஈண்டு நயன தீக்கையைக் குறித்தது.

புணர்ப்பதன்றிது என்புழி இது என்றது நோக்கி ஆண்டு பூண வைத்த காலத்தைக் குறித்தது. புணர்ப்பது அன்று என்றபோது என்றது ஆட்கொண்ட இக்காலம் உடனே கதியைச் சேர்ப்பதற்குரியது அன்று என்று திருவுள்ளங் கொண்டு "நலமலி தில்லையுட் கோலமார் தருபொதுவினில் வருக" எனப் பணித்து நீங்கியபோது என்றவாறு.

நின்னொடு என்னொடு இது என்னாம் என்பதில், நினக்கு என்னொடு என், நின்னொடு எனக்கு என்னென ஒடுஉருபு ஒன்றை நான்காவதாக்குக. நின்னொடு என்னொடு உளதாகிய தொடர்பு என்னை நின்னொடு உடனே இயைவியாமையின் யாது பயனுடைத்தாம் என்பார் இது என்னாம்? என்றார். இறைவனால் அடிகள் ஆட்கொள்ளப்பட்டும் உடனே அடிகள் கதியடையாமைக்கேது பிராரத்த கன்மம் அநுபவித்து முடிவு பெறாமையாகும்.

இது புணர்ப்பதாக அன்றாக என்றது நின்னொடு என்னைப் புணர்ப்பதாகிய இப்பக்குவகாலம் என்னை நின்னொடு புணர்ப்பதாயினும் புணர்க்க; அன்றி ஒழியினும் ஒழிக; அதுபற்றி யான் கவலேன் என்றவாறு. நின் கழற்கண் அன்பு புங்கமான போகம் புணர்ப்பதாக என்றது, நின் திருவடிக்கணுள்ள மெய்யன்பு உயர்ந்த சிவானந்த போகத்தை இயைவிப்பதாக அருள் செய்யவேண்டும் என்றவாறு.

"கழற்கண் அன்பு", "அடியேன் நின் பூங்கழல்கள் அவையல்லா எவை யாதும் புகழேன்" (புலம்1) "தென்னன் வார் கழலே நினைந்து" (தென்15) "கழற்போதிறைஞ்சி" (பாண்டிப்1) என்பவற்றாலுமறிக. அங்க ணாளன்- கண்ணோட்டமுடையவன் என நச்சினார்க்கினியார் உரைத்தமையுங் காண்க. இறைவன் அங்கண்மை, "அரக்கனை யடர்த்தவன் இசைக்கினிது நல்கியருள் அங்கணன்" "நேசமின் மனச் சமணர் தேரர் கணிரந்த மொழி பொய்கள் அகல்வித் தாசை கொள் மனத்தை அடியாரவர் தமக்கருளும் அங்கணன்" (ஞான 336:8; 337:10) எனத் தேவாரத்து வருவனவற்றாலுமறிக. புங்கம்- உயர்ச்சி. தி-25.

"அம்புக்குதைதுகில் உயர்ச்சியும் புங்கம்" (பிங் 10:819) என வருதல் காண்க. புங்கமான போகம்- உயர்ந்த போகம்; உயர்ச்சி ஒப்பின்மையும் அழிவின்மையும் பற்றியாகும். போகம் என்றது சிவானந்த போகத்தை "உணர்வி னேர் பெற வருஞ் சிவபோகம்" (சம்பந் 161) எனப் பெரியபுராணத்து வருதலுங் காண்க.

இதன்கண் "புங்கமான போகம் புணர்ப்பதாக" என்றதனால் ஆனந்தத்தழுந்தல் என்னும் எட்டாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 71.

76 போகம் வேண்டி வேண்டி லேன்பு ரந்த ராதி இன்பமும்
ஏக நின்க ழலி ணைய லாதி லேனென் எம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி அஞ்ச லிக்கணே
ஆக என்கை கண்கள் தாரை ஆற தாக ஐயனே.

**ப-ரை:**

ஏக- ஒருவனே; என் எம்பிரான்- என்னுடைய எம்பிரானே; ஐயனே- ஞானாசாரியனே; போகம் வேண்டி- சிவானந்த போகத்தை விரும்புதலால்; புரந்தரன் ஆதி இன்பமும் வேண்டிலேன்-

*மனச்சாட்சி இறப்பரைப் போன்றது. அதை வளைக்கலாம் ஆனால் ஒடிக்க முடியாது.*

இந்திரன் முதலிய இறையவர் பதவிக்குரிய இன்பங்களையும் விரும்புகின்றிலேன்; நின் கழல் இணை அலாது இலேன்- நின் திருவடி கள் இரண்டும் அல்லாது வேறொரு பற்றுக் கோடும் இல்லேன்; ஆகம் விண்டு கம்பம் வந்து- மனம் விரிந்து நெகிழவும் உடல் நடுங்கவும்; என் அஞ்சலி கை குஞ்சிக் கண்ணே ஆக- எனது குவிந்த கைகள் சிரசின்கண்ணே பொருந்தவும்; கண்கள் தாரை ஆறது ஆக- கண்களிலிருந்து ஒழுகும் ஆனந்த நீர் ஒழுக்கு ஆறாகப் பெருகவும் அருளுக.

ஏக, என் எம்பிரான், ஐயனே, சிவ போகத்தை விரும்புதலால் இந்திரன் முதலிய இறையவர் பதங்களுக்குரிய இன்பங்களையும் விரும்புகின்றிலேன்; நின் திருவடிகள் இரண்டு மல்லாது வேறொரு பற்றுக்கோடும் இல்லேன்; மனம் விரிந்து நெகிழ உடல் நடுங்க என் அஞ்சலிக்கை சிரசின் கண்ணே பொருந்தவும், கண்களினின்று ஒழுகும் ஆனந்த நீர் ஒழுக்கு ஆறாகப் பெருகவும் அருளுக என்பதாம்.

போகமென்பது சிவானந்த போகத்தை, இதனையே அடிகள் விரும்பியமை, "அன்பு நின்கழற்கணே புணர்ப்பதாக அங்கணாள புங்கமான போகமே" (சத7) என அருளியமை யாலுமறிக. போகம் வேண்டி என்புழி வேண்டி என்னும் செய்தெனெச்சம் ஏதுப் பொருளில் வந்தது. தேவர்களின் பதங்கள் பலவற்றுள் ளும் இந்திரபதத்தால் வரும் இன்பம் சிறந்த தாதலின் புரந்தராதி இன்பமும் என்றார். புரந்தராதி என்பது வடநூன் முடிவு. இன்பமும் என்புழி உம்மை சிறப்புப் பொருளில் வந்தது. இந்திரன் முதலிய தேவர்களுக்குரிய இன்பங் களிலும் சிவானந்த போகமே சிறந்ததாதலின் "போகம்வேண்டி வேண்டிலேன் புரந்தராதி இன்பமும்" என்றார். "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு" (சத2) எனவும், "வேண்டேன் மண்ணும் விண்ணும்" (உயிருண்ணி7) எனவும் வருவனவும் ஈண்டறியற்பாலன. ஏகன்- ஒருவன். "ஏக பெருந்தகையாய பெம்மான் (ஞான 4:4) "எந்தையே ஏகமூர்த்தி" (நாவு 41-4) என்று வருவன காண்க. இறைவனை ஏகன் என்றது ஒப்பொருவனில்லாதவனாதலின் "ஒப்பிலா ஒருவன்", "ஒப்பொருவர் இல்லாத ஒருவன்" (நாவு 239:4; 246:9) எனத் தேவாரத்தும் வருவன காண்க, "கழலிணையலாது இலேன்" என்றது நின் கழலிணையே பற்றுக்கோடன்றி வேறொரு பற்றுக்கோடு இல்லேன் என்றவாறு, "போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை" (சத62) எனவும் "பொருளே தமியேன் புகலிடமே" (நீத்17) எனவும் அடிகள் அருளி யமை காண்க. இனி நின் திருவடிகளின் மேற் பற்றல்லது வேறொரு பற்று உடையே னல்லேன் எனினுமாம். செப்பரிய பெருஞ் சீரத் திச் சிவனார் செய்ய கழல் பற்றி எப்பற்றினையு மற வெறிவார் (பெரிய: விறன்மிண்ட4) என வருதல் காண்க. "செய் பரிவு நீங்கி" (சீவக 1737) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. இறைவனை அகநெகிழ்ந்து இறைஞ்சுங்கால் உடலும் நடுங்குதலின் "ஆகம் விண்டு கம்பம் வந்து" என்றார். "மெய்ம் முழுதுங் கம்பித் தழுமடியாரிடை" (நீத்27) என அடிகள் அருளி யமையுங் காண்க. விண்டு, வந்து என்னும் செய்தெனச்சங்களைச் செயவெனெச்சமாகக் கொள்க. என் அஞ்சலிக்கை குஞ்சிக்கண்ணே ஆக என மாறிக் கூட்டிப் பொருள்கொள்க. குஞ்சி ஆண்மான் மயிர் "குஞ்சி பித்தை யோரி ஆண் மான் மயிர்" (பிங் 5.339) அஞ்சலி என்றது இரண்டு கையும் பதாகையாய் அக மொன்றுவது என்பர் அடியார்க்கு நல்லார் (சிலப்பதி 3:18 உரை). அஞ்சலிக்கணே என் பதற்குத் தொழுதலின் கண்ணே என்பதற்குத் தொழுதலின் கண்ணே எனினுமாம். அஞ்சலி

*காரணமில்லாது கோபம் வராது. ஆனால் அந்தக் காரணம் நியாயமாய் இருப்பதுதான் அபூர்வம்.*

தொழுதல் என்னும் பொருட்டாதல், "தொழு தலும் வாவற் பறவையும் அஞ்சலி" எனப் பிங்கலந்தையில் (10:13) வருதலுங் காண்க. தாரை நீரொழுக்கு; அருளவேண்டும் என்பது அவாய் நிலையான் வருவிக்கப்பட்டது. இதன்கண், ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி அஞ்சலிக்கணே ஆக எனவும், கண்கள் தாரை ஆறதாக எனவும் வேண்டிக் கொள்ளு தலால் ஆனந்தத்தழுந்தல் என்னும் எட்டாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க.71.

(தொடரும்...

## கடமை முடிந்தாலே கடவுளிடம் செல்லமுடியும்

பரமாத்மாவிலிருந்து சீவாத்மா வேறானதொன்றல்ல. இரண்டுமே ஒன்றுதான். நீயே அது. அதுவே நீ. நான் என்பது உள்ளிருக்கும் இறைவனே என்று உணர்ந்துவிட்டால், நாம் அனைவருமே சுமையின்றி இலேசாகிவிடுவோம். நாமோ அதற்கு மாறாக இறைவனை அகற்றிவிட்டு ஆணவத்தை ராஜமரியாதையோடு குடியமர்த்திவிட்டோம். இதனால் உலகம் நான் என்ற இராஜ்ஜியத்தில் அல்லல்பட்டு, அவதிப்பட்டு, அவமானப்பட்டு, அலைக்கழிக் கப்பட்டு, ஆபத்தினை எதிர்நோக்கியுள்ளது. அது விடுதலைக்காகப் போராடுகிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவனால் கடமைகள் தரப்பட்டுள்ளன. அந்தக் கடமையை யார் எப்போது செய்து முடிக்கிறார்களோ அப்போதே மீண்டும் கடவுளிடம் சென்று விடுகிறார்கள்.

ஆதலால் கடமை முடிந்தவர்கள் வந்தவேலையை முடித்துக்கொண்டு சீக்கிரம் போய்விடுகிறார்கள். தரப்பட்டவேலையை ஒழுங்காக முடிக்காதவர்கள் இங்கிருந்தவாறே நீடித்த ஆயுளைக் கொண்டாடுகிறார்கள். ஆசைக்கு வயது நூறு.

**கடமை:**

கடமையிலிருப்பவர்கள் அற்ப சொற்ப சலுகைகளுக்காகவும், பட்டம், பதவி, மாலை, மரியாதைகளுக்காகவும், போலி கௌரவத்திற்காகவும் சேவை புரிபவர்களாக இருந்தால், அந்தப் பெரிய அருட்பெருங்கடலாகிய ஆண்டவனை அடையவே முடியாது. எப்போது சுயநலமின்றி ஆசையானது எம்மைவிட்டு முற்றாக நீங்குகின்றதோ அப்போதுதான் இறைவனும் எங்களது கையைப் பிடித்து தன்னிடம் கூட்டிச் செல்வான். இறைவனையும் பார்த்துப் பசியாறலாம். இந்தப்பேறு எல்லோருக்கும் கிடைக்கும். ஆனால் மண்ணாசை, மதுஆசை, மனை ஆசை, பெண்ணாசை, பதவி ஆசை, மாலை மரியாதை ஆசை, பிறன்மனை ஆசை, மத ஆசை, இன ஆசை, அரசியல் ஆசை, கொலைவெறி இவை அத்தனையும் எப்போது எம் மனதிலிருந்து அறவே நீங்குகிறதோ அந்த நிமிடமே இறைவனிடம் சென்று சேரலாம். இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

-கே.எஸ். சிவஞானராஜா-

*வாக்குறுதி ஒரு நிலவு போன்றது. உடனே நிறைவேற்று. அல்லது தேய்ந்துவிடும்.*

# சீர்குலையும் சமய விழுமியங்கள்

– **செல்வி ச. சரணியா** அவர்கள் –

**அறிமுகம்:**

"ஹிம்சாயாம் தூயவே யஸ்ஸ
ஹிந்துரித்ய பித்யதே!"

என்ற அடிகள் பிற உயிர் வருந்துவதைக்கண்டு எவன் துன்பப்படுகின்றானோ அவன் இந்து. அந்தளவிற்கு எமது சமயம் கூறும் விழுமியங்கள் மனிதனை மனிதனாக வாழ வழி வகுக்கின்றன.

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது". இத்தகைய சிறப்புப் பொருந்திய மானிடப் பிறப்பை பெற்ற நாம் மானிடராய்த்தான் வாழ்கிறோமோ? என்று ஒரு கணம் சிந்தித்துக்கொள்வோம்.

இந்துவாகிய நாம் எமது சமயம் கூறும் விழுமியத்தின் தாற்பரியங்களின் வழி செல்லாது அதன் அழிவுக்கு நாமே வழிவகுக்கின்றோம் என்பதை அறிந்தும் அறியாமலும் செயற்படுகின்றோம். அவ்வாறு அறியாது நாம் செயற்படுவதை அலசி ஆராய்வதே எனது நோக்கம்.

மேலும் சமயம் என்றால் ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட நெறிக்கூடாக மனிதனைச் சிறந்த வாழ்க்கை முறைக்கு வழிப்படுத்தல் ஆகும். இவ்வாறு சிறந்த வாழ்க்கை முறைக்கு வழிப்படுத்தும் ஒழுக்க நடத்தைகள் "விழுமியங்கள்" எனப்படும். இத்தகைய சமய விழுமியங்கள் ஆலயத்தின் கோபுர கலசம் தொட்டு ஒவ்வொரு சமய நடத்தையிலும் பின்னிப்பிணைந்துள்ளது. இதனை அறியாது நாம் அதனைப் பின்பற்ற மறந்தும் மறுத்தும் வருந்துகின்றோம்.

**கோபம் பொறாமை கள்ளு**
**கொலை களவை எள்ளு**
**கூடிப்பாடியொரு சிவனடியாரோடு**

-சிவயோகர் வாக்கு.

என்று பஞ்சமா பாதகங்களையும் தீயகுணங்களான கோபம், பொறாமை என்பவற்றையும் விடுத்து மனதிலும் எமது நடத்தையிலும் சாந்தி நிலவ நாம் வாழவேண்டும் என்று எமது சமய விழுமியங்கள் பறைசாற்றுகின்றது. ஆனால் நாம் இவற்றை நினைக்கக்கூட மறுக்கின்றோம்.

அடுத்து எமது சடங்குகள் கூறும் சமய விழுமியங்களையும் அதன் உட்பொருளையும் அறியாதவராக இருக்கின்றோம். இவற்றை நவீன உலகம் மறைத்து வருகின்றது என்பது யாமறிந்த உண்மையே. பிறப்பு- இறப்புவரை 40 சடங்குகள் எமது வாழ்வியலில் கலந்துள்ளது. ஆனால் இன்று அச்சடங்குகள் பாரம்பரிய நோக்கங்களிலிருந்து விலகிச் செல்வதும் சடங்குகளின் தாற்பரியம் கைவிடப்பட்டு சடங்குகள் ஆடம்பர கேளிக்கை பொருந்தியதாகவும் சமய விழுமியங்களை கருத்தில் கொள்ளாது களங்கப்படுத்தி வளர்கின்றது.

மேலும் உண்மையைக் கண்டறிவது அறிவியல் எனப்படும். அத்தகைய அறிவியல் எமது சமய விழுமியங்களில் இணைந்துள்ளது. இதனை அறிவியலாளரான ஐன்ஸ்ரெயின், "சமயம் இல்லாத அறிவியல் முடமானது, அறிவியல் இல்லாத சமயம் குருடானது" என்று கூறுகிறார். எமது சமய விழுமியங்கள் அனைத்திலும் அறிவியல் இரண்டறக் கலந்துள்ளது. தியானம், வைத்தியக்கலை, ஜோதிடம், ஏழு வகை பிறப்புக்கள் போன்ற அனைத்து சமய

விழுமியங்களும் அறிவியலையும்; விஞ்ஞான நோக்கினையும் இணைந்ததாகவே காணப் படுகின்றது. சான்றாக,

"புல்லாகி பூடாய் புழுவாய் மரமாகி
பல்மிருகமாகி பறவையாய் பாம்பாகி..."
(சிவபுராணம் வரி 26-31)

இதே உயிர் பற்றி அறிவியல் ரீதியாக விஞ்ஞானிகள் ஆராய்ந்து பல கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இவர்களுள் ரஷ்ய விஞ் ஞானி லியோ ஷனீடர், அமெரிக்க விஞ்ஞானி கார்ல்சன் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இன்று இவர்கள் ஆராய்ந்து கண்டுகொண்ட கூர்ப்புமுறை எமது சமயம் என்றோ கண்டு கொண்ட உண்மை. ஆனால் இன்றைய நவீன உலகம், அனைத்தும் விஞ்ஞானம் நாட்டிய தூண்கள் என்று சமயவழி தோன்றிய விழுமியங் களை உடைத்து எறிவதும்; தெய்வீகத் தன்மை, பயபக்தி இன்றி மனித ஒழுக்கங்கள் சீர் நிற்பது இயலாத காரியம் என்பது எனது ஆணித்தரமான கருத்தாகும்.

மேலும் எமது சமய விழுமியங்களை எடுத்தாளுகின்ற ஆலயங்கள், சமய நிறுவனங் கள்தன்னில் சீரகுலைந்து வரும் சமய விழு மியங்கள் எத்தனையோ? இந்துக் கோயில் களையும் சமய நிறுவனங்களையும் நிர்வகிக் கும் தர்மகர்த்தாக்கள் சமூக மற்றும் சமயப் பொறுப்புடன் செயற்படவேண்டும். ஆனால் இன்று ஒழுக்கசீரகேடு, களவு, பொறாமை, போட்டித்தன்மை கொண்டவர்களாக இயங்கு கின்றனர். ஆலயங்கள், இன்று தொழில் மையமாக இயங்கிவருகின்றது. ஆடம்பரக் கட்டுமானமும் சிற்ப வேலைப்பாடுகளும் பொருத்தமற்றது.

இந்துசமய நோக்கமானது அரிய மானிடராக பிறப்பெடுத்து வீடுபேறடைவது ஆகும். இதற்கு ஆரோக்கியமான உடல் - உள்ளம் வேண்டும். அதற்கான வழிகளை மேற்கொள்வதில் ஆலயங்கள் முதன்மை பெற்று விளங்கவேண்டும். இங்கு மேற்கொள் ளப்படும் வழிபாட்டு முறைகளான அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம், தோப்புக்கரணம், அடிஅழித்தல், காவடி எடுத்தல் போன்ற அனைத்து வழிபாட்டு முறைகளும் அன்ன தானம் மற்றும் ஆலயங்களில் வழங்கப்படும் பால், பழம், பஞ்சாமிருதம், மோதகம், கடலை, கௌபி, பொங்கல் போன்ற அனைத்து பிர சாதங்களும் மனித உடல் உள நலனைப் பேணுகின்றன. ஆலய அமைப்பும் அது காட் டும் உட்பொருளும் அளப்பெரிய பொக்கிஷங் கள். ஆனால். இன்று அதன் தாற்பரியம் தெரியாமல் பொருளாதார நோக்கில் இயங்கி வருகின்றது. ஆனால் தொண்டைமானாறு செல் வச்சந்நிதியான் ஆலயம் போன்று விதிவிலக்கு ஆலயங்களும் உண்டு என்பதையும் நான் மறுக்கவில்லை.

"நீறில்லா நெற்றி பாழ்" என்ற வாக்கிற் கிணங்க சிவசின்னங்களான விபூதி, உருத் திராக்கம், பஞ்சாட்சரம் என்பன அனைத்தும் பல்வேறு உட்பொருளையும் உளவியல் விளக் கங்களையும் கொண்டுள்ளது. இதன் நன்மை புரியாது வெறுமனே சின்னங்களாக நோக்கு கின்றோம். இன்றைய நவீன காலத்தில் மதிப் பற்றுப் போகும் சிவசின்னங்களை எண்ணி வருந்தமட்டுமே முடிகின்றது.

இவ்வாறு அனைத்து சமய விழுமியங் களை விட்டொழித்து; அதன் உள்ளார்ந்த கருத்துக்களை உணராது; உணர முயற்சியும் செய்யாது முழுமையாக உணராத ஏனைய மதத்தவர் வசீகர வார்த்தைகளுக்கு அடிமைப் பட்டு மதம் மாறும் எமது இந்துக்களால் சமய விழுமியங்கள் சீரகுலைவது எக்காலத் திலும் தடுக்க முடியாத ஒன்றாக இருக்கின் றது. பல்வேறு நிலைகளுக்கு முகங்கொடுக்க முடியாது மேற்குலக நாடுகளுக்கு உயிர் தப்பி சென்றவர்கள் 60 வீதமானவர்கள் மதம் மாறிவிட்டார்கள். இவ்வாறு பல்வேறு

இடங்களிலும் விழுமியங்களினதும் சமய நோக்கத்தின் தாற்பரியத்தையும் அறிந்திராது இந்துவாகிய நாம் மதமாற்றம் என்ற வலையில் வீழ்ந்து அழிந்து வருகின்றோம். இருந்தாலும் பல்வேறு உலக நாடுகளில் வாழும் நம்மவர்களால் தழைத்தோங்கும் சமய விழுமியங்களை எண்ணி பெருமை கொள்கின்றேன். சான்றாக வேதங்களை மொழிபெயர்த்த மாக்ஸ்முல்லர் என்பவர் ஓர் கிறிஸ்தவர். இவர் ஜேர்மனிய நாட்டைச் சேர்ந்தவர்.

மேலும் சமய விழுமியங்களை உணர்ந்து தெய்வ பக்தி கொண்டு விழுமியங்களை கடைப்பிடித்து மானிடரிடையே தெய்வங்களாகவும் உலவி அருள்வாழ்வு வாழ்ந்த ஞானிகள், நாயன்மார்கள் சித்தர்கள் அறிந்த விழுமியங்களை அதன் பெருந்தகைகளை ஏன் நாம் உணரமுடியாது உள்ளது? அதன் பரந்த தன்மையை நாம் உணராது உணர முயற்சி செய்யாது சீர்குலைகின்றோம். ஆனாலும் அதன் புகழ் இமய மலைகளிலும் பொதிகை மலையிலும் இன்றும் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. தொலைத்துக் கொண்டு இருக்கும் எமது சமய விழுமியங்களை மீண்டும் கட்டியெழுப்புவோம்.

**"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"**

என்ற தாயுமானவர் அடிகளுக்கு இணங்க எமது சமய விழுமியங்கள் வழி வாழ்ந்து இன்புற்ற பெரியார்களைப் போல் சீர்குலைக்கும் எமது அறியாமையை நீக்கி நாமும் அவ் இன்பத்தில் திழைப்போம். எமது சமய விழுமியங்கள் இனியும் சீர்குலையாது காவல் இட எண்ணும் எதிர்கால சித்தர்கள், ஞானிகளுக்கு என் கட்டுரை சமர்ப்பணம்.

**"நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினை என்றுஞ் சிவன்றாளினை"**

## பரிவு கொண்டருள்வான்

**பல்லவி**

நீல மயில் வாகனனை நீ வணங்கு!
நெஞ்சார அவனையிங்கு நீ நினைந்து! (நீல)

**அநுபல்லவி**

வேலவனோ துயர்தீர்ப்பான் வினைகளைந்து!
வேல்வடிவில் சந்நிதியில் வீற்றிருந்து! (நீல)

**சரணம்**

பிரணவப் பொருள்சொன்ன ஞானகுரு!
பிதாவுக்கே உபதேசம் செய்த குரு!
கரங் குவித் தவன் பாதம் தொழுதுவிடு!
காட்சி தந்து ஆட்சி செய்வான் கவலைவிடு!

தேவர்கள் குறைதீர்த்த திரு முருகன்!
தேசமெங்கும் கோவில் கொண்ட அருட்குமரன்!
பாவலரும் நாவலரும் போற்றும் அழகன்!
பரிவு கொண்டெமக்கருள்வான் கந்தன்! குகன்!

-கி. குலசேகரன்-

*மறதியின் உதவியால்த்தான் நாம் திரும்பவும் வாழப் பழகிக் கொள்கின்றோம்.*

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

[விரிவான பொருளுரையும் தெளிவுரையும்]



முனைவர் ஆ. ஆனந்தராசன்

## 89. வாசியிடை நிற்கை

ஆசின்ந வா நாப்பண் அடையாது அருளினால்
வாசி இடை நிற்கை வழக்கு.

### பொருள்:

திரோதானத்தைக் குறிப்பதாகிய நகாரத்திற்கும் அருளைக் குறிப்பதாகிய வகாரத்திற்கும் இடையே ஆன்ம எழுத்தாகிய யகாரம் நில்லாமல், அவ்வகாரத்திற்கும் சிவத்தைக் குறிப்பதாகிய சிகாரத்திற்கும் இடையில் நிற்றலே முத்தி முறைமையாகும்.

### சொற்பொருள்:

ஆசின்- ஆணவ மலத்தின் வாசனை காரணமாக, ந- திரோதானத்தைக் குறிப்பதாகிய நகாரத்திற்கும், வா- அருளைக் குறிப்பதாகிய வகாரத்திற்கும், நாப்பண்- இடையில், அடையாது- (ஆன்ம எழுத்தாகிய யகாரம்) நில்லாமல், அருளினால்- அருளின் துணையினால், வா- அவ்வருளைக் குறிப்பதாகிய வகாரத்திற்கும், சி- சிவத்தைக் குறிப்பதாகிய சிகாரத்திற்கும், இடை- இடையில், நிற்கை- நிற்றலே, வழக்கு- முத்தி முறைமையாகும்.

### விளக்கம்:

**விலக்குதல்:**

சிவாய நம எனத் திருவைந்தெழுத்தைச் சிகாரம் முதலாக வைத்து ஓதும்பொழுது ஆன்ம எழுத்தாகிய யகாரம் நகாரத்திற்கும் வகாரத்திற்கும் இடையே நிற்கிறது. அது வேண்டா என இங்கு விலக்கப்பட்டது. அவ்வாறு விலக்குவதற்கான காரணம் அறியத்தக்கது.

**விலக்குதற்குக் காரணம்:**

நகாரம் சகல நிலையைக் குறிக்கும் என்பதும் வகாரம் அருள்நிலையைக் குறிக்கும் என்பதும் நாமறிந்தது. சகல நிலை என்பது பாச ஞானம் விளங்கும் நிலையாகும். அருள்நிலை

*எரிச்சல் தூவப்பட்டால் அவை எதிர்ப்பு மரங்களாக முளைக்கும்.*

என்பது பதி ஞானம் விளங்கும் நிலையாகும். சகல நிலை, அருள்நிலை என்னும் இவ்விரண்டிற்கும் இடைப்பட்டது பசு ஞான நிலையாகும். அஃதாவது, பசுவாகிய தன்னையே பெரும் பொருளாகக் கருதி "நான் முதல் என உணர்வதும்" "நான் சிவனுக்குச் சமம்" என உணர்வதும் ஆகிய நிலையே பசு ஞான நிலையாகும், இவ்வாறு உணர்வது உண்மையுணர்வு ஆகாது. இது பதி ஞானத்தை உணர்வதற்கு முன்னே தோன்றுகிற ஓர் இடைப்பட்ட அனுபவ நிலையாகும். இப்பசு ஞானம் நீக்குதற்குரிய நிலையாதலின் "யகாரம் ந வா நாப்பண் அடைய வேண்டா" என விலக்கப்பட்டது.

**ஆணவ மலத்தின் வாசனை:**

ஞான நெறியிற் செல்லுங் காலத்தில் உயிர் கருவி கரணங்களைத் தன்னின் வேறாகக் கண்டு அவற்றால் வரும் பாச ஞானத்தினின்று நீங்கினாலும், ஆணவ மலத்தின் வாசனை காரணமாகப் பதி ஞானமாகிய திருவருளை உணராது நிற்கும். அம்மல வாசனை உயிருக்கு நான் என்னும் செருக்கினை உண்டாக்கி மேற்கூறியவாறு "நான்முதல்", "நான் சிவசமம்" என்னும் பசு ஞான நிலைகளை அடைவிக்கும்.

இதனால், ந வா நாப்பண் அடைதல் என்பது பசு ஞான நிலை என்பதும், அந்நிலையை அடைதற்குக் காரணமாக இருப்பது ஆணவ மலத்தின் வாசனை என்பதும் விளங்கும்.

ஆணவ மலத்தை "ஆசு" என்ற சொல்லால் குறிப்பிடும் வழக்கமுடையவர் நம் ஆசிரியர். இங்கு, ஆணவ மலத்தின் வாசனையை ஆசு எனக் குறிப்பிட்டார். ஆசின் என்பதற்கு ஆணவ மலத்தின் வாசனை காரணமாக என்பது பொருளாகும்.

**முத்தி பஞ்சாக்கரம்:**

இனி, இந்தப் பசு ஞான நிலை நீங்கி, முற்றிலும் திருவருள் வயப்பட்டு அடங்கி, அருள் நிலைக்கும் இன்புறு நிலைக்கும் இடையில் நிற்றலே முத்தி முறைமையாகும். இவ்வாறு அனுபவத்தில் நிற்கும் முறையையே வா சி இடை நிற்கை வழக்கு என ஓதும் முறையாகக் கூறினார் ஆசிரியர். யகாரத்தை வா, சி இவற்றின் இடையே நிற்க வைத்து உச்சரித்தல் வழக்கம் எனக் கூறப்பட்டது. இதனால், நகார மகாரங்கள் நீங்க நிற்கும் "சிவாய" என்னும் மூன்றெழுத்தே உச்சரித்தற்குரியது என்பது விளங்கும் இதனைச் "சிவாய சிவாய" எனத் திரும்பத் திரும்பக் கணிக்கும்போது யகாரம் வா, சி இவற்றிற்கு இடை நிற்பதாக ஆகின்றது. எனவே "சிவாய" என்னும் மூன்றெழுத்தே பாசம் நீங்கிய முத்தி பஞ்சாக்கரம் ஆகும். இதனை அதிசூக்கும பஞ்சாக்கரம் என்பர்.

இவ்வாறு இச்செய்யுளில், சிவாய நம எனச் சிகாரம் முதலாக ஓதினால் யகாரம் நகார வகாரங்களுக்கு இடையே நிற்கும் ஆதலால் அவ்வாறு ஓதுவதும் முத்தி முறைமை ஆகாது என விலக்கி, வாசி இவற்றிற்கு இடை நிற்க ஓதுதலே முத்தி பஞ்சாக்கரம் என்பது உணர்த்தப்பட்டது. இம் முத்தி பஞ்சாக்கரம் குருமுகமாக உபதேச முறையால் உணர்தற்கு உரியது.

*வெட்டிப்பேச்சு வேலையைக் கெடுக்கும். விடாமுயற்சி வெற்றியைக் கொடுக்கும்.*

**முரண்பாடு இல்லை:**

இங்கு ஓர் ஐயம் எழலாம். 87ஆம் செய்யுளில் சிகார வகாரங்கள் முன் நிற்கும்படி சிவாய நம என ஓதி நின்றால் பிறவி நீங்கும் எனக் கூறிய ஆசிரியர் இங்கு வேறு விதமாக, வாசி இடை நிற்க ஓதினால் பிறவி நீங்கும். முத்தியாகும் என்பதுபடக் கூறியுள்ளாரே. இது முன்னுக்குப்பின் முரணாக அல்லவா உள்ளது என்று கேட்கலாம். பார்ப்பதற்கு முரண்பாடு போலத் தோன்றினாலும் உண்மையில் இவ்விரண்டிற்கும் முரண்பாடு இல்லை என்பதை அறிதல் வேண்டும்.

ஒருவர் திருச்சியிலிருந்து நெல்லைக்குப் புறப்படுகிறார். தன்னுடைய வண்டியில் கிளம்புகிறார். நண்பர்களிடம் எப்படிப் போகவேண்டும் என்று கேட்கிறார். ஒரு நண்பர் மதுரை வழியாகப் போக வேண்டும் என்கிறார். மற்றொருவர் கோவில்பட்டி வழியாகப் போகவேண்டும் என்கிறார். இருவரும் இரு வேறு விதமாகக் கூறினாலும் அவர்கள் கூறியதில் முரண்பாடு இல்லை. இருவர் கூற்றும் சரியே. ஆனால், ஒரு வேறுபாடு உண்டு. கோவில்பட்டி நெல்லைக்கு நேர்வழியாகிறது. மதுரை அங்ஙனம் ஆகாமல் கோவில்பட்டிக்குச் செலுத்தி அம்முறையில் வழியாகிறது.

இதனைக் கருத்திற் கொண்டு பொருளுக்கு வருவோம். வாசியிடை நிற்க ஓதுதலே முத்தி பஞ்சாக்கரம் என மேலே அறிந்தோம். எனவே, அதுவே பிறவி நீங்குதற்கு நேரே வாயில் ஆகிறது என்பது தெளிவு. முன்னே (செ.87) சிவாய நம என ஓதி நின்றால் பாவம் தீரும் என ஆசிரியர் கூறியது பிறவி நீங்குதற்கு அது நேர் வாயிலாகிறது என்னும் கருத்தினால் அன்று. மதுரை நெல்லைக்கு நேர்முறையில் வழியாகாமல் கோவில்பட்டிக்குச் செலுத்துமுகமாக வழியாதல் போல, சிவாய நம என்னும் ஐந்தெழுத்து பிறவி நீங்குதற்கு நேரே வாயில் ஆகாமல், அதுவே சிவாய என்னும் மூன்றெழுத்தாகி அம் முத்தி பஞ்சாக்கரம் வழியாகவே பிறவி நீங்குதற்குக் காரணமாகிறது என்பதே கருத்தாகும். இதனால், சிவ முதலே ஆமாறு சேரு மேல் தீரும் பவம் என்று முன்னே குறிப்பிட்டது வழிமுறையால் வாயிலாதல் பற்றி என அறியலாம்.

### 90. நிலையால் பலவகைப்படுதல்

எல்லா வகையும் இயம்பும் இவன் அகன்று
நில்லா வகையை நினைந்து.

**பொருள்:**

ஆன்மா பாசத்தினின்றும் உடனே நீங்க மாட்டாமல் படி முறையிலே சிறிது சிறிதாகவே நீங்கும் இயல்புடையது. அதனைக் கருதியே ஆகமங்கள் திருவைந்தெழுத்தினை ஒரு படியாகக் கூறாமல் இங்ஙனம் படிமுறைக்கு ஏற்பப் பல வகையாக அமைத்துக் கூறுகின்றன.

**சொற்பொருள்:**

இவன்- ஆன்மா, அகன்று நில்லா வகையை- பாசத்தினின்றும் உடனே நீங்கமாட்டாத தன்மையை, நினைந்து- கருதியே, எல்லா வகையும்- திருவைந்தெழுத்தினைப் பல வகையாகவும், இயம்பும்- ஆகமங்கள் அமைத்துக் கூறும்.

*ஏமாற்றுவது கெட்டிக்காரத்தனமல்ல, பெரும் நம்பிக்கைத் துரோகம்.*

**விளக்கம்:**

**ஐந்தெழுத்தின் பல நிலைகள்:**

ஐந்தெழுத்து தூலம், சூக்குமம், அதிசூக்குமம் எனவும், அவற்றினும் நுட்பமாய்க் காரணம், மகா காரணம் எனவும் பல வகையாய் நிற்கும் என்பதை அறிந்தோம்.

பற்றுக்களை விடவிரும்பாதவர் அஞ்செழுத்து மந்திரத்தைத் தூலமாக வைத்துக் கணிப்பர். பற்றுக்களை விட விரும்பினோர் அதனைச் சூக்குமமாக வைத்துக் கணிப்பர். ஞான குருவின் உபதேசத்தைப் பெற்றுப் பற்றுக்களை விட்டொழிக்க முயல்கின்றவர்கள் பாசம் நீங்குதற் பொருட்டுப் பாச எழுத்துக்கள் இரண்டையும் நீக்கி மற்றை மூன்றெழுத்தை மட்டுமே கணிப்பர். முத்தியை எய்தும் நிலையுடையவர் அம் மூன்றெழுத்துக்களுள் ஈற்றில் உள்ள ஆன்ம எழுத்தாகிய யகாரத்தையும் நீக்கி, எஞ்சிய இரண்டெழுத்துக்களை மட்டுமே மந்திரமாகக் கொண்டு தொடர்ந்து இடைவிடாது கணிப்பர். அப்பால் சி என்னும் ஓரெழுத்தாகிய மகாகாரண பஞ்சாக்கரக் கணிப்பினால் சிவானந்தத்தில் மூழ்கியிருக்கும் நிலை உண்டாகும்.

இவ்வாறு பாசப்பற்றில் அழுந்தியிருத்தல், பாச நிலைகளிலிருந்து சிறிது விடுபடுதல், பாசப்பற்று நீங்கித் திருவருள் நிலையைப் பெறுதல், திருவருள் நிலை வாய்க்கப் பெற்றும் நிட்டைகூடப் பெறாமை, நிட்டை கூடியும் அதிலிருந்து மீண்டு உலகினை நோக்கும் நிலை என அவரவர் நிற்கும் அனுபவ நிலைகள் பலவாய் இருத்தலின் அவ்வனுபவ நிலைகளுக்கு ஏற்ப அவரவர் ஓதுதற்குரிய ஐந்தெழுத்தின் நிலைகளும் பலவாயின என அறியலாம்.

**சிறந்த சாதனம்:**

ஞான நெறியில் ஐந்தெழுத்து சிறந்த சாதனமாய் அமைகிறது என்பது இதனால் விளங்கும். பந்தமாகிய கீழ்நிலையில் உள்ளவர் அதிலிருந்து நீங்கி வீடாகிய மேல்நிலையை அடைவதற்கும் அது சாதனம் ஆகின்றது. மேல் நிலையை எய்தினோர் பழைய பழக்கத்தால் மீளவும் உலகினை நோக்கிச் சென்று விழாதபடி காத்துக்கொள்வதற்கும் அது சாதனம் ஆகின்றது.

மேல்நிலையை அடைந்த பின்னரும் கீழ்நிலைக்கு வருதல் உண்டோ என்று கேட்கலாம். அவ்வாறு நிகழ்தல் உண்டு என்பதைச் சில பெரியோர் வாழ்விலிருந்து அறிகிறோம். பலகாலம் தூய்மையான துறவு வாழ்க்கையை மேற்கொண்டவரும் சூழ்நிலை காரணமாக உலக இச்சைக்கு ஆட்பட்டுத் தமது தவ நெறியினின்றும் வழுவித் தவறு இழைத்து விடுவதைப் பார்க்கிறோம். இதற்கு என்ன காரணம்? அதைத்தான் பழைய பழக்க வாசனை என்கிறார்கள்.

வேப்ப மரத்தில் வாழ்ந்த புழு அதன் இலை, பூ, காய் முதலியவற்றையே தின்று பழக்கப்பட்டிருந்தது. அது தற்செயலாய் அருகில் வளர்ந்திருந்த கரும்பின்மேல் வீழ்ந்தது; அதனைப் பற்றிக் கொண்டது. அதனைச் சுவைத்தது. சிலகாலம் அந்த இன்சுவையை நுகர்ந்தது. காலமெல்லாம் அங்கேயே அது வாழ்ந்திருக்கலாம் அல்லவா? ஆனால் அவ்வாறு அது செய்யவில்லை. கசப்பான வேம்பினையே உண்டு பழகிய அந்த முன்னைப் பழக்கம் அதனை விடவில்லை. அப்பழக்க வாசனையால் அதற்கு வேம்பின் மேல் மீண்டும் விருப்பம் சென்றது. அதன் காரணமாக அது இனிய கரும்பினை விடுத்துத் தனது பழைய இடமாகிய வேப்பமரத்திற்கே திரும்பியதாம்!

*காலம் நல்லதெனில் கூட்டும் இனிக்கும், காலம் கெட்டதெனில் அதுவும் கசக்கும்.*

அதுபோலப் பாச ஞானத்தை விட்டொழித்துப் பதி ஞானத்தைப் பெற்று அதனால் பதியை அடைந்து பேரின்பத்தை நுகர்ந்த பின்னரும் முன்னைப் பழக்க வாசனையால் உலகத்தை நோக்கும் விருப்பம் நிகழ்தல் கூடும். அந்நிலை நிகழாதவாறு நீக்குதற்கும் ஞான நிலையில் உறைந்து நிற்பதற்கும் ஐந்தெழுத்து இன்றியமையாத சாதனமாய் விளங்குகிறது. இக் கருத்துப் பற்றியே நம் ஆசிரியர் உமாபதிசிவம் இன்புறு நிலையைக் கூறி முடித்து, அதன் பின்னாக ஐந்தெழுத்தருள் நிலையாகிய இதனை வைத்தார் என்பது அறிதற்குரியது.

**இன்னொரு பொருள்:**

"இவன் அகன்று நில்லா வகையை நினைந்து" என்பதற்கு, "ஆன்மா பாசத்தினின்றும் உடனே நீங்கமாட்டாத தன்மையை நினைந்து" என்று பொருள் கூறினோம். இதற்கு வேறொரு வகையாகவும் பொருள் கூறலாம். ஆன்மாவாகிய இவன் திருவருளை நீங்கி நில்லாது, அதனை விடாது பற்றி நிற்றல் வேண்டி ஆகமங்கள் திருவைந்தெழுத்தினைப் பலவகையாக அமைத்துக்கூறும் என்று பொருள் கொள்வதும் பொருந்தும். (தொடரும்...

## எது அல்ல எப்படி?

இறைவன் கண்ணன் தம் அடியவராகிய விதுரர் வீட்டிற்குத் திடீரென்று ஒருநாள் வருகை தந்தார். அப்பொழுது விதுரர் வீட்டில் இல்லை.

கண்ணனைக் கண்ட விதுரரின் மனைவி பெருமகிழ்ச்சி அடைந்தாள். அவரை அன்புடன் வரவேற்றாள். அவரை உயர்ந்த இருக்கையில் அமர வைத்தாள். ஓடியாடிப் பணிவிடைகள் செய்தாள். இன்னது செய்கிறோம் என்ற உணர்வே அவளுக்கு இல்லை.

தன்னை மறந்த நிலையில் அவள் ஒரு தட்டில் வாழைப் பழங்களை எடுத்து வந்தாள். கண்ணன் வாழைப்பழத்தை உரித்துத் தர வேண்டும் என்று நினைத்தாள்.

தன் உணர்வு இல்லாது மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்த அவள் வாழைப் பழத்தை உரித்தாள். தோலைக் கண்ணனிடம் தந்தாள். பழத்தை வெளியே எறிந்தாள்.

மகிழ்ச்சியுடன் அவள் கொடுத்த வாழைப்பழத் தோலை கண்ணன் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

அப்பொழுது விதுரர் வீட்டிற்குள் நுழைந்தார் வாழைப்பழத் தோலைக் கண்ணன் உண்டுகொண்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

தன் மனைவியைப் பார்த்துக் கோபத்துடன் அவர், "உனக்கு என்ன பைத்தியமா? இறைவனே நம் இல்லத்திற்கு வந்திருக்கிறார். அவருக்குப் பழம் கொடுப்பதற்குப் பதில் பழத்தோலைத் தந்துவிட்டாயே" என்று கடிந்து கொண்டார்.

தன் உணர்வு வரப்பெற்ற அந்த அம்மையாருக்கு அப்பொழுதுதான் தான் செய்த தவறு புரிந்தது.

தட்டிலிருந்த பழத்தை விதுரர் எடுத்து இறைவன் உண்ண அன்புடன் கொடுத்தார். அந்தப் பழத்தை உண்ட கண்ணன், "விதுரா நீ கொடுத்த பழத்தைவிட உன் மனைவி கொடுத்த பழத்தோல்தான் எனக்கு மிகவும் இனிமையாக இருந்தது" என்றார்.


"நாம் எதை இறைவனுக்குக் கொடுக்கிறோம் என்று அவர் பார்ப்பது இல்லை. எப்படிக் கொடுக்கிறோம் என்பதையே பார்க்கிறார்" என்ற உண்மை விதுரருக்குப் புரிந்தது.

*இதயம் ரோஜா மலராக இருந்தால் பேச்சில் அதன் நறுமணம் தெரியும்.*

# ஆறுமுகமான பொருள்

– திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள் –

முருகப்பெருமான் தன்னுடைய ஆறுமுகக் கோலத்துடன் தேர்மேல் எழுந்தருளி வருகின்றான். சொரூப நிலையில் இருக்கின்ற ஆண்டவன் தடத்த நிலைக்கு வருகின்றபோது முதன்முதல் காட்சி தந்த திருவுருவம் ஆறுமுகசுவாமி. பூரணப் பொருளாக விளங்குகின்ற திருமுருகன் ஆறு முகங்களுடன் அடியார்க்கு அருள்பாலிக்க வருகின்றான்.



ஆறுமுகமும் பன்னிரண்டு தோளும் விளங்கித் தோன்றும் எம்பிரானுடைய தரிசனத்தில் நாம் உள்ளக் கிளுகிளுப்பை அடைகிறோம். அவன் இன்பம் பாய்ச்சிச் சாவாத நிலை தருகின்றான்.

சிவபிரானுடைய ஐந்து முகமும் உமாதேவியாரின் ஒரு முகமும் சேர்ந்து சிவனும் சக்தியும் கலந்த ஒரு திருவுருவமாக ஆறுமுகப் பெருமான் தோன்றினான் என்பது ஒன்று. இறைவன் தன்னுடைய ஐந்து முகங்களையும் அதோ முகத்தையும் சேர்த்து ஆறுமுக நாதனாகத் திருவவதாரம் செய்தான் என்பது மற்றொன்று. நான்கு திசைகளாகிய இடங்கள், மேல் கீழ் இரண்டு ஆகிய ஆறு இடங்களிலும் எம்பெருமானின் கருணைப் பார்வை செல்கின்றது என்பதை அவனுடைய ஆறு திருமுகங்களும் நமக்குச் சொல்கின்றன.

மனிதனுடைய உடம்பில் உள்ள மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்ற ஆறு ஆதாரங்களிலும் ஆறுமுகப் பெருமான் தனித்தனியே நின்று பாதுகாக்கின்றான். ஆறுமுகத் தத்துவம் மிக மிகப் பழமையானது. எல்லாக் காலத்துக்கும் உரியது. அதுவே ஆதியானது, அந்தமானது, இன்னொரு வகையாகச் சொல்லப்போனால் ஆதியும் அற்றது, அந்தமும் அற்றது. "தனது தொன்மைத் திருமுகம் ஆறும் கொண்டான்" என்று கந்தபுராணம் காட்டும், "ஆதியொடும் அந்தம் ஆகிய நலன்கள் ஆறுமுகம் என்று தெளியனே" என்று திருப்புகழில் அருணகிரிநாத சுவாமிகள் பாடுவார்.

வரிசையான ஆறுமுகத்தையும் நாம் கண்ணாலே கண்டுவிட்டால் மட்டும் போதாது கருத்தாலும் காணவேண்டும். ஆறுமுகத்தைப் பற்றிச் சொல்கின்ற பாடல்களை எல்லாம் கருத்தூன்றிப் படிக்கவேண்டும். அப்போது பரமானந்த சாகரத்தில் ஆறுமுகங்களையும் காணும் நிலை உண்டாகும்.

*நண்பனின் மறைவைத் தாங்கிக்கொள்ளலாம், நட்பின் மறைவைத் தாங்கிக்கொள்ள முடியாது.*

நக்கீரர் திருமுருகாற்றுப்படையிலே எம்பெருமானுடைய ஆறு திருமுகங்களும் செய்கின்ற செயல்களை அழகாகச் சொல்கின்றார்.

## ஒளி தரும் முகம் (ஒரு முகம்)

"மாஇருள் ஞாலம் மறு இன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்"

உலகம் எங்கணும் பரந்து கிடக்கின்ற இருளை எல்லாம் அறவே போக்கி ஒளி தருவது ஒருமுகம். சூரியன், சந்திரன், அக்கினி என்ற மூன்றும் உலகில் உள்ள இருளைப் போக்கும் மூன்று சுடர். அந்த மூன்று சுடர்களுக்கும் ஒளிதந்து இருளைப் போக்க உதவும் முகம் ஒன்று. இன்னும் சொல்லப்போனால் உயிரின் அறிவு, இச்சை, செயல்களை ஆணவமலம் மறைக்கின்றது. புற இருள் பொருள்களை மறைத்து தன்னைக் காட்டி நிற்கும். ஆயின் ஆணவ மல இருள் பொருளை மறைத்துத் தன்னையும் காட்டாது நிற்றலின் அவ்விருளினதும் கொடிய இருள் என்பதால் மாஇருள் என்றார். ஆணவமல மறைப்பினால் தன்னையும் உணராது மயங்கிக் கிடந்த உயிர் அம்மல மறைப்பு ஒழிந்து தூயநிலை எய்துதல் மறு இன்றி விளங்குதல் ஆகும். இச்செயலை முருகப்பெருமானின் ஒரு திருமுகத்தின் செயலாக வைத்துப் பாடுகிறார் நக்கீரர்.

## அருளும் முகம் (ஒருமுகம்)

"ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே"

ஆர்வலர் அன்புமிக்கோர் பக்தர்கள் அவர்கள் தன்னை வாழ்த்துங்கால் அவர்க்கு இனிமையாக ஒழுகி அவர்கள்பால் வைத்த காதலாலே மகிழ்ந்து வேண்டும் பொருள்களை பெற்றுக்கொடுக்கும் ஒருமுகம். அடியார் தமக்கு வேண்டுவன இவை இவை எனக் கேளாத விடத்தும் அவர்க்கு வேண்டுவன இவை எனத் தானே அறிந்து ஈந்தருளும் பேரருளாளன் முருகப்பெருமான்.

## வேள்வி காக்கும் முகம் (ஒருமுகம்)

"மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே"

மறைவழி நின்று வேள்விகளைச் செய்கின்றார்கள் அந்தணர்கள். அச்சான்றோர்களுடைய வேள்விகளுக்கு இடையூறு நேராதபடி காப்பது ஒரு திருமுகம். வேள்விக்கு ஆக்கம் தேடுவது அந்தத் திருமுகம். இவர்கள் செய்யும் கன்ம வேள்வி, தவ வேள்வி, செபவேள்வி, தியான வேள்வி, ஞான வேள்வி என ஐவகைப்படும். இவ் வேள்விகளுக்கு இடையூறுகள் உண்டாகாதபடி முருகனே முன்னின்று பாதுகாத்தருள்வான்.

## மெய்ஞானத் திருமுகம் (ஒருமுகம்)

அறிவே உருவமாக இருப்பவன் முருகன். அவன் ஞானபண்டித சாமி. அவன் மெய்யடியார்களுக்குத் தோன்றுகின்ற ஐயங்களைப் போக்கி தெளிவிப்பான். அப்படித் தெளிவாக்கும்

*ஆயிரம்முறை சிந்தியுங்கள். ஆனால் ஒரேயொருமுறை முடிவு எடுங்கள்.*

செயலைச் செய்கின்றது ஒரு திருமுகம். சிறப்பாகச் சொன்னால் அத் திருமுகம் நூல்களால் காட்டமுடியாது. எஞ்சிய பொருள்களைத் தன் அன்பர்கள் காவல் உறும்படி ஆராய்ந்து உணர்த்தித் திங்கள்போலத் திசை விளக்கும். காட்டாதன எல்லாம் காட்டி சிவம் காட்டி, தாட்டாமரை காட்டி தன் கருணைத்தேன் காட்டி ஆட்கொள்வான் முருகப்பெருமான்.

## வீரத்திருமுகம் (ஒருமுகம்)

"செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே"

நல்லவர்களுக்கு வரும் துன்பத்தைப் போக்குவான் முருகப்பெருமான். அசுரர்கள் தேவர்களுக்கு அன்று பெருந்துன்பம் விளைவித்தார்கள். அசுரர்கள் நம்மிடையே இன்றும் வாழ்ந்துகொண்டு நல்லவர்களுக்குத் துன்பத்தைத் தந்துகொண்டே இருக்கின்றார்கள். அவர்களை அடியோடு அழிக்கும் திறன் முருகப்பெருமானுக்கே உண்டு. இந்த வீரச் செயலை ஒரு முகம் செய்கின்றது.

## இன்பத் திருமுகம்

"குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்த தன்றே"

ஆறாவது திருமுகம் இன்பத்தை வழங்குகின்றது. அத் திருமுகம் குறவருடைய சிறுமியாகிய வள்ளியெம் பிராட்டியோடு மகிழ்தலைப் பொருந்திற்று என்பது பாடலின் பொருள். வள்ளி ஆன்மாக்களுடைய பிரதிநிதி முருகப்பெருமானின் இச்சா சக்தி. காம நுகர்ச்சி இல்லாத கடவுள். இவ்வாறு மகிழ்தலைப் பொருந்துதல் உலகில் அன்பு கெழீஇய இல்வாழ்க்கையில் உயிர்கள் அமர்ந்து இன்பம் பெறும்பொருட்டேயாகும்.

## ஆறுமுகமான பொருள்

நாம் காண்கின்ற ஆறு திருமுகங்களையும் இவ்வாறு நக்கீரர் அழகாக வரிசைப்படுத்தி இருக்கிறார். இவற்றை இன்னொரு பாணியில் "ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் என்ற..." திருப்புகழிலே அருணகிரியார் பாடுவார்.

இத்தகு ஆறுமுகங்களோடு தத்துவப் பொருளை விளக்கி நிற்கும் ஆறுமுகங்களோடு அழகிய சித்திரத் தேரில் இலட்சோப லட்சம் மக்கள் மத்தியில் பவனி வருகின்ற திருக்காட்சியைப் பார்க்கின்றோம்.

எந்த மயமும் கந்த மயமாகக் காட்சியளிக்கின்றது. நல்லூர் பூலோக கைலாசமாக எமக்கெல்லாம் காட்சியளிக்கின்றது. இந்திர விழாவாக நல்லைத் தேர்த் திருவிழா சிறப்புப் பெறுகின்றது.

எல்லாம்வல்ல நல்லைக் கந்தன் நாட்டில் நலமான தீர்வொன்றை தந்தருள தேசத்து மக்களின் வாழ்வுக்கு காவலனாக துணையிருக்க வேண்டுமென இந்த நாளில் அனைவரும் பிரார்த்திப்போமாக.

*நாம் நம்மை அடைய மற்றவர்களை எதிர்பார்க்கும்வரை நாம் அடிமைகளே.*

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள்

(தொடர்ச்சி...)

– **திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்** அவர்கள் –

## கிருஷ்ண மாயையில் பிரம்மதேவர்

மலைப் பாம்பின் வாய்போன்றொரு குகை இருக்கிறதே; அந்தக் குகைக்குள்ளே போவோம் என்று சிறுவர்கள் சிரித்துக்கொண்டும், தாளம் போட்டுக்கொண்டும் உள்ளே ஓடினார்கள். எல்லோருக்கும் பின்னே வந்த கிருஷ்ணர்; இது உண்மையான குகையல்ல. அசுரனே படுத்திருக்கிறான் என அறிந்தார். அதற்குள் சிறுவர்களும் அவர்கள் ஓட்டிவந்த கன்றுகளும் உள்ளே நுழைந்தனர். உள்ளே போனவர்கள் அகாசுரனின் ஜாடராக்கினி வெப்பத்தில் இறந்து போனார்கள். கிருஷ்ணரும் உள்ளே போனார். தொண்டைக்குள் போனதும் தன்னுடைய



உருவத்தைப் பெரிதாக்கினார். அவ்வளவுதான். முழி பிதுங்க, மூச்சுவிட முடியாமல் புரண்டு அசுரன் இறந்தான். பிறகு தன் சினேகிதர்களையும், கன்றுகளை யும் தனது பார்வையின் கடாட்சத் தினால் கிருஷ்ணர் எழுப்பினார். அப்போது பாம்பிடமிருந்து வெளிப் பட்ட ஒளி கிருஷ்ணருக்குள் பிரவேசித்தது. தேவர்கள் புஷ்பங் களைப் பொழிந்து, வாத்தியங்கள் இசைக்க ஜயகோஷமிட்டார்கள். இதனைக் கேட்ட பிரம்மதேவர் அங்குவந்து ஸ்ரீ கிருஷ்ணனின் செயல் கண்டு வியப்புற்றார்.

கிருஷ்ணர் எல்லோரையும் காப்பாற்றி யமுனை ஆற்றங்கரைக்கு வந்து கன்றுகளை தண்ணீர் குடிக்கவிட்டு புல்தரையில் மேயவிட்டுவிட்டு, சிறுவர்களும் தங்கள் தங்கள் உறிகளை அவிழ்த்து வட்டமாக அமர்ந்து, வேடிக்கையாகப் பேசிக்கொண்டு சாப்பிட்டார்கள். நடுவே கிருஷ்ணர் நின்றுகொண்டு இடது கையில் தயிர் சாதத்தையும், விரல்களுக்கிடையில் ஊறுகாய் களையும் வைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டு சாப்பிட்டார். இடுப்பில் புல்லாங்குழல் செருகப்பட்டிருந்தது. இடது பக்கத்தில் கொம்பு வாத்தியமும், பிரம்பும் இருந்தது. யக்ஞத்தில் சாப்பிடும் பகவான் காட்டில் இடைச் சிறுவர்களோடு சாப்பிடுவதை தேவர்கள் பார்த்து அதிசயித்தார்கள்.

*துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்துவிடு. ஆனால் அது கற்றுத்தந்த பாடத்தை மறக்காதே.*

புல் மேய்ந்த கன்றுகள் வெகுதூரம் போய்விட்டன. கன்றுகளைத் தேடி கையில் தயிர் சாதத்தோடு புறப்பட்ட கண்ணனைக் கண்டு எளிய இடைச் சிறுவனாக பகவான் கன்றுகளைத் தேடிப் புறப்பட்டுப் போவதைப் பார்த்த பிரம்மதேவர் சாட்சாத் பகவானான அவருடைய மனோரம்யமான மகிமைகளைப் பார்க்கத் திருவுள்ளம் கொண்டார். அதனால் விளையாட்டாக இடைச் சிறுவர்களையும் கன்றுகளையும் வேறு இடத்தில் கொண்டு போய் மறைத்தருளினார். கண்ணன் சின்னப் பிள்ளைதானே. நான் படைத்தல் தொழில் செய்பவன் என்ற அகந்தையில் தான் பெரிய வன் என்ற நினைப்பில் இவ்வாறு செய்து விட்டார்.

கண்ணனும் பலராமனும் பசுக்களை யும் தோழர்களையும் தேடிச் சென்று எங்கும் காணாது; என்ன நடந்தது என்பதைக் கண் ணன் அறிந்து விடுகிறான். பிரம்மாவுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டுமென தனது சக்தியால் பசுக்களையும், கோபாலர்களையும் படைத்து விட்டார். மகா விஷ்ணுதானே தனது உந்திக் கமலத்திலிருந்து பிரம்மாவையே தோற்றுவித் தார். மகா விஷ்ணுவின் பரிபூரண அவதாரம் தானே ஸ்ரீ கிருஷ்ணன். இவற்றை யோசியாது அகந்தை கொண்ட பிரம்மாவுக்கு கிருஷ்ணன் படைத்தல் தொழிலைச் செய்தது பெரிய அவமானமாகிவிட்டது.

சர்வாத்மாவான கிருஷ்ண பரமாத்மா, தானே தன்னுருவான கன்றுகளை, தன்னுரு வான இடைச் சிறுவர்களால் ஓட்டிக்கொண்டு தன்னுருவத்தாலான விளையாட்டுப் பொருட் களால் விளையாடிக்கொண்டு கோகுலம் போய்ச் சேர்ந்தார். கன்றுகளை அந்தந்தக் கொட்டில்களில் கட்டிவிட்டு, அவரவர்கள் வீட்டிற்குள் நுழைந்தார். இப்படியே ஒருவருசம் முடியும் வேளையில் தனது பிழையை உணர்ந்து கிருஷ்ணரிடம் வந்து வணங்கித் தன் செயலுக்கு மன்னிப்பு கேட்டு தான் மாயை யால் கவர்ந்துசென்ற பசுக்களையும், கோபாலர்களையும் ஒப்படைத்தார். கிருஷ்ணர் தான் படைத்தவற்றை மாயையால் இல்லாமல் செய்துவிட்டார். ஏதுமறியாச் சிறுவனைப்போல் கையில் அன்னத்தை வைத்துக்கொண்டிருக் கும் கிருஷ்ண பரமாத்மாவை தம் திருமுடியை அவரது திருப்பாதங்களில் படிய வைத்து வணங்கி, ஆனந்தக் கண்ணீரால் அப்பாதங் களுக்கு அபிஷேகம் செய்தார். பின் எழுந்து பலவாறாகத் துதித்தார்.

பகவானே! தாங்கள் பக்தர்களுக்காக எடுத்துக்கொண்ட இத் திருமேனியின் பிர பாவத்தை அறிய எனக்கு சக்தி கிடையாது. ஞானத்தைப் பெறவேண்டி சிரமப்படுவதை விட்டுவிட்டு, தங்கள் திருக்கதைகளைக் கேட்ட படி, இருந்த இடத்தில் இருந்தபடியே உடலா லும், சொல்லாலும் மனதாலும் சதா தங் களையே நினைத்தபடி காரியம் செய்து, தங் களைப் பற்றிப் பாடிப் பேசி, நினைத்துக் கொண்டு வாழ்பவருக்கே தாங்கள் வசப்படு கிறீர்கள். தங்கள் கருணா கடாட்சத்தை எதிர் பார்த்துக்கொண்டு பற்றற்று, மனதாலும் வாக் காலும் உடலாலும் தங்களை வணங்கி வாழ் பவனுக்கே மோட்சம் கிட்டும். என் பிழையைப் பொறுத்தருளுங்கள். பரம்பொருளான தங் களிடமே என் மாயையைக் காட்டியது பிழையே அல்லவா? நான் தங்களிடமிருந்து பிறந்த மகனல்லவா? இந்த இடைச் சிறுவர்களும், இடைப் பெண்களும், பசுக்களும், கன்றுகளும் கூட மிக்க பாக்கியம் பெற்றவையே என்று பலவாறாகத் துதித்து மும்முறை வலம் வந்து வணங்கி விடை பெற்றார்.

கிருஷ்ணர் பழையபடி கன்றுகளை ஓட்டிக்கொண்டு யமுனையாற்றங்கரைக்குப் போனார். சிறுவர்கள் சாப்பிட்டபடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். மாயையின் காரணமாக ஒரு வருடம் கழிந்தது அவர்களுக்குத்

*நம்பிக்கையாளர் மறதிக்குச் சிரிக்கிறான். அவநம்பிக்கையாளன் சிரிப்பதற்கு மறக்கிறான்.*

தெரியவில்லை. கிருஷ்ணரைக் கண்டதும், "சீக்கிரம் வா கண்ணா, ஒரு கவளம் கூட சாப்பிடவில்லை, நீ, வா, வந்து உட்கார்ந்து சாப்பிடு" என்றார்கள். புன்முறுவலோடு கிருஷ்ணர் அவர்களோடு உட்கார்ந்து சாப்பிட்டார். பின்பு கோகுலம் வந்து பெரியவர்களிடம் கிருஷ்ணர் மிகப் பெரிய பாம்பைக் கொன்றதை வர்ணித்தார்கள். நடந்தது அவர்களுக்கு தெரியாது. எதுவுமே தெரியாமலிருப்பது மிகவும் நல்லது. எல்லாவற்றையும் பகவான் பார்த்துக்கொள்வார். அவர் காப்பாற்றுவார் என்று எதுவுமே தெரியாமல் இருந்துகொண்டு அவரால் காப்பாற்றப்படுபவர்கள் எவ்வளவு பாக்கியசாலிகள்!

ஒருநாள் சிறுவர்கள் பலராமரிடமும், கிருஷ்ணரிடமும் பக்கத்தில் பனந்தோப்பு ஒன்றுண்டு. அந்தப் பனம் பழங்கள் மிகவும் சுவையாக இருக்கும் என்றார்கள். சரி, வாருங்கள் போகலாம். வேண்டும் மட்டும் சாப்பிடுங்கள் என்று கிருஷ்ணர் கூட்டிக்கொண்டு போனார். பலராமர் மரத்தை உலுக்கினார். பழங்கள் உதிர்ந்ததும் சிறுவர்கள் சாப்பிட்டார்கள். தேனுகாசுரன் என்ற அசுரன் பெரிய கோரமான கழுதை வடிவில் வந்து பலராமரைத் தாக்க வந்தான். பலராமர் கழுதையின் பின்னங்கால்களைத் தூக்கி சுழற்றி வேகமாக ஒரு மரத்தின்மீது வீசினார். உடனே அசுரன் மாண்டான். அவனைச் சேர்ந்தவர்கள்



தாக்க வந்தார்கள். அவர்கள் எல்லாரையும் பலராமரும் கிருஷ்ணரும் கொன்றனர். தேவர்கள் புஷ்பவர்ஷம் பொழிந்தார்கள்.

**ஆயர்பாடிக் கண்ணனே பசுக்களின் துன்பங்களைத் துடைத்தவனே**
**கோபாலர்களோடு கன்றுகள் மேய்த்து விளையாடிய கோவிந்தா**
**பசுக்களை கண்காணித்துக் கொண்டு தயிர் சாதமுண்ணும் பாலகிருஷ்ணா**
**இடையர்களுடன் விருந்துண்ணும் ஸ்ரீ கிருஷ்ணா உன்னைத் தியானிக்கிறேன்.**

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| பெப்ரவரி | 02 | தை 19 | சனி | நயினாதீவு முத்துக்குமாரசாமி |
| பெப்ரவரி | 21 | மாசி 09 | வியாழன் | திருவள்ளுவர் |
| மார்ச் | 14 | மார்ச் 30 | வியாழன் | கச்சியப்பசிவாச்சாரியார் |
| மார்ச் | 18 | பங் 04 | திங்கள் | யோகர்சுவாமி |
| மார்ச் | 24 | பங் 10 | ஞாயிறு | காரைக்காலம்மையார் |

*அழகோடு அகங்காரமும் கூடிநின்றால், அந்த அகங்காரமே அழகை அழித்துவிடும்.*

# வழித்துணை 19

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 நாள்முழுதும் நடந்தவற்றை நாள்முடிய சீர்தூக்கார்
தான்பிறந்து வளர்ந்ததையும் நயம்படவே சிந்திக்கார்
நடந்துவந்த பாதையினை சீர்தூக்கிச் சீர்செய்வோர்
தொடர்ந்தும் தம்பாதையிலே வெற்றிமேல் வெற்றிகொள்வர்.

02 ஆழக் கடல்தன்னுள் அமிழ்ந்துகின்ற வேளையிலே
தாழப் போகின்றேன் காப்பாற்றும் என்பார்க்கு
ஆக்கப் பொறுத்தவன் நீ ஆறப்பொறு என்றுரைத்தால்
தாக்குப் பிடிக்கவெறும் தத்துவம்தான் உதவிடுமோ.

03 முகம்பிடிக்க வில்லையென்று ஒருவரைநீர் வெறுத்துவிட்டு
அகம்பிடிக்கா ஒருவரைநீர் அழகென்று அணைத்திடாதீர்
நகம்கடித்து நிற்போர்பின் சுகம்கடிக்க முற்படுவர்
சுகம்கடிக்க வாழ்க்கையதே சூன்யமாய் மாறிவிடும்.

04 பாதையிலே வீழ்ந்தொருவர் பதைபதைத்துத் துடிக்கையிலே
போதையிலே வீழ்ந்திட்டார் பொருட்படுத்தாதீர் என்றுவிட்டு
உபாதையினால் அவர்துடித்து மாண்டார்என்று அறிந்தபின்னால்
பேதையர்போல் கண்ணீரால் அஞ்சலித்து என்னபலன்.

05 ஆழ்கடலில் வீழ்ந்தவர்கள் அகப்பட்ட உதவியோடு
கரையேற எண்ணுவதே நன்றாம் அதுவன்றி
கப்பல் வருமென்று கையுதவி தனைவிடுதல்
உப்புக் கடல்நீருள் கலந்திடவே என்றறிவீர்.

06 வட்டிக்குப் பணமெடுத்து தொட்டிலொன்று வாங்கியதில்
பச்சைக் குழந்தையினைப் படுத்துறங்கப் போட்டுவிட்டு
பச்சை இலுப்பைவெட்டி பால்வடியத் தொட்டிலென்றால்
பொய்யோடு போலியுந்தான் பிள்ளையதும் கற்றிடாதோ.

*விதியைத் தாங்குவதுதான் அதை வெற்றிகொள்ளும் வழி.*

07 சாவதற்கு முன்னொருவர் தேகநலனுக் குதவிடாமல்
செத்தஉடல் பார்ப்பதற்கு சென்றுநீர் என்னகண்டீர்
தேகமதே செத்துவிடும் தேங்கியவை நிலைத்திருக்கும்
போகப் போகஅது உம்செயலைப் பின்தொடரும்.

08 உள்வீட்டுக் கல்லுமுள்ளை ஊர்த்தெருவில் கொட்டிவிட்டு
தெருமரத்து மயிர்க்கொட்டி காட்டியென்ன சாதித்தீர்
தேடிவந்து பிரச்சனையைப் பிறருக்குக் கொடுத்துவிட்டு
எட்டநிற்கும் பிரச்சினையை எட்டியேதான் பிடிக்கலாமோ.

09 சோப்புகளும் சீப்புகளும் புறத்தழகைப் பேணுதற்கு
காப்புகளும் தோப்புகளும் கைப்பொருளைக் காட்டுதற்கு
அறிவொளியும் நெறிவழியும் வாழ்வாங்கு வாழ்வதற்கு
அகிதிலார் கைப்பொருளும் கண்ணழகும் ஏதுசெய்யும்.

10 சூரியனைத் தொட்டுவிட்டால் சுட்டெரிப்பான் என்றஞ்சி
சந்திரனைத் தொட்டுவிட்டு வந்திட்ட சுந்தரர்நாம்
நல்லதினைத் தொட்டாலே நல்லதென்று அறிந்திருந்தும்
கெட்டதையே தொட்டுவிட்டு கெட்டழிந்து போகலாமோ.

## அர்ச்சுனனாக இராதே! பரதனாக இரு!

பாண்டிய நாட்டு அரசராக வரதுங்கராம பாண்டியன் என்பவர் இருந்தார். இவருடைய தம்பி அதிவீரராம பாண்டியன் ஆவார்.

இருவரும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார்கள். நல்லுணர்வு உடையவர்களாக இருந்தார்கள். நல்ல நூல்கள் பல இயற்றினார்கள்.

என்ன காரணமோ தெரியவில்லை. தன் தமையனார்மீது பகை கொண்டார் அதிவீரராம பாண்டியர். பெரும் படை திரட்டிய அவர் வரதுங்கராம பாண்டியர்மீது படை எடுத்து வந்தார்.

தம்பியின்மீது அன்பு கொண்டிருந்த வரதுங்கராம பாண்டியரோ எதிர்த்துப் போர் செய்யவில்லை. தம்பிக்கு ஓர் ஓலை அனுப்பினார்.

அதிவீரராம பாண்டியர் அந்த ஓலையைப் பிரித்துப் பார்த்தார். அதில் "அண்ணனைக் கொல்ல முயன்ற சுக்கிரீவன், விபீடணன், அர்ச்சுனன் போன்றவர்களைப்போல இராதே. அண்ணன் தம்பிப் பாசத்திற்கு எடுத்துக் காட்டாக இருந்த பரதனையும் இராமனையும்போல இரு" என்ற கருத்தமைந்த பாடல் ஒன்று இருந்தது.

அந்தப் பாடல் அதிவீரராம பாண்டியரின் உள்ளத்தைத் தைத்தது. அண்ணனைச் சந்தித்த அவர் "என் பிழையைப் பொறுத்து அருள வேண்டும்" என்று உள்ளன்புடன் வேண்டினார்.

*உலகில் நிரந்தரமானவை எதுவும் இல்லை. துன்பம் மட்டும் என்ன விதிவிலக்கா?*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| S. ஜேசகி (ஞானசுந்தரம்) | அச்சுவேலி | 10000. 00 |
| ராகுல் ரியா | லண்டன் | 5000. 00 |
| கி. சிவமோகன் | கரணவாய் கிழக்கு | 5000. 00 |
| சுபாசினி குடும்பம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| இ. கார்த்தீபன் | பருத்தித்துறை | 3000. 00 |
| V. கந்தசாமி | கரவெட்டி | 10000. 00 |
| திருமதி இன்பதேவி | உடுப்பிட்டி | 10000. 00 |
| ந. யாழினி | அளவெட்டி | 2000. 00 |
| S. யோகரட்ணம் | லண்டன் | 3000. 00 |
| S. கிருஷ்ணமூர்த்தி குடும்பம் | கோண்டாவில் | 1100. 00 |
| பானுரேகன் ஸ்ரோர்ஸ் | மருதனார்மடம் | 500. 00 |
| தி. சிலோன்மணி | ஊரெழு | 5000. 00 |
| ச. கருணானந்தன் | கனடா | 50$ |
| நகுலேஸ்வரன் சுஜாதா குடும்பம் | வல்வெட்டி | 1000. 00 |
| ஆனந்தகுமார் லிங்கவதி குடும்பம் | வல்வெட்டி | 5000. 00 |
| க. சரவணபவான் | சாவகச்சேரி | 1000. 00 |
| தயாளன் சந்தியா | டென்மார்க் | 25000. 00 |
| ஞானம்பிகை இராசதுரை | சாவகச்சேரி | 3000. 00 |
| க. தவரஞ்சினி | கனடா | 5000. 00 |
| ர. சிந்துஜா | கொக்குவில் | 2000. 00 |
| க. பார்த்தீபன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| N. சந்திரன் | பிரான்ஸ் | 20000. 00 |
| N. சாந்தகுமார் | பிரான்ஸ் | 2000. 00 |
| க. அமுதன் | நெல்லியடி | 10000. 00 |
| N. கௌரிகாந்தன் | ஏழாலை | 5000. 00 |
| ஆ. கோபாலகிருஷ்ணன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| திரு தர்ஷன் | கொடிகாமம் | 20000. 00 |
| திருமதி த. தவேந்திரன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| தி. முருகதாஸ் | நீர்வேலி | 3500. 00 |
| T.R. கனகலிங்கம் குடும்பம் | கொழும்பு | 25000. 00 |
| பா. பாலச்சந்திரன் மயிலணி | சுன்னாகம் | 1000. 00 |
| K. கணேசலிங்கம் | கொழும்பு | 10000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |

*சோதனையைச் சாதனையாக்கினால் வெற்றியின் எல்லையை அடையலாம்.*

| | | |
|---|---|---|
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| சரவணபவன் குடும்பம் | கொழும்பு | 1மூடை அரிசி |
| S. சஷ்டிப்பிரியா | கொழும்பு | 5000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| தேவன் ஸ்ரோர்ஸ் | ஆவரங்கால் | 1புட்டி பருப்பு, 1மூடை அரிசி |
| மோகன் கடை | ஆவரங்கால் | 1புட்டி பருப்பு, 1மூடை அரிசி |
| க. நடராஜா | புன்னாலைக்கட்டுவன் தெற்கு | 500. 00 |
| க. சிவகுமாரன் | கனடா | 5000. 00 |
| S. பிரபாகரன் | கனடா | 3000. 00 |
| பிரதாபன் பிரவீன் | புன்னாலைக்கட்டுவன் | 10000. 00 |
| சி. திருக்குமரன் | இணுவில் | 15000. 00 |
| S. கண்ணதாசன் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| ம. அருணாசலம் குடும்பம் | வவுனியா | 5000. 00 |
| திருமதி ஜெயக்கொடி | கொழும்பு | 10000. 00 |
| Dr S. நாகேந்திரன் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| வே. அருணாசலம் | கொழும்பு | 2500. 00 |
| செ. நவரத்தினசாமி | யாழ்ப்பாணம் | 6000. 00 |
| க. சிவகுரு குடும்பம் | அராலி | 5000. 00 |
| சு. அஜீதரன் | அராலி | 1000. 00 |
| வி. தக்ஷ்வினா | அராலி | 500. 00 |
| கி. கிருஷிகன் | சுவிஸ் (வடலியடைப்பு) | 10000. 00 |
| க. உதயகுமார் | நாயன்மார்கட்டு | 5000. 00 |
| P. குகதாசன் | கரவெட்டி | 3000. 00 |
| க. வினுஜன் | அல்வாய் | 5000. 00 |
| ந. கனகரத்தினம் | கரவெட்டி | 1000. 00 |
| சு. சாயி | நீர்வேலி | 5000. 00 |
| க. சிவலிங்கம் | கரவெட்டி | 1000. 00 |
| பி. பிரமஜெயந்தி | கரவெட்டி | 1000. 00 |
| சி. மோகன் | கரவெட்டி | 5000. 00 |
| ந. ஆனந்தசிவா | அராலி வடக்கு | 5000. 00 |
| சி. ஸ்ரீதரன் | கனடா | 10000. 00 |
| ந. செல்வராணி | புத்தூர் | 1500. 00 |
| J. உதயகுமாரன் | கனடா | 5000. 00 |
| பா. பாஸ்கரன் | பருத்தித்துறை | 5000. 00 |
| சி. பிரீத்திகா<br>சி. பிரகாஸ்<br>சி. பிரியங்கா | உடுவில் | 10000. 00 |

(தொடரும்...

# ரகு குல திலகன்

– **திருமதி செல்வக்காந்திமதி** அவர்கள் –

## ராமனை இப்படி அழைப்பது ஏன்?

புரட்டாதி சனிக்கிழமையன்று திருமாலின் அவதாரமான ராமரை வணங்குவோரும் உண்டு. ராமரை "ரகுகுல திலகம்" என்பர். இந்தப் பெயர் அவருக்கு ஏன் வந்தது என்று தெரிந்துகொண்டு அவரை வணங்கினால் நம் வழிபாடு இன்னும் அர்த்தமுள்ளதாக இருக்கும்.

வரதத்து மகரிஷியிடம் கவுத்சன் என்ற சீடன் பாடம் கற்க வந்தான். பயிற்சி முடிந்ததும் சீடனைச் சோதிக்க குரு தேர்வு நடத்தினார். அதில் கவுத்சன் வெற்றி பெற்றான்.

பிறகு "குருதேவா உங்களுக்குத் தட்சணை தர விரும்புகிறேன். தங்களின் விருப்பம் அறிய விரும்புகிறேன்" என்றான்.

"இத்தனை காலமும் நீ என்னிடம் பணிவுடன் கற்றவிதமே தட்சணை பெற்ற மனநிறைவைத் தந்தது. எனவே வேறு ஏதும் தேவையில்லை" என்றார் வரதத்து. ஆனால் கவுட்சன் விடுவதாக இல்லை. "தாங்கள் தட்சணை பெற்றுக்கொண்டால்த்தான் தனக்கு மனநிறைவு உண்டாகும்" என உறுதியுடன் தெரிவித்தான்.

சரி கவுத்தா... "நீ இதுவரை என்னிடம் 14 ஆயிரம் வித்தை கற்றுக்கொண்டாய். அதனால் பதினான்காயிரம் பொற்காசுகள் தட்சணையாகத் தரவேண்டும்" என்றார் வரதத்து மகரிஷி. இதுகேட்டு கவுத்சன் சிறிதும் மனம் கலங்கவில்லை. "நிச்சயம் நீங்கள் கேட்ட தட்சணையுடன் வருகிறேன் குருநாதா" என்று சொல்லிப் புறப்பட்டான். அயோத்தி மன்னர் ரகு பற்றி கேள்விப்பட்டிருந்தான். அவரிடம் சென்றால் தானம் பெறலாம் என்ற நம்பிக்கை அவனுள் எழுந்தது.

அயோத்திக்குப் புறப்பட்டான். அவனை மன்னர் ரகு வரவேற்றார். ரகு அளித்த அறுசுவை உணவைச் சாப்பிட்ட கவுத்சன், "தங்கள் உபசரிப்புக்கு நன்றி" என்று சொல்லிவிட்டுக் கிளம்பத் தயாரானான்.

"அதிதியாக வந்த தாங்கள் தானம் ஏதும் பெறாமல் செல்லலாமா" என்றார் ரகு. "அரசரே! நானும் தங்களிடம் பொருள்பெறும் நோக்குடன்தான் வந்தேன், ஆனால் இங்கு வந்த பிறகே தாங்கள் பொன் பொருள் அனைத்தையும் தானம் செய்துவிட்டதை அறிய முடிந்தது. "எனக்கு உணவளிக்கக்கூட எளிய மண் பாத்திரங்களையே வைத்திருக்கிறீர்கள்". என்னுடைய தேவையோ பதினாலாயிரம் பொற்காசுகள். அதைக்கேட்டு உங்களைச் சிரமப்படுத்த விரும்பவில்லை" என்றான் கவுத்சன். "உங்கள் விருப்பத்தை நிச்சயம் நிறைவேற்றுகிறேன். அதுவரை இங்கேயே தங்கி இருங்கள்" என்றான் ரகு.

செல்வத்துக்கு அதிபதியான குபேரன் மீது போர் தொடுத்துச் செல்வம் பெற்று வரலாம் என்பது அரசரின் எண்ணம். ஆனால் அப்போ அங்கு ஓடி வந்த அமைச்சர், "அரசே! நமது பொக்கிஷங்கள் அறையில் குபேரன் தங்க மழை பெய்துகொண்டிருக்கிறான்" என்றார்.

"அப்படியா! மகிழ்ச்சி" என்றார் ரகு. உடனே கவுத்சனை அழைத்து "உமது

*பட்டம் பதவிக்குப் பறக்காதே. அவை தாமே பறந்து வந்து உன் மடியில் விழ வேண்டும்.*

விருப்பம் எளிதாக நிறைவேறிவிட்டது. குபேரன் மீது போர் தொடுக்கத் தேவையில்லை. அவன் தானாகவே வந்து தங்கமழை கொட்டிக் கொண்டிருக்கிறான். அவை அனைத்தும் உமக்கே சொந்தம்" என்றார்.

கவுத்சன் "குரு தட்சணையான பதி னாலாயிரம் பொன் மட்டும் போதும். அதற்கு மேல் வேண்டாம்" என்றான். "அப்படியென்றால் நீங்கள் பெற்றதுபோக மீதியைத் தானம்பெற வருவோருக்குக் கொடுப்பேன்" என்றார் ரகு.

இப்படி தனக்கென வைத்துக்கொள் ளாமல் பிறருக்கே அனைத்தையும் கொடுத்து மகிழ்ந்த அரசர், ரகுவின் வம்சத்தில் திருமால் ராமராகப் பிறந்தார். "ரகுகுல திலகன்" எனப் பெயர் பெற்றார்.

இதற்கிடையில் முனிவர் சமாதி அடைய வேண்டிய நேரம் தன் குழந்தைகளுக் கும் சீடர்களுக்கும் ஆசி வழங்கிவிட்டு உலக வாழ்க்கையை முடித்துக்கொண்டார். அப்போது முனிவரின் மகனுக்கு வயது 14, மகளுக்கு 8. ஆச்சிரமத்தில் நிறைய எருமை மாடுகள் இருந்தன. அதுபோல ஊர்மக்கள் வழங்கிய தானியங்களும் வேறு இருந்தன. ஆச்சிரமத் தைச் சுற்றிலும் காய்கறித் தோட்டம். எனவே எந்தக் கவலையும் இல்லாமல் முனிவரின் குழந்தைகள் விளையாட்டிலேயே காலத்தைக் கழித்து வந்தார்கள்.

ஒருநாள் மிகவும் கோபக்காரனான ஓர் முனிவர் ஆச்சிரமத்துக்கு வந்தார். சீடர்கள் தானியம் சேகரிக்கவும், சுள்ளி பொறுக்கவும் வெளியே சென்றிருந்தார்கள். தோட்டத்தில் முனிவரின் குழந்தைகள் விளையாடிக் கொண் டிருந்தார்கள். வந்த முனிவர் அழைத்தது அவர்கள் காதில் விழவில்லை. அவரோ மிகுந்த பசியோடு இருந்தார். ஆச்சிரமத்தில் தனக்கு காய், கனி, கிழங்கு கொடுத்து உப சரிப்பார்கள் என்ற எதிர்பார்ப்போடு வந்திருந்தார். குழந்தைகள் விளையாடும் மும்முரத்தில் வந்த விருந்தாளியைக் கவனிக்கவில்லை. செழிப்பான வாழ்க்கை தந்த அகங்காரத் தினால்த்தான் குழந்தைகள் தன்னை அலட் சியப்படுத்துகிறார்கள் என்று தப்புக்கணக்கு போட்டார் முனிவர். கோபத்தில் அவர் கண்கள் சிவந்தன.

"இனிமேல் எந்தக் காலத்திலும் உங் களுக்கு ஒரு எருமைமாடு, ஒரு மூடை தானியத்துக்குமேல் செல்வம் இருக்காது" என அவர் வாயிலிருந்து கடுமையான சாபம் வந்தது. அதற்குள் வெளியே போயிருந்த சீடர்கள் வந்து விட்டார்கள். பதறிப்போய்க் குழந்தைகளிடம் விடயத்தைச் சொல்லி அழைத்து வந்தனர். குழந்தைகள் முனிவரின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டனர். சாப விமோசனம் வேண்டுமென்று கேட்டுக் கொண் டனர். முனிவர் மனம் இளகினார். "சாபம் கொடுத்தது கொடுத்ததுதான். உங்கள் செல் வம் அந்த அளவுக்குக் கீழே குறையவும் குறையாது என்று சாபத்தை தளர்த்துகிறேன். அதற்குமேல் ஆண்டவன் விட்டவழி"

முனிவர் ஒன்றும் சாப்பிடாமல் சென்று விட்டார். அடுத்த நாளே முனிவரின் சாபம் பலித்துவிட்டது. ஒரு எருமை மாட்டைத் தவிர மற்ற எல்லா எருமை மாடுகளும் நோய் வந்து இறந்துவிட்டன. ஒரு மூடை தானியம் தவிர மற்ற எல்லாத் தானியங்களிலும் பூச்சி வந்து விட்டது. எப்படியோ ஆச்சிரம வாசிகள் மூன்று நான்கு நாட்கள் பசியும் பட்டினியுமாகச் சமாளித் தார்கள். சீடர்கள் ஒவ்வொருவராகக் கழன்று கொண்டார்கள். எங்கே அந்தச் சாபம் தங் களையும் ஒட்டிக்கொள்ளுமோ என்ற பயத்தில் அனைவரும் முனிவரின் குழந்தைகளை விட்டு அகன்றார்கள்.

இதற்கிடையில் "சாபம் எங்களோடு போகட்டும். நீங்கள் எங்காவது சென்று வளமாக

*எழுதி வைக்காத கணக்கும், உழுது விதைக்காத நிலமும் ஒருபோதும் உருப்படாது.*

வாழுங்கள்'' என்று முனிவரின் மகனும் மகளும் மான்யரிடம் சொன்னார்கள். மான்யர் யோசித்தார் தனக்கு ஞானத்தை வாரி வழங்கிய குருநாதரின் குழந்தைகளை வறுமையில் வாட விட்டுப் போக மனமில்லை. மறுநாள் பொழுது விடிந்தது. முனிவரின் மகனும் மகளும் தங்களிடம் இருந்த எருமைமாட்டைக் கவனமாகக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் இருந்த ஒரே சொத்து ஆயிற்றே!

அப்போது மான்யர் "வாருங்கள் குழந்தைகளே நாம் கிராமத்துக்குச் செல்வோம்" என்று அழைத்தார். "எதற்காக?" "இந்த மாட்டையும் கையிலிருக்கும் ஒரு மூடை தானியத்தையும் யாராவது ஏழைக்குத் தானம் செய்துவிடலாம்". "என்ன ஆயிற்று ஐயா உங்களுக்கு'' இன்றைய நிலையில் எங்களிடம் இருப்பதெல்லாம் இந்த மாடும் தானியமும் தான். அதையும் தானம் கொடுத்துவிட்டால் நாங்கள் எப்படி வாழ்வது?

சாபம் கொடுத்த முனிவரின் வார்த்தைகளை யோசித்துப் பார்த்தீர்களா? எந்தக் காலத்திலும் உங்கள் செல்வம் ஒரு மாடு, ஒரு மூடை தானியம் என்ற அளவுக்குக் கீழே குறையாது என்று சொல்லி இருக்கிறார் அல்லவா"?

"அதனால் நாம் மாட்டையும் தானியத்தையும் தானம் கொடுத்துவிட்டால் உடனே நமக்கு அவை ஏதாவது ஒரு வடிவத்தில் திரும்பவும் கிடைத்துவிடும் இதனால் ஒரு ஏழைக்கு உதவிசெய்த பேறும் கிடைக்கும்" முனிவரின் பிள்ளைகள் இந்த யோசனையை ஏற்றார்கள்.

தானியமூடையை எருமை மாட்டின் மேல் ஏற்றி கிராமத்துக்குச் சென்றார்கள். அங்கு ஓர் ஏழையிடம் தானியமூட்டையை தானம் கொடுத்தார்கள். அவன் அவர்களை வாழ்த்தி வழி அனுப்பி வைத்தான். ஒரு சம்சாரிக்கு எருமை மாட்டைத் தானமாகக் கொடுத்தார்கள். மாலை அவர்கள் ஆச்சிரமத்திற்குத் திரும்பிக்கொண்டிருந்தார்கள். அங்கே ஒரு செல்வந்தன் இறந்துபோன தன் தந்தையின் இறுதிச் சடங்குகளைச் செய்து கொண்டிருந்தான். முனிவரின் குழந்தைகளைப் பார்த்தவுடன் அவர்களுக்கே மாட்டைத் தானமாகக் கொடுத்துவிட்டான். மனநிறைவுடன் ஆச்சிரமத்திற்குத் திரும்பினார்கள். விவசாயி கொடுத்த தானியத்திலிருந்து கொஞ்சம் தானியம் எடுத்து சமைத்து உண்டார்கள். எருமைப் பாலையும் அருந்தினார்கள். மறுநாளும் அதேபோல் செய்தார்கள். பசித்த ஓர் ஏழைக்குத் தானியமும், ஒரு சம்சாரிக்கு எருமை மாட்டையும் தானம் கொடுத்தார்கள். அவர்களுக்கு எப்படியோ அன்று மாலைக்குள் ஒரு மூடை தானியமும், ஒரு எருமை மாடும் கிடைத்துவிட்டது. இந்தக் கதை தினமும் தொடர்ந்தது. இதேபோல் தொடர்ந்து செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு மான்யர் மீண்டும் தவம் செய்யச் சென்றுவிட்டார்.

முனிவரின் பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களானார்கள். உரிய வயதில் திருமணம் செய்து கொண்டார்கள். இந்தத் தானத்தினால் நாடே வளம் பெற்றது. நாட்டு மன்னன் அவர்களைப் பாராட்டினான். பல கிராமங்களைப் பரிசாகத் தர முன்வந்தான். அவர்கள் மறுத்துவிட்டார்கள். சாபம் இருப்பதால் அந்தப் பரிசினால் தங்களுக்கு எந்தப் பயனும் இருக்காது என்று சொல்லிவிட்டார்கள்.

அவர்கள் காலம் முடிந்தவுடன் அவர்கள் செய்த தானத்திற்காக இறைவன் அவர்களுக்கு சுவர்க்கத்தில் நிரந்தரமான இடம் தந்தான். இதுதான் வாழ்க்கை. சாபத்தை வரமாகப் பார்ப்பதுதான் உண்மையான சாப விமோசனம்.

# சைவ சமயம்

– **திரு கௌரிகாந்தன் சித்தாந்தன்** அவர்கள் –


**ஆய்வுச் சுருக்கம்**

கல்வி என்ற எண்ணக்கரு மிகவும் பரந்துபட்டதொன்று. "எல்லாமே கல்விதான்" என்பது கல்வி தொடர்பான கோட்பாடாகும். வாழ்க்கைக்கானது கல்வி. வாழ்க்கைக்கு இலட்சியமென்று ஒன்றிருக்கும். அஃது இறைவனை அடைதல், அல்லது ஆன்ம விடுதலையாகும் என்று சமய தத்துவ நூல்கள் குறிப்பிடும். இஃது பாரபட்சமற்றதாக இருக்கவேண்டும். எனவே ஆன்ம விமோசனம் தொடர்பாக கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். "சமயம் வாழ வேண்டுமானால் முதலில் சமூகம் வாழ வேண்டும்" எனும் விவேகானந்தர் வாக்கும் ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டியதொன்று. "கடையனுக்கும் கடைத்தேற்றம்" என்பது எமது சமயத்தின் அடிப்படைகளுள் முக்கியமானது.

சைவ சமயமும் அதன் தத்துவமாகிய சைவசித்தாந்தமும் அவரவர் தகுதிக்கேற்றவாறு ஒழுங்கான முறையில் வாழ்ந்து வீடுபேறு பெறுவதற்கான சரியான வழிமுறைகளை வகுத்துத் தந்திருக்கின்றன. ஆனால் பொது மக்கள் மத்தியில் சித்தாந்த தத்துவம் பற்றிய அறிவு ஒழுங்கான முறையில் பரப்பப்படாமை பெருங்குறையாகும். இக்குறை தமிழ்ச் சைவப் பொது மக்களுக்கும் பொருந்தும். எனவே சைவ சித்தாந்த தத்துவம் பற்றிய விளக்கத்தை பொது மக்களிடத்தில் எவ்வாறு ஏற்படுத்தலாம் என்பது தொடர்பாகவும் அதற்கான முன்னெடுப்புக்கள் பற்றியும் இக்கட்டுரை ஆராய இருக்கின்றது. வரலாற்று முறை ஆகிய ஆய்வு முறையியலின் வழி இக்கட்டுரை எழுதப் பெறுகின்றது.



**திறவுச் சொற்கள்:**

சைவம், சமயம், மதம், தத்துவம், சித்தாந்தம், குகசைவ சித்தாந்தம், பொதுமக்கள், முப்பொருள், முத்தி, வீடுபேறு, முத்திக்கான வழிமுறைகள்.


**அறிமுகம்:**

சமயம், மதம், நெறி என்பன ஆன்மீகம் தொடர்பான கலைச்சொற்களாகும். "சமயம்" என்றால் சமநோக்குடையது என்றும், "மதம்" என்றால் மதத்தை இல்லாமல் செய்வது என்றும், "நெறி" என்றால் ஒழுங்குபடுத்துவது என்றும் பொருள்படும். சமயம் கொள்கை ரீதியானது. தத்துவம் கோட்பாடு சார்ந்தது. சமயம் பெரிதும் உணர்வுபூர்வமானது. தத்துவம் அறிவு சார்ந்தது. சமயத்திற்கு பலத்தைக் கொடுப்பது அதன் தத்துவம். பாசத்தால் பிணைப்புற்ற ஆன்மா பதியைச் சிக்கெனப் பிடிக்கும் நிலையில் சமயம் சிறந்து விளங்கும் என்பர்.[1]

சைவ சமயம் பெருஞ்சமயம்; அது கிளைச்சமயம் அல்ல. இந்தியாவில் சைவத்தை உள்ளடக்கி அறுவகைச் சமயங்களைப்பற்றி பேசி வருவது அந்த நாட்டின் தேசிய ஒருமைப் பாட்டிற்கே எனலாம். இலங்கையில் அவ்வாறு கொள்ளவேண்டிய தேவையில்லை. இலங்கைத்

தமிழரில் பெரும்பாலோர் சைவர்கள். அவர்களின் முழுமுதற் கடவுள் ஆறுமுக நாவலர் குறிப்பிட்டவாறு சிவபெருமானாவார். இலங்கையில் உள்ள சைவத்தை "அன்றும் இன்றும் என்றும் உள்ள சமயம்" என்று குறிப்பிடுவதுதான் பொருத்தம் என்று தெரிகிறது. கொல்லாமை அதன் வாழ்வியல் அடிப்படை. இலங்கையைச் "சிவபூமி" என்று திருமூலர் சிறப்பிக்கின்றார். இவ்வுயர் சிந்தனை பிற்காலத்தில் "சித்தாந்தப் பொருளும் ஈழத்து ஊர்ப் பெயர்களும்"[2] எனும் சமய தத்துவக் கட்டுரை எழக் காரணமாகியது.

## சைவ சித்தாந்தம்

சைவ சித்தாந்த தத்துவத்தை தமிழர் கண்ட நெறியாக கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை (1936- 2015) காட்டுகின்றார்.[3] "சிவாகமங்களுள் ஒன்றாகிய இரெளரவ ஆகமத்தின் பாவ விமோசன படலத்தில் பன்னிரண்டாவது அத்தி யாயமாகிய சிவஞானபோதமானது பன்னிரு சூத்திரங்களிற் சித்தாந்த சைவ உண்மைகள் அனைத்தையும் அடக்கியது[4] என்பார். சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் (1878-1953) அவர் கள். வடமொழியில் "ஆகமாந்தம்" "சித்தாந் தம்" எனப்பட்டது. தமிழிலே தொல்காப்பியம் எனும் இலக்கண நூலிலும் சங்க இலக்கியங் களிலும் அறநூல்களிலும் பக்தி இலக்கியங் களிலும் பரந்துபட்டும் சிதறியும் காணப்பட்ட சித்தாந்தக் கருத்துக்கள் பதினோராம் நூற் றாண்டிலேதான் மெய்கண்ட தேவரின் சிவ ஞானபோதத்துடன் கோட்பாட்டு வடிவம் பெற்று சந்தனாசாரியர்களால் மேலும் வளர்க்கப்பெற்று இருந்தது. சைவ சித்தாந்தம் குரு- சிஷ்ய கல்விமூலமே கல்வியில் மேல்மட்ட நிலையில் உள்ளவர்களால் கற்பிக்கப்பட்டு வந்தது. இலங்கையிலும் திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர், காசிவாசி செந்திநாதையர் (1848-1924), சதாவதானி நா. கதிரவேற்பிள்ளை, திக்கம் செல்லையாபிள்ளை முதல் இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா (1917- 2002) வரை பலர் சைவ சித்தாந்தத்தை இலகுவில் படித்தறிய முடியாதபடியே எழுதி வைத்திருக் கின்றார்கள். ஆறுமுகநாவலர் (1822- 1879), உரையாசிரியர் மு. திருவிளங்கம் (1859- 1922), சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் (1878-1953), அச்சுவேலி ச. குமாரசுவாமிக் குருக்கள் (1886- 1971), பேராசிரியர் நா. ஞானகுமாரன், பேராசிரியர் மா. வேதநாதன், கலாநிதி கலை வாணி இராமநாதன் போன்றோரின் சைவ சித் தாந்த எழுத்தாக்க முயற்சிகள் இலங்கையில் சைவ சித்தாந்தக் கல்வி, "கற்றவர்கள்" மூல மாக ஏனையோரைச் சென்றடைந்தன எனலாம். இந்த வகையில் நாவலரது முதலாம், இரண் டாம் சைவ வினாவிடைகள், சிதம்பரம் மறைஞான சம்பந்த நாயனார் செய்த "சைவ சமய நெறி" நூலுக்கு இவரால் செய்யப்பெற்ற புத்துரை, சித்தாந்த சாஸ்திரங்கள் பலவற் றுக்கு திருவிளங்கம் உரை செய்த புத்துரை கள், சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களால் எழுதப்பெற்ற சைவபோதம் முதற் புத்தகம், இரண்டாம் புத்தகம், திருவருட்பயன் விளக்கவுரை, சைவ சித்தாந்தம்- உரை நடை (1932), அச்சுவேலி ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களின் முப்பொருள் விளக்கம் (1955), மு. இளையதம்பி அவர்களின் முப்பொருள் உண்மை விளக்கம் (1978), பேராசிரியர் நா. ஞானகுமாரன் அவர்களின் சைவ சித்தாந் தத் தெளிவு (2012), கலாநிதி கலைவாணி இராமநாதன் அவர்களின் இந்திய மெய்யியற் சிந்தனையில் வேதாந்தம் சித்தாந்தம் கூறும் கடவுட் கொள்கை (2011) என்பன குறிப்பிடத் தக்கன.

1960- 1961 காலப் பகுதியில் இலங் கையில் உள்ள தனியார் பாடசாலைகளை

*கருணை காட்டும் குணம், கடவுள் உங்களுக்கு அளித்திருக்கும் மிகப்பெரிய பரிசு.*

அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர், பாடசாலைகளில் இந்து சமயமும் ஒரு முக்கியமான பாடமாகக் கல்வித் திட்டத்தில் இடம்பெற்றது. இதனால் தரம் ஒன்று முதல் க.பொ.த. சாதாரண தரம் வரை மாணவர்கள் சமயத்தைக் கற்றனர். 9ஆம் 10ஆம் தரங்களுக்கென வித்துவான் க. வேந்தனார் (1918- 1966), சைவப் புலவர் க.சி. குலரத்தினம் (1916-1994), வித்துவான் கலாநிதி க. சொக்கலிங்கம் (1930- 2004) ஆகியோரால் "இந்து சமய பாடம்" என்ற பெயரில் எழுதப்பட்ட பாட நூல்களில் சைவ சித்தாந்தத்திற்கு முக்கியமான இடம் கொடுக்கப்பட்டது. கொழும்பு விவேகானந்த சபையினாலும் தரம் ஒன்று முதல் தரம் எட்டுவரை எழுதப்பட்ட "சைவபோதினி" நூல்களிலும் அதற்குமேல் "சைவநெறி" என்ற பெயரில் எழுதப்பட்ட நூலிலும் சைவசித்தாந்தம் மாணவர் படிநிலைக்கேற்றவாறு விளக்கப்பட்டுள்ளது. 9ஆம், 10ஆந் தரங்களில் திருவருட்பயனுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

## சித்தாந்த தத்துவம் கூறும் முப்பொருட்கள்.

### பதி

"உள்ள பொருள் பல" என்ற உபநிடதக் கூற்றை அடிப்படையாகக் கொண்டது சைவ சித்தாந்தம். இத்தத்துவம் குறிப்பிடும் அடிப்படைப் பொருட் கூறுகளாக பதி, பசு, பாசம் என்பன அமைகின்றன. இவை வடமொழிக் கலைச் சொற்கள். இவற்றை கடவுள், உயிர், தளை என்று ஒருவாறு மொழிபெயர்த்துக் கூறுவர். இந்த மூன்று பொருட்களையும் உண்மை எனவும் அவற்றுக்கிடையிலான தொடர்புகளையும் மிகவும் தெளிவாகவும் விரிவாகவும் சைவசித்தாந்தம் குறிப்பிடும். சைவசித்தாந்தம் தனது ஆய்வுக்குத் துணையாக பிரத்தியட்சம் (காண்டல்), அனுமானம் (கருதல்), ஆப்தவாக்கியம் (ஆகமப் பிரமாணம்) எனும் மூன்றையும் பயன்படுத்துகின்றது.

சைவ சித்தாந்தம் குறிப்பிடும் முப்பொருட்களில் முதலாவதாக அமைவது பதி என்பதாகும். இதற்குத் தமிழில் "மேலானது" என்று பொருள் கொள்வர். "பசுபதி" என்ற தொடரை வைத்து நோக்கினால் இதன்பொருள் தெளிவாக இருக்கும். இதற்கு "சொரூபம்", "தடத்தல்" என இரண்டு நிலைகளிருப்பதாகச் சைவ சித்தாந்தம் குறிப்பிடும். எண்ணம், சொல், செயல் என்பவற்றைக் கடந்த நிலை சிறப்பு நிலையாகிய "சொரூபம்". இந்த நிலையில் இருந்து பதி கீழிறங்கி வருவதைத் "தடத்தம்" என்பர். இந்நிலையிலேதான் இறைவன் அருவம், உருவம், அருவுருவம் எனும் மூன்று வடிவங்களைக் கொண்டு, இவற்றின்மூலம் ஒன்பது திருமேனிகளைத் தாங்குகின்றான். இவற்றின்மூலம் உயிர்களுக்கான ஐந்தொழில்களையும் ஆற்றுகின்றான். ஆன்மாக்களுக்கான "அருளல்" நடைபெறும் வரை இத்தொழில்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

### பசு

பதியின் விளக்கம் "பசுபதி" மூலம் காட்டப்படுவதுபோன்று பசுவின் விளக்கம் "பாசம்" என்பதன் மூலம் காட்டப்படும். "பச்" என்ற கூடிச்செல்லும் "உ" எனும் விகுதியும் சேர்ந்த ஒட்டுநிலை மொழியான "பசு" என்பதன் பொருள் "பந்திக்கப்பட்டது" அல்லது "கட்டுண்டது" என்பதாகும். எதனால் கட்டுண்டது என்றால் பாசத்தால் கட்டுண்டது எனும் விடை கிடைக்கும். பசு இறைவனை அடைய முடியாமல் இருப்பதற்கு பாசமே காரணம். இப்பாசம் மூன்று வகைப்படும். அவை ஆணவம், கன்மம், மாயை என்பன. இவை உயிரைப் பீடித்திருக்கும்

இயல்புகளுக்கு ஏற்றவாறு ஆன்மா சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகைப்படும். ஆணவம் வலிகுன்றி இறையருள் கூடும் நிலையிலேயே ஆன்மாவுக்கு வீடுபேறு உண்டாகும்.

**பாசம்**

பசுவைப் பந்தித்திருப்பது "பாசம்". பசுவுக்கு இது அழுக்காக இருப்பதால் மலம் எனப்படும். மலம் மூன்று. அவை ஆணவம், கன்மம், மாயை. இவற்றில் ஆணவந்தான் கொடியது. இறுதியில் வலி கெடுவது; ஆன்மாவின் அறிவை அணுத் தன்மையாக்குவது; ஆன்மாவை அநாதி தொட்டு பீடித்திருப்பது. "நான்" என்ற அகங்காரத்தையும், "எனது" என்ற மமகாரத்தையும் உண்டாக்குவது.

ஆணவம், "மூலமலம்" எனவும் இடையில் இணையும் கன்மம், மாயை என்பன "ஆகுந்தக மலம்" எனவும் படும். கன்மம், மாயை என்பன ஆணவ மலம் வலிகெடுவதற்காக வருபவை. கன்ம மலம் செயலுடன் கூடியது. இது சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என மூன்று வகைப்படும். சஞ்சிதம் என்பது ஆன்மாவின் வினைத் தொகுப்பு. பிராரத்தம் முன்னையதில் இருந்து இப்பிறவியில் அனுபவிப்பதற்காக ஆன்மாவிற்குக் கொடுக்கப்பட்டது. ஆகாமியம் பிராரத்தத்தை அனுபவிக்கும்போது புதிதாக ஆற்றப்படும் வினை.

"மாயை" என்ற சொல்லின் சரியான வடிவம் "மாயா" என்பது. மாய்+ஆ என்று இதனைப் பிரித்து மாய்தல், ஆதல்- ஆகுதல் என்று விளக்குவர். உலகின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணம் மாயை என்பதனை முதற்பொருளாகக் கொண்டு நிமித்த காரணனான இறைவனால் உலகம் தோற்றுவிக்கப்படுகின்றது.

**முத்தி**

ஆன்மா மலங்களிலிருந்து "விடுபட்டு" "வீடுபேறு அடைவது" முத்தி. இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்ற ஒழுங்கில் ஆன்மா வீடுபேற்றை அடைவதாகச் சித்தாந்தம் கூறுகிறது. இந்த முத்தி "தாடலை" என்பதைப் போன்றது என திருவருட்பயன் குறிப்பிடும். தாடலையைப் பிரித்தால் தாள்+தலை என்றாகும். முத்தியின்போது கலப்புத்தன்மையால் ஒன்றாகவும் பொருள் தன்மையால் வேறாகவும் பதியும் ஆன்மாவும் அமையுமென்று சித்தாந்த சாஸ்திரங்கள் வாயிலாக அறியலாம். (தொடரும்...

## தமிழர் புத்தாண்டு தைத்திருநாளே

தைத்திருநாள் தமிழர் திருநாள்
தந்திடும் நல்ல வளங்கள்
தைத்திருநாள் மானிட வாழ்வில்
தந்திடும் வழிகள் பற்பல
தைத்திருநாள் தானே தமிழில்
தந்திடும் புதுவித மாற்றம்
தைத்திருநாள் தமிழர்க் கு௭ன்றும்
தந்திடும் புத்தாண் டாகும்

-வ. யோகானந்தசிவம்-

*பழிவாங்குதல் வீரமன்று, மன்னிப்பதே வீரம்.*

# பணியில் உயர்ந்தவர்கள் இறைவனைக் காண்பார்கள்

– **திரு க. சிவசங்கரநாதன்** அவர்கள் –

இறைவனைத் தரிசிக்க - ஆலயங்களில் தொண்டு செய்வதற்கு தகுதிகள் தேவையில்லை என்பதற்கு சமய குரவர் வாழ்க்கை வரலாறுகள்மூலம் உணரலாம். மூன்று வயதில் தேவாரம் பாடுவதற்கு திருஞானசம்பந்தருக்கு இறைவன் தாயும் தந்தையுமாகத் தோன்றி ஞானப்பாலூட்டியமையானது இறைவனை வழிபடத் தகுதி தேவையில்லை என்பதை உணர்த்துகின்றன. சுந்தரர், மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர் வாழ்க்கை வரலாற்றையும் யாம் சிந்திக்க வேண்டும். திருமாலின் பக்தர்களுக்கு தொண்டர்களுக்கு சேவை செய்வதையே தமது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு திகழ்ந்ததால் இவரைத் தொண்டரடிப் பொடியாழ்வார் என்று மதித்துப் போற்றினர். இறைவன் திருவருளைப்பெற ஒரு மனிதன் எண்ணுகிறான். அதற்கான வழிமுறைகள் என்ன என்பதைக் கேட்டறிந்து உணருகிறான். மிகமிக எளிய வழிகள்தாம். ஆனால் அந்த எளிய தகுதிகள்கூட எனக்கு இல்லையே என் கதி என்ன என்று எண்ணுகிறான். இப்படிப் பட்ட பரிதாபத்துக்குரிய ஒரு மனிதனின் மனக் குமுறலைப் படம்பிடித்து காண்பிக்கும் பாங்கில் தொண்டரடிப்பொடியாழ்வார் பாடிய பாசுரம் நெஞ்சை நெகிழ்விப்பதாகும்.

மனத்திலே தூய்மை இல்லை, வாயைத் திறந்தால் இனிமையான சொல் வெளிவருவதில்லை, பிறரைப் புண்படுத்தும் வன்சொல்தான் வெளிவருகின்றது. யாரை யாவது சாதாரணமாக நோக்கும்போதுகூட என் பார்வையிலேயே சினமும் பகைமை உணர்வும்தான் பிரதிபலிக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு வினாடியும் வீண்வாழ்வு வாழும் கெட்டவனாகிய எனக்கு உனது பாத மலரடியினை அடைவதற்கான தகுதி ஏது? கானகத்திலே வளர்த்த புனிதமான துளசிமாலையை அணிந்து காவிரி நதியால் சூழப்பட்ட திருவரங்கத்திலே வாழ்கின்ற என் இறைவா என் கதி இனி என்ன? என்று ஏங்கும் அந்த அப்பாவி மனிதர் கடைத்தேற வழி என்ன? அது வெகு எளிது!

உள்ளத்திலே தூய்மை நிரம்பியிருக்க வேண்டும். எந்த நேரமும் யாரிடமும் இனிய சொற்களே பேசவேண்டும் வாயைத் திறந்தால் இனிய சொற்களன்றி வேறு ஒரு சொல்லும் வெளிவரக்கூடாது. யாரைக் கண்டாலும் முகத்திலே சினத்தின் வாடை இருக்கக்கூடாது. பகைமையின் சின்னமே பொருந்தக்கூடாது. நட்புணர்ந்த குளிர்ந்த பார்வையும் இடம்பெற வேண்டும். சுருங்கச் சொன்னால் சுற்றுப்புற மனிதர்கள் அனைவரிடமும் அன்பு செலுத்தி நட்புறவுகொண்டு யாருக்கும் சிந்தையாலும் செயலாலும் ஏன் பார்வையாலும் கூட தீங்கு செய்யாத மனப்பக்குவம் கொள்ளவேண்டும். இந்த தகுதியை மட்டும் பெற்று விட்டால் போதும். இறைவனின் திருவடியைச் சரண் அடைந்ததற்கான அனுமதிச்சீட்டு கிடைத்த மாதிரித்தான். இந்தத் தகுதி மட்டும் கிடைத்து விட்டால் வேறு எந்த இடையூறும் குறுக்கிட முடியாது. நாம் இறைவனின் திருவருளைப் பெறுவதை தடுத்துவிட முடியாது. நல்லொழுக்கமும் பண்புடைமையும் இருந்தால் மட்டுமே

*தோல்வி குற்றம் ஆகாது. உயர்வற்ற இலட்சியமே குற்றமாகும்.*

போதும் இறைவன் நம் காட்சிக்கெளியவன் ஆகிவிடுவான் என்ற கருத்தை மிகவும் சுவை யாக தொண்டரடிப் பொடியாழ்வார் எடுத்து விளக்கியுள்ளார். பக்தி இலக்கியங்கள் வெறும் பக்தியை மட்டும் போதிக்கவில்லை. பக்தியின் உயிர்நாடியே நல்லொழுக்கமும் நல்ல பண்பு உணர்வுந்தான் என்று உபதேசிப்பதன்மூலம் நல்லொழுக்கப் பிரச்சாரத்திற்கு தொண்டரடிப் பொடியாழ்வாரின் இந்தப் பாடல் சரியான சான்று. இதுபோன்று நல்லொழுக்க பிரச்சாரம் செய்யும் பக்திப் பாடல்களில் பொய்கை ஆழ் வார் எழுதிய ஒரு பாடலும் குறிப்பிடத்தக்கது.

வைணவ சமயத்துப் பக்தர் இதைத் தானே சொல்வார். இதிலே ஆச்சரியப்பட புகழ் பாட பெருமையாக எடுத்துப் பேச என்ன இருக்கிறது என்று நமக்குக் கேட்கத் தோன் றும். பிறருக்குச் சொந்தமான பொருளைச் சற்றும் விரும்பமாட்டேன் கீழ்த்தரமான தன்மை கொண்டவர்களுடன் கூட்டுறவு கொள்ள மாட்டேன். உயர்ந்த மனப்பக்குவமுள்ளவர் களுடன் மட்டுமே உறவாடி மகிழ்வேன் என்றெல்லாம் கூறி அதற்குப் பின்னர் தான் திருமாலைத் தவிர வேறு தெய்வத்தைத் தொழமாட்டேன் என்கிறார் பொய்கையாழ்வார்.

பிறர் பொருளை விரும்பக்கூடாது. கீழ்மக்களோடு சேரக்கூடாது. உயர்ந்த பண் பினரோடு மட்டும்தான் உறவு (நட்பு) கொள்ள வேண்டும். இத்தகைய குணங்களைப் பெற்ற வர்கள் மக்களில் உயர்ந்தோராகி விடுகின் றனர். இந்தச் சிறந்த குணங்களை என்னுள்ளே நிரப்பிக் கொள்வதென யான் திட்டமிட்டு முயற்சியில் இறங்கிவிட்டேன். அதனால் திரு மாலைத் தொழக்கூடிய தகுதி என்னிடம் சேர்ந்துவிட்டது. எனவே பிறப்பு - இறப்பு, இன்பம் - துன்பம் இனி என்னை அண்டாது என பெருமைபொங்க கூறுகின்றார் பொய்கை ஆழ்வார்.

இறைவனைப் பணிவதற்கு நல்லொழுக் கம் பொறுமை சகிப்புத்தன்மை என்று ஒவ் வொரு சமயத் தலைவர்களும் முக்கியமாக வற்புறுத்தி வந்த காரணத்தால்த்தான் தெய்வ நம்பிக்கை மிகுந்திருந்த காலத்தில் பெரும் பான்மை மக்கள் நல்லொழுக்கசாலிகளாகத் திகழ முடிந்தது. கலியுகத்திலே மக்கள் இன்று தாம் நினைத்தவாறு எல்லாம் வழிபட லாம் என எண்ணுகிறார்கள். புதிய பாடல் களை வெளியிடுகிறார்கள். அதையெல்லாம் விடுத்து பன்னிரு திருமுறைகள் சைவ ஆல யங்களில் ஒலிக்கவும், வைணவ ஆலயங் களில் நாலாயிரத் திவ்விய பிரபந்தம் ஒலிக்க வும் யாம் முயற்சிக்கவேண்டும். புராண வர லாறுகளையும் மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டியது காலத்தின் தேவையாக உள் ளது. இதை உணர்ந்து சகலரும் செயற்பட வேண்டும்.

## ஏழ்மைக்கு இரங்கிடும் மனதை உருவாக்கு

உள்மனதை நீ என்றும் தூய்மையாக்கு
உணர்வு பூரா இறைவனையே நினைந்து போற்று
தெளிந்த மனதோடு இருந்து பாடல் கூட்டு
திசைமாறும் மனது கடிவாளம் பூட்டு
இல்லை என்பாரை இழிவாய் பேசிடாதே
இருப்பதைக் கொடுத்து அவரையும் தூக்கு
எல்லை இல்லா உலகம் ஏமாந்தும் விடாதே
ஏழ்மைக்கு இரங்கும் மனதை உருவாக்கு.

-சி. தனபாலசிங்கம்-

*அன்பளிப்பு பொருளைவிட அதை அளிக்கும் முறைதான் மதிப்பு மிக்கது.*

# 'ஆறு' எண்ணின் மகிமை

– செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் –

ஆறு என்ற சொல் எண்களில் ஒன்று, நதி, வழி, சிறிது நேரம் ஆறு (ஓய்வெடு) என்ற பொருளும் உண்டு. அல்லாமல் முகம் என்ற சொல்லுக்கு அடைமொழியாக வரும்போது ஆறுமுகம் என்ற பெயராகிறது. முருகனுக்கு ஆறு முகங்கள் இருப்பதால் ஆறுமுகம்(ன்) எனச் சொல்கிறார்கள். அது காரணப் பெயருமாகிறது. தவிர சுவைகள் ஆறு, பருவ காலங்கள் ஆறு, நமது உடலில் ஆறு ஆதாரங்கள் அமைந்துள்ளன. மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுக்தி, ஆக்ஞை எனப்படுபவையே அவை. நமக்கு காம, குரோத, லோப, மோக, மத, மாற்சரியங்கள் என ஆறு பகைவர்களுமுளர். ஆறு என்ற எண்ணுக்கும் முருகனுக்கும் உள்ள தொடர்புகளை அறிவோம்.

முருகனுக்கு முகங்கள் ஆறு.
முருகன் வளர்ந்தது சரவணப்பொய்கையில் ஆறு தாமரைப் பூக்களில்
பாலூட்டியது ஆறு கார்த்திகைப் பெண்கள்
அவன் வாழும் தலங்கள் ஆறு. அவை ஆறுபடை வீடுகள் எனப்படும்.

முருகனுக்குரிய மந்திரங்கள் ஆறு. ச ர வ ண ப வ.

இந்த ஆறு எழுத்து மந்திரத்தின் தத்துவப் பின்னணியைப் பார்ப்போம். நமது உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களுக்கும் அடையாளமாக விளங்குபவையே ஆறுபடை வீடுகள்.

1) மூலாதாரம்: திருப்பரங்குன்றம்
தெய்வயானையை திருமணம் செய்து உல்லாசமாக விளங்கும் தலம்.

2) சுவாதிஷ்டானம்: திருச்செந்தூர் (திருச்சீரலைவாய்)
சிந்தனையாகிய அலைகள் வந்து கோயிலின் மதிற்புறத்தில் மோதி, அலைபாயும் துன்பங்களைத் துடைத்தெறியும் இடம்.

3) மணிபூரகம்: திருவாவினன்குடி (பழநி)
ஞான தண்டபாணியாகக் காட்சியளிக்கும் யோக தலம்.

4) அநாகதம்: திருவேரகம் (சுவாமிமலை)
தந்தைக்கு இதமாக "ஓம்" என்பதன் உட்பொருளை விளக்கிய இடம்.

5) விசுக்தி: குன்றுதோறாடல் (திருத்தணி)
சல்லாபமாகக் குறிஞ்சி நிலமாகிய மலைகளில் விளையாடுகின்ற தலம்.

6) ஆக்ஞை: பழமுதிர்ச்சோலை
விநோதம்- பொழுதுபோக்காக ஞானப்பழம் உதிர்கின்ற சச்சிதானந்தசோலையாக விளங்குவது.

*விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை.*

"உல்லாச நிராகுல யோக இத

**சல்லாப விநோதனும் நீயல்லையே**" என இந்த ஆறுபடை வீட்டின் தத்துவங்கள் கந்தரநுபூதியில் அருணகிரிநாதரால் சொல்லப்பட்டுள்ளது.

முருகப்பெருமானை வழிபட்டால் நமக்கு வீடுபேறு கிடைக்கும். அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? இந்த வீடுபேற்றை அடையவிடாமல் தடுப்பவை காம, குரோத, லோப, மோக, மத, மாற்சரியங்களாகிய ஆறு பகைவர்களே. அந்த ஆறு பகைவர்களையும் அழிக்க வேண்டுமாயின் ஆறுமுகப்பெருமானுடைய ஆறெழுத்து மந்திரமாகிய சரவணபவ என்ற எழுத்துக்களை பலமுறை ஓதுவதுடன், ஆறுபடை வீடுகளையும் வழிபடவேண்டும்.

வண்ண வண்ணப் படங்களில், திரைச்சீலைகளில் ஆறு முகங்களோடு வள்ளி தேவயானையுடன் பச்சைப் பசிய தோகை மயில்மீது கையில் வேலுடனும், சேவற் கொடியுடனும் முருகனைக் காண்கிறோம். அழகிய முகங்கள், கருணை பொழியும் கண்கள் பார்த்துக்கொண்டே இருக்கலாம் நாம் அழகை ரசிக்கிறோமே தவிர அம் முகங்களின் திருக்குறிப்பை நம்மால் கண்டுகொள்ள, உணர முடிவதில்லை.

ஆனால் மூன்று அருளாளர்கள் முருகனை நேரில் கண்டவர்கள். ஆறு திருமுகங்களின் அழகையும், திருக்குறிப்பையும் கண்டவர்கள், ஆனந்த மிகுதியால் நக்கீரர் திருமுருகாற்றுப் படையையும், குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவையும், அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தையும் பாடி நமக்குத் தந்துள்ளனர். நக்கீரர் திருப்பரங்குன்றத்தில் திருமுருகாற்றுப்படையைப் பாடியபோது அதில் ஆறுபடை வீடுகளையும் வைத்துப் பாடியுள்ளார்.

நக்கீரர் கண்ட முருகன் திருச்செந்தூரில் முருகப்பெருமான் ஆறு முகங்கள் பன்னிரண்டு கைகளுடனும் ஒளிமிகுந்த மணிமுடிகளுடனும், கையில் வேலுடன் தேவசேனாதிபதியாக யானைமீதமர்ந்து தேவ துந்துபி, முரசம், சங்கு முழங்க எழுந்தருளியிருக்கிறாரெனக் கூறியவர் தொடர்ந்து கருணை பொழியும் ஆறு முகங்களின் திருக்குறிப்பையும் கூறுகிறார்.

1) இந்த உலகம் இருட்டில்லாமல் பிரகாசிக்கும் ஒளியாக விளங்குகிறது. ஒருமுகம்.
2) வரம்கேட்டு வரும் பக்தர்கட்கு வேள்வி செய்யும் அந்தணர்கள் பக்கம் ஒருமுகம்.
3) சந்திரனைப்போல் குளிர்மையாக திசைகளை விளங்க வைக்கும் ஒருமுகம்
4) பகைவர்களை அழித்து வெற்றிகொண்டு நலம் செய்யும் ஒருமுகம்.
5) குறமகள் வள்ளியை மணம்புரிந்து இன்புற்றிருக்கும் முகம் ஒன்று.

என நக்கீரர் கூறியுள்ளார்.

அடுத்து குமரகுருபரர் கண்ட ஆறுமுகங்கள்:

நக்கீரர்போல் முருகனின் திருமுகங்களின் குறிப்பை கந்தர் கலிவெண்பாவில் பாடியுள்ளதைக் கேட்போம்.

1) அசுரரான பகைவர்களை மாய்க்கும் வீரத்திருமுகம் ஒன்று.
2) சகல உயிர்களின் வினைகளை அழித்து அழியாத பேரின்ப வாழ்வைத் தரும் ஒருமுகம்.
3) வேத ஆகமங்களின் அரிய பொருளை நிறைவு செய்யும் ஒருமுகம்.
4) அஞ்ஞானத்தைப் போக்கி மெஞ்ஞானம் தருவது ஒருமுகம்.
5) வள்ளி தேவயானைக்கு மோகத்தைத் தருவது ஒருமுகம்.
6) தன்னுடைய திருவடிகளைத் தஞ்சமடையும் பக்தர்களுக்கு வரம் அருளுவது ஒருமுகம்.

*ஒரே இடத்தில் சேரும் மாறுபட்ட பாதைகள்தான் சமயங்கள்.*

இப்படியாக ஆறு திருமுகங்களைக் கொண்டுள்ளார் முருகன் எனக் கூறுகின்றார்.

மூன்றாவதாக அருணகிரிநாதரும் ஆறுமுகங்களின் அற்புதத்தைக் கூறுகின்றார்.

1) மயிலேறி விளையாடும் ஒரு முகம்.
2) ஈசனுக்கு ஞான உபதேசம் செய்தது ஒரு முகம்.
3) தன்னைத் துதிக்கும் அடியார்களின் வினைகளைத் தீர்க்கும் ஒரு முகம்.
4) குன்றைப் பிளக்கக் கையில் வேலேந்தியது ஒரு முகம்.
5) கொடிய குணமுடைய அசுரர்களை (சூரபன்மன்) வதைத்த முகம் ஒன்று.
6) வள்ளியைக் காதலித்து மணம் புரிந்தது ஒரு முகம்.

என ஆறு முகங்களின் பெருமையைச் சொன்னாலும், ஆறுமுகமாகக் காணு கின்ற பெருமையை நீதான் எனக்குச் சொல்ல வேண்டும் எனப் பணிகின்றார்.

இம்மூவரைத் தவிர, கந்தர்சஷ்டி கவசம் பாடிய பாலன் தேவராயர்,

**"......ஆறு முகமும் அணிமுடி யாறும், நீறிடும் நெற்றியும்,**
**நீண்ட புருவமும் பன்னிருகண்ணும் பவளச் செவ்வாயுமாகக்**
**...... கண்டிருக்கின்றார்.**

அருளாளர் மூவர்கண்ட ஆறுமுகப் பெருமானுடைய ஆறுமுகங்களின் சிறப்பையும் அறிந்துகொண்டோம். அன்பு, அருள், வீரம், ஞானம், கருணை, இன்பம், ஆகிய ஆறையும் முருகப்பெருமானுடைய ஆறுமுகங்களும் காட்டுவதாகக் கூறியுள்ளார்கள். ஏன் மனிதரிடமும் இவ் ஆறு குணங்களும் இருக்கவேண்டும். இருப்பின் பிறவித்துன்பம் குறைவாயிருக்கும்.

எல்லாப் பிறப்புக்களையும் எடுத்து ஆறுதல் இன்றி அலையும் நாம் மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமல் இருக்கவேண்டுமாயின் ஆறுதலைகள் உடைய ஆறுமுகப் பெருமானை யும், அவர் எழுந்தருளிய படைவீடுகளையும் வணங்கி அவன் அருளைப் பெற்று ஆறுதல் அடைவோமாக.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| **காசுக்கட்டளை** | **காசோலை** |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

E.mail: suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*பொருளை இழந்தவனுக்கு மிஞ்சியிருப்பது அனுபவம் மட்டுமே.*

# புண்பட்டா உடலும் புரைபடா மனமும்

– **திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** அவர்கள் –

அமைதி நிறைந்த இடமே பண்பாட்டுக் குரிய சிறந்த இடமாகும். இறையை வழிபடும் போது எமது மனம் கோயிலாகின்றது. சிந் தனையும் தூய்மை அடைகின்றது. சிந்தனை தூய்மை அடையும்போது நாம் நல்லவற்றை சிந்திப்போம். நல்லவற்றையே செய்ய முற்படு வோம். தீய வினைகளிலிருந்து தப்பித்துக் கொள்வோம்.

இன்றைய உலகத்திலே நாம் மன தால், உடலால், வாக்கால் பாவங்கள் செய்யச் சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு. இவை இழி செயல்களாம். இவற்றைச் செய்வோர் இழிந் தோர் ஆவர். இத்தகைய மக்களை நம்பினால், பின்பற்றினால் இம்மைக்கோ மறுமைக்கோ யாதொரு பயனும் கிடையாது.

இதனால்த்தான் வள்ளல் பெருமான் "உண்பவனே எனினும் உடுப்பவனே எனினும் உலகோரை நம்பேன்" எனக்கூறி வைத்தார்.

அப்பர் சுவாமிகள் என்றழைக்கப்படும் திருநாவுக்கரசர் என்ன கூறியுள்ளார் என்று பாருங்கள்.

மக்கள் மனதை ஆடவல்லான் நட மாடும் மன்றமாக்கினால், எல்லோரும் நல்லவர் களாக மாறும் வாய்ப்பு ஏற்படுகிறது, என்கிறார் அப்பர் சுவாமிகள் எனப்படும் வாகீசர்.

தெய்வத்தை அடைதற்பொருட்டே மனிதன் பிறக்கின்றான். பின் வாழ்கின்றான், மடிகின்றான். தெய்வத்தை அடையும் பரியந் தம் மனிதன் பிறப்பதும், வாழ்வதும், மடிவதும் சக்கரம் சுழல்வதுபோல் மாறி மாறி வந்து கொண்டிருக்கும்.

கடலை அடையும்வரை நதியானது ஓடிக்கொண்டிருக்கிறது, கடலை அடைந்ததும் நதியின் ஓட்டம் நின்று விடுகின்றது. அதே போல்தான் தெய்வத்தை அடையும்வரை மனி தன் பிறந்துகொண்டேயிருப்பான், வாழ்வான், மடிவான்.

தெய்வத்தை அடைந்ததும் மனிதனு டைய பிறப்பு முடிவை அடைகிறது. இந்த வகையில் மண்ணுலகில் பிறந்த மனிதன் அவன் எந்த இயல்பினை உடையவன் ஆயி னும் தெய்வீக இயல்பினை அடைதலே நோக்கமாகின்றது. அவ்வியல்பினைப் பெற்ற தும் அவன் தன்னைத் தெய்வத்தோடு ஒன்று படுத்துதலே இலட்சியமாக அமைகின்றது.

புண்படா உடம்பும், புரைபடா மனமும் பொய்படா ஒழுக்கமும் பொருந்தி, கண் உறங்காது இரவும் பகலும் இறைவனை எண் ணிப் போற்றினால் எமது மனம் தூய்மை பெறும்.

இதற்காகவே, இவ்வுயர் நிலையை நாமும் எய்தவே எமக்குப் பிரார்த்தனை அவசியமாகின்றது. பிரார்த்தனை மனதை புனிதமாக்குகின்றது.

மகாத்மா காந்தி ஒரு இந்துவாதலால் பிரார்த்தனையில் ஈடுபட்டது அதிகம். அவர் தனது அனுபவத்தைப் பின்வருமாறு கூறு கின்றார்.

*வெற்றியின் ரகசியம் எடுத்த செயலில் நிலையாக நிற்பதுதான்.*

"பிரார்த்தனையே என் வாழ்வை வள மாக்கி வருகிறது" அது இல்லாவிட்டால் வெகு நாட்களுக்கு முன்பே எனக்கு பைத்தியம் பிடித்திருக்கும்.

எனக்கு ஏற்பட்ட மனக் கலக்கங் களும், வேறு பல துன்பங்களும் நீங்க ஒப்பற்ற சாதனமாக இருந்தது பிரார்த்தனையே. முன்பு கடவுளிடத்திலும் பிரார்த்தனையிலும் எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. பின்னர் உடல் வளர்க்க உணவு எங்ஙனம் இன்றியமையாததோ அதுபோலவே உயிரை வளர்க்க பிரார்த்தனை மிக இன்றியமையாதது, என்னும் உண்மையை உணர்ந்து கொண்டேன். "அன்றுமுதல் நான் பிரார்த்தனை செய்யத் தவறுவதில்லை" இது மகாத்மா காந்தியின் மணிவாக்கு.

எமது மனதில் வீற்றிருக்கும் இறை வனை மறைக்கவல்ல மாயைத் திரையை அகற்ற அவசியமாகின்றது பிரார்த்தனை. தனித்திருந்து விழித்திருந்து மனதை ஒருவழிப் படுத்திப் பிரார்த்தனை செய்தால் உண்மை ஒளி பெறலாம்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் ஒளியின் சுடரில் சக்தியின் தரிசனத்தைக் கண்டவர். காளிதேவி தரிசனம் எனக்குக் கிடைக்கா விட்டால் என்னையே நான் மாய்த்துக் கொள் வேன் என்று கூறி ஒருசமயம் தன்னை மாய்த் துக் கொள்ள கைவாளை எடுத்தார். உடனே சக்தி சைத்தன்யம் அவருள் பாய்ந்தது. பின்னர் வாளுக்கு ஏது வேலை?

ஜன்மத்தின் பலனே ஜன்மநிவிருத்தி தான். ஜன்ம நிவிருத்திக்காகவே, மனித ஜன்மம் எமக்குக் கிடைத்திருக்கிறது. ஜன்மம் நிவிருத்தியடைய வேண்டுமானால் நாம் பாவம் செய்யக்கூடாது. பாவம் செய்யாதிருக்க கோபம் தவிர்க்கப்படல் வேண்டும். கோபம் போக்க உண்மை ஞானம் கிடைக்க வேண் டும். உண்மை ஞானமும் தெளிந்த அறிவும் கிடைக்கப் பிரார்த்தனை வழிகோலுகின்றது.

அடுத்து, பரம்பொருளைக் கண்டு அறிய, அன்பும் ஒரு சாதனமாக அமைகின் றது. அன்புக்கு அழிவு இல்லை. அழியாத ஒரு பொருளிடம் அன்பு வைத்தால் பிரச் சினையே இல்லை. சுவாமி எப்பொழுதும் எம்மிடம், எம்மோடு இருக்கிறார். எமக்கு எதிலும் வெற்றிதான்.

அழியும் பொருளில் நாம் வைக்கும் அன்பு அப்பொருள் அழிந்ததும் எத்துணை துன்பத்தை எமக்குத் தருகின்றது பாருங்கள்.

எனவேதான் அழியா வஸ்துவான பரம்பொருளிடம் நாம் அன்பு வைக்கவேண் டும். அவ்வண்ணம் வைத்தோமானால் நாம் துயரிலிருந்து தப்பி விடுவோம்.

பரம்பொருளிடம் நாம் வைக்கும் அன்பு சாசுவதமானது. நாம் அடுத்த பிறவி எடுத் தாலும் இறையே அதற்குக் காரணமாக இருந்து எம்மைக் காப்பாற்றுவார். அவரிடத்தில் அன்பு செய்தால் அது தன் வழியே சகல உயிர்களிடத்தும் எம்மை அன்புவைக்கச் செய் கிறது. ஈஸ்வர பக்தியே சகல பிராணிகளிடத் தும் அன்பாக மாறும்.

பிரார்த்தனை செய்வதோடு யாம் வாழ் வில் அகிம்சையையும் கைக்கொள்ள வேண் டும். அன்புக்கு அறிகுறி அஹிம்சை. அஹிம்சை என்று வெறுமனே வார்த்தையில் மாத்திரம் சொன்னால் போதாது. சொல்வது ஒன்று செய்வது ஒன்றாக இருக்கக்கூடாது. மனம் வாக்கு காயம் மூன்றினாலும் உயிர் களுக்கு இம்சை செய்யாமல் இருக்கவேண்டும் என சகல மதங்களும் கூறுகின்றன.

ஆனால் இன்று பல நாடுகளிலும் நடப்பது என்ன? ஆடு, மாடு, கோழி என்று ஆரம்பித்து பாம்பு, தவளை முதலியவற் றைக்கூடப் பிடித்துச் சாப்பிடுகிறார்கள். அன்று யாகம் செய்வது தப்பு அதில் ஜீவ இம்சை

*எதிர்ப்பே மனிதனை அறிவாளியாக ஆக்குகிறது.*

இருக்கிறது என்று போர்க்கொடி பிடித்தவர்கள் இன்று மறுவார்த்தை பேசாது மாமிசம் புசிக்கின்றார்கள். இப்படியே போனால் மனித இனம் உள்ளவரை அஹிம்சை என்னாவது? எனவே அன்பு காட்டுவதில் சொல்வீரர்களாக மாத்திரம் இருந்துவிடாது, செயலிலும் ஜீவகாருண்யம் காட்டியாக வேண்டும். எனவே புண்படா உடலும் பொய்படா மனமும் வேண்டின் நாம் நல்லவற்றை நாடி அல்லாதவற்றிற்கு அஞ்சி நடந்தாக வேண்டும். செய்வோமா?

## சந்நிதி வேலவனே சரணம் ஐயா

எந்நிதியும் அருளும் சந்நிதி வேலவனே!
உன் பதம் நாடி வந்தோம் சரணம் ஐயா
எல்லையில்லாக் கருணை இன்னமுதம் ஊட்டி
எம்துயர் தீர்த்திடுவாய் எங்கள் முருகா.

தொண்டைமானாற்றங்கரை தூய வெண் மணற்பரப்பில்
தூயவனே குடிகொண்டாய் எங்கள் முருகா
அண்டிவரும் அடியவர்க்கே நின் அபயக்கரம் நீட்டியிங்கு
ஆறுதலைத் தந்திடுவாய் அழகு முருகா.

தெள்ளுதமிழ்ப் பாமாலை உள்ளமதில் தொடுத்தே
உன்னடியில் சமர்ப்பித்தோம் எங்கள் குமரா
வண்ணமயில் தோகை விரித்தாடும் சோலையிலே
வாகனமாய் குடிகொண்டு வந்திடுவாய் இங்கு.

உன்னையே சரணென்று உறைந்திடும் அடியவர்க்கு
அன்னையும் நீயே முருகா அப்பனும் நீயே குமரா
ஆருயிரும் நீயே முருகா அடைக்கலமும் நீயே குமரா
ஆறுதலைத் தந்திடுவாய் எங்கள் முருகா.

அன்புமழை பொழியும் அறிவு மலர் சோலையிலே
அப்பனுக்குப் பிரணவத்தை உரைத்தவனே முருகா
தந்தைக்கு உபதேசம் செய்தவனே முருகா - எங்கள்
சிந்தையிலே குடிகொண்ட சுவாமிநாதா குமரா.

சூர சங்கரா சுடர்மிகு வடிவேலா
சூழ்ந்திடும் இருள்யாவும் களைந்திட ஓடிவா
தேவேந்திரன் மகளாம் தெய்வானை கரம்பிடித்தே
குறமகள் வள்ளியையும் கோல மணம் புரிந்தவரே!

தமிழுக்கு விளக்கமும் நீ தத்துவப் பொருளும் நீ
பிரணவமும் நீயே எங்கள் முருகா
அழகுக்குப் பொருளும் நீ அறிவுக்கு முதலும் நீ
ஆறுதல் தந்திடுவாய் எங்கள் முருகா

ஊற்றெடுக்கும் அருளே! உயிர் மூச்சும் நீயே!
காற்றுடன் கலந்ததிங்கு நின்னருளே முருகா
நாற்றினில் முளையாகி நாதத்தில் ஒலியாகி
போற்றிடும் அடியவர்க்கே புகலுமானாய் முருகா.

ஆற்றங்கரை அலைகூட உன் புகழைப் பாடுதையா
தேற்றிடுவாய் எங்களை நீ தமிழ்க் குமரா
அறுபடை வீட்டினிலே அழகுறக் குடி கொண்டாய்
எழும்படை அடக்கி பெரும் புகழ் தந்தவனே...

தேவரின் துயர் நீக்கிக் காத்தவனே முருகா
பாவிகள் மனம் மாற்றிப் பாங்குடன் வாழ வைப்பாய்
தர்மம் அழுகுதையா! அதர்மம் சிரிக்குதையா!
தரணியில் இந்நிலை மாற்ற ஓடிவருவாய் முருகா!

கற்பு நிறை மாதர் இங்கு கண்ணீர் சிந்தாதிருக்க
பொற்பு நிறை வாழ்வை பூமியிலே தந்திடுவாய்
பாவச் செயல் ஒழிந்து பாரினிலே அறம் தழைக்க
நீயும் இங்கே ஓடி வாராய் எங்கள் முருகா.

அறுபடை வீட்டினிலே குடி கொண்ட மன்னவனே
அண்ணனையே தூதாக்கி வள்ளியை வென்றவனே
ஞாலம் தழைத்திடவே நன்நெறிகள் ஓங்கிடவே
கோல முருகா இங்கு ஓடிவருவாய்.

-திருமதி மங்களேஸ்வரி சிவசிதம்பரலிங்கம்-


*பல அறிஞர்களுடன் உறவாடினால் நீயும் அறிஞனாவாய்.*

# அருட்சித்தர் குடைச்சுவாமிகள்

– **அ. நளினாசினி** அவர்கள் –

(22.02.2019 மாசிமாத கார்த்திகை நட்சத்திரம் சுவாமிகள் சமாதி தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை ஆக்கப்பட்டுள்ளது.)

கந்தையா எனும் இயற்பெயரைக்கொண்ட குடைச்சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் கோண்டாவிலில் குமரகோட்டம் எனும் இடத்தில் அவதரித்தார். ஏறிய நெற்றியும், நீண்ட தாடியும், எக்கல் வயிறும் வேட்டியை முழங்காலுக்குமேல் தூக்கிக் கட்டியபடி கக்கத்தில் ஒரு குடையுடன் கூனி நடந்து திரிபவர். மற்றவர்கள் உறங்கையில் அவர் விழித்திருப்பார். மற்றவர் விழித்திருக்க அவர் உறங்குவார். இரவு பகல் இல்லாமல் நடமாடுவார். இயல்பான கோலத்தில் காட்சியளிப்பார். தன்னை யாரெனக் காட்டாமல் எளிமையான தோற்றத்தில் வீதியில் அங்கும் இங்குமாகத் திரிவார். இவருடைய போக்குகளும் வாக்குகளும் புதுமையான புதிரானவை.



இவர் வைக்கோலை எடுத்து விரித்து அதன்மேல் படுத்திருப்பார். தோட்டத்தில் மாடு கட்டும் தொட்டிகளில் கிடப்பார், கொத்திவிட்ட, உழுதுவிட்ட தோட்ட நிலங்களில் கிடந்து புரள்வார், உருள்வார். ஒரே நேரத்தில் பல இடங்களில் இவரைக் கண்டதாக பலர் சொல்வார்கள். மருதனார்மடம் சந்தியில் நிற்பார். அதேவேளை கோப்பாயில் வீதியோரம் நடந்துபோவார். மோட்டார் வாகனங்களில் போகின்றவர்கள் இவரைப் பின் வல்லைவெளியில் கண்டதாகவும் கூறுவார்கள். படுக்கையில் படுத்தறியாத சுவாமிகள் புதரும் முட்செடிகளும் குறிப்பாக நாகதாளி முட்செடிகளின்மேல் கொதிக்கும் வெயிலில் குடையைப் போட்டுவிட்டு அதற்கு மேல் படுத்திருப்பார்.

விபூதி, உருத்திராக்கம் எதுவும் அணியாதவர், தலையில் மொட்டையோ, காவி உடையோ கொள்ளாதவர். இயம நியமங்கள், நேமநிட்டைகளென்ற சங்கற்பம் எதுவுமே இல்லாத மகான் பேச்சினாலும், ஏச்சினாலும், குடையால் அடித்தும், திருவடி தீட்சையாலும் நயன தீட்சையாலும்

அடியார்களுக்கு வாழ்வளித்தவர். சித்தத்திலே தெளிந்த சுவாமிகளினுடைய சில செயற்பாடு களை கேட்கும்போது எழுதும்போது சிந்தை எல்லாம் தித்திக்கும். ஏதேனும் துன்பம் நிகழ்ந்தால் அல்லது பிரச்சினை வந்தால் சுவாமிகளை நினைத்தால் அல்லது அவரைக் கண்டால் உடனே விலகிவிடும் என்பது அவருடன் வாழ்ந்த மக்களின் எண்ணம். சுவாமியைக் கண்டாலே நல்லகாரியம் ஏதோ நடக்கப்போகிறது என்று எண்ணுவார்கள்.

ஒருமுறை கதிரமலையான் என்பவருடைய மகளுக்கு விவாகப்பேச்சு பணமில்லாத காரணத்தால் தவிர்த்துவிட்டார் கதிரமலையான். சாமியார் காலையிலே வந்து அவருடைய மனைவியை அழைத்து எங்கே அந்த மடையன்? என்று உரத்த குரலில் கத்தினார். கடலுக்குள்ளாலே பணம் மிதந்து வருகின்றது. எம்பெருமானுக்குத் தந்தி கொடுத்திருக்கிறேன் எனத் திருவாய் மலர்ந்தருளினார். அடுத்தநாள் அவர் மனைவியின் மாமனார் ஓடிவந்து "நான் இப்பதான் மலேசியாவில் இருந்து வந்தேன். அத்தானை வந்த கல்யாணத்தைச் செய்யச் சொல்லுங்கோ, பணவிடயத்தை நான் கவனித்துக் கொள்கிறேன் என்றார். சுவாமியார் தந்தி கொடுத்தது இவர்களுக்குத்தான் என்று பின்பு அவருக்குப் புரிந்தது.

சுவாமிகளைப் பலர் பின்தொடர்வார்கள். ஆனால் சுவாமி யாரையும் திரும்பிப் பார்ப்பதில்லை. சிலரைக் கண்டால் சால்வையால் அல்லது குடையால் முகத்தை மறைத்துக் கொண்டு ஓடுவார். பல கார்ச் சாரதிகள் தங்களுடைய வாகனத்தில் சுவாமிகளை ஏற்றிச் செல்ல ஆசைப்படுவதுண்டு. ஆனால் சுவாமிகள் தனக்குப் பிடித்த காரை தானே மறித்து ஏறுவார். ஒருமுறை அன்பர் ஒருவருடைய வாகனத்தை மறித்து ஏறி சுவாமி அப்படிச் செல், இப்படித் திரும்பு என்று செல்ல வேண்டிய இடத்தைச் சொல்லாமல் வழியை மட்டும் காட்டிக்கொண்டிருந்தார். இடைவழியில் பெற்றோல் முடிந்துவிட்டது என்பதை உணர்ந்த சாரதி தயக்கத்துடன் அதைச் சுவாமிக்கு தெரிவிக்க "தொடர்ந்து ஓடு" எனக் கட்டளை இட்டார். பெற்றோல் இல்லாத வாகனம் தொடர்ந்து ஓடிற்று.

சுவாமிகள்மீது அளவுகடந்த காதல் கொண்டிருந்த இராசரத்தினம் அவர்கள் சுவாமிகளுக்கு கொடுப்பதற்காக ஒரு புதுக்குடை வாங்கி வைத்திருந்தார். சுவாமிகள் சமாதி அடைவதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்பு அவருடைய வீட்டிற்குச் சென்று குடையைக் கொண்டு வா எனக் கூறி தனது பழைய குடையை அவரிடம் கொடுத்துவிட்டு புதுக் குடையை வாங்கிச் சென்றார். இராசரத்தினம் அவர்கள் தன்னுடைய பேபி ஸ்ரூடியோவில் சுவாமிகளுடைய படத்தையும் குடையையும் ஆதரித்து வந்தார். ஒருமுறை விமானக் குண்டு தாக்குதலில் பேபி ஸ்ரூடியோ சிதலமடைந்த போதிலும் சுவாமிகளுடைய பெரிய படமும் குடையும் எவ்வித சேதம் இன்றி கம்பீரமாக நின்றது நினைவு கூரத்தக்கது.

குடைச்சுவாமிகள் இலந்தை மரத்திற்கு கீழ்நின்று சால்வையை தோய்ப்பது போல் பாவனை செய்து இடுப்பிலே கட்டிக் கொண்டு வேட்டியையும் கல்லிலே தோய்ப்பது போல அடித்துப் பிழிந்து இடுப்பில் கட்டி சால்வையை போர்த்துக்கொள்வார். இதை இலந்தைக் குளியல் என்று அவரே சொல்லிக் கொள்வார். சில சமயங்களில் புது ஆடைகளுடன் காட்சி தருவார். சில சமயங்களில் பழைய கந்தலான ஆடைகளுடன் காட்சி தருவார்.

சுவாமிகள் வாழும் காலத்திலேயே இராசரத்தினம் அவர்கள் சுவாமியுடைய படத்தினை கிருபா என்பவரின் உதவியோடு ஓவியம் தீட்டி, அதனைக் கந்தர்மடம் வீரசிங்கம் என்பவரிடம் காட்டினார். வீரசிங்கம்

அவர்கள் சுவாமிகளோடு நீண்டகாலமாக பழக் கத்தில் இருந்தவர். அவர் அவ் ஓவியத்தைப் பார்த்து எல்லாம் சரி, ஆனால் சுவாமி களுடைய ஆடைதான் காவி நிறத்தில் உள்ளது. சுவாமிகள் வெள்ளை வேட்டிதானே அணிபவர் என்று சொன்னார். அடுத்தநாள் காலை வீரசிங்கம் அவர்களின் வீட்டிற்கு காவி ஆடையோடு வந்து அவரை மெய்சிலிர்க்க வைத்தார்.

காங்கேயன்துறையிலே சோதி சுவாமி கள் என்பவர் குடைச் சுவாமிகளைச் சந்திக்கப் போனார். சுவாமிகளைத் தேடிப் பல தூரம் நடந்தார். குடைச் சுவாமிகள் தன்குடையை விரித்து அவருக்குப் பிடித்து, சோதி சுவாமி களைக் கௌரவப்படுத்தினார். இது அப்பரும் சம்பந்தரும் சந்தித்த காட்சிபோன்று இருந்த தாகக் குறிப்பிடுவார்கள். ஒருமுறை யோகர் சுவாமிகளைக் காண அன்பர்கள் வரிசையில் இருந்தபோது அவ்வரிசையில் குடைச்சுவாமி களும் இணைந்துகொண்டார். குடைச்சுவாமி களைக் கண்ட யோகர் சுவாமிகள் "உனக்கு இங்க என்னடா வேலை" எனக் கூறினாராம். ஸ்ரீமத் வடிவேற் சுவாமிகள், சபாரத்தினம் சுவாமிகள், முருகுப்பிள்ளை சுவாமிகள், மயில்வாகனம் சுவாமிகள், மகாதேவ சுவாமி கள், வைரவியார் சுவாமிகள் போன்ற பலரால் மதிக்கப்பட்டவர் குடைச்சுவாமிகள்.

**"நடக்கும் செயலில் எல்லாம் நடக்கும்"**
**"அருள்வான் அருள்வாக்கு"**
**"அறிவான் அருள்வாக்கு"**
**"அருள்பார் அருள்தெரியும்"**
**"எம்பெருமான் நடத்துவார்"**

போன்றன குடைச்சுவாமிகளின் மகா வாக்கியங்களாகும். இவர் மகா சமாதி அடை வதற்கு முதல்நாள் சென்னிப்பத்தையும், நந் தன கீர்த்தனையும் படித்துக் கொண்டிருந்தார். அன்று முழுமையும் "அருள்பார் பாஞ்சனன் யம்" என்று சொல்லிக் கொண்டே இருந்தார். வடிவேல் சுவாமிகளுக்கு "இந்தத் தூலத்துடன் இன்னும் ஆறு மணித்தியாலங்கள்தான் இருப் பேன்" எனக் கூறியவண்ணம் பிங்கள வருஷம் மாசி 2ஆம் திகதி (14.02.78) செவ்வாய்க் கிழமை கார்த்திகை நட்சத்திரத்தினன்று சமாதி நிலை எய்தினார். கோண்டாவில் அற்புத நர்த் தன விநாயகர் ஆலயத்தில் ஆசைப்பிள்ளை ஐயா தலைமையில் சுவாமிகளின் சமாதி வைக்கப்பட்டது. சுவாமிகளின் சமாதி வைக்கப் பட்டபின் 40 தினங்கள் சிறப்பு ஆராதனை இடம்பெற்றது. அன்று வெள்ளிக்கிழமை மாலைப்பூஜை சிறப்பாக நடந்து கற்பூர ஆரத்தியின்பின் சில அன்பர்கள் வீடு சென்ற பின் சில அன்பர்கள் சமாதி அருகில் இருந்து பாணலிங்கத்தைப் பார்த்தவண்ணம் இருந்தனர். அது நிறையப் பூக்களால் மூடப்பட்டிருந்தது. அழகான சிவப்புமலர் ரோஜா ஒன்று உச்சியில் இருந்து விழுந்து நிமிர்ந்து நின்றது. திடீரென சுவாமிகள் குடையுடன் தோளிற் சால்வை போட்ட முழுத்தோற்றத்துடன் காட்சி அளித் ததை வடிவேல் சுவாமிகள் கண்டிருக்கிறார். புறப்படும்போது இக்காட்சிபற்றி வடிவேல் சுவாமிகள் சில அன்பர்களுக்கு கூறும்போது அவ்வன்பர்கள் தாமும் இக்காட்சியைக் கண்ட தாகக் கூறி மெய்சிலிர்த்தார்கள்.

**காவித்துணி வேண்டா**
**கற்றைச் சடை வேண்டா**
**பாவித்தல் போதும்**
**பரமநிலை எய்துவதற்கே**
**எப்போதும் குரு சரணம்**
**நினைவாய் நெஞ்சே**

-மகாகவி பாரதி-

சித்தத்தைச் சிவன்பால் திருப்பி சித்தத்துள் குடிகொண்ட சித்தரை சிந்தையில் நினைத்தாலே இன்பம்.

*சிறந்த நூல்கள் விலைமதிக்க முடியாத பொக்கிஷம்.*

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிவனை இரு வினாவிடையினால் அளந்தார்

– **திரு பு. கதிரித்தம்பி** அவர்கள் –

திருமால் ஓரடியால் உலகை அளந்தார். வள்ளுவன் ஈரடியால் உலகை அளந்தார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இரு வினாவிடையினால் சிவனை அளந்தார்.

1) *வினா:* உலகத்துக்குக் கருத்தா யாவர்?

*விடை:* சிவபெருமான்.

2) *வினா:* சிவபெருமான் எப்படிப்பட்டவர்?

*விடை:* என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர்.

பாமர மக்களும் இலகுவில் விளங்கக் கூடிய எளிய தமிழில் விளங்க வைத்துள்ளார். சைவமும் தமிழும் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்த நாவலர் பெருமான் சிவன் எங்கும் நிறைந்தவர் என்ற உண்மையை வெளிக்கொண்டு வந்ததினால், வெளிநாடு களில் வாழ்கின்ற சைவத் தமிழர்கள் நன்கு உணர்ந்து, தாம் முன் வாழ்ந்த இடங்களில் உள்ள ஆலயங்களுக்கு நித்திய கருமங்கள் நிறைவேற பண உதவி வழங்கி வருகின்றனர். அது மாத்திரமன்றி, கோவில் திருப்பணிகளுக் கும் பணம் வாரி வழங்கி வருகின்றனர். இத னால் கோயில்களில் நித்திய நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. புலம் பெயர்ந்த தமிழர்கள் சிவன் "எல்லாம் அறி பவர்" என்ற தன்மையை உணர்ந்து வருடச் சந்தாப் பணமாக நித்திய கருமங்களுக்குப் பணம் செலுத்தி வருவதையும் பார்க்கின்றோம். சென்ற வருடம் இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கு ஐம்பதினாயிரம் ரூபா நித்திய கருமங்களுக்காக வெளிநாட்டு மக்கள் அனுப்பி வைத்ததை, பொதுமக்களும் நிரு வாக சபையினரும் போற்றுகின்றனர். நாவ லரின் கருத்தால் சிவனின் பெருமை உலகெங் கும் பரவியது.

சிவபெருமானின் அருட்செயலை மாங் குளம் ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரப் பெருமான் போர்த்துக்கீசப் பிரதானிக்கு அறிய வைத்தார். ஒருகால் ஏறக்குறைய ஐந்தாம் நூற்றாண்டளவில் போர்த்துக்கீசப் பிரதானி தான்தோன்றி ஈஸ்வரன் ஆலயம் வந்து (நந்தி பகவானை) கல்மாடு புல் தின்னுமா? என ஏளனமாகக் கேட்டு நாளை நான் வருகிறேன். உங்கள் கல்மாடு புல் தின்னாவிட்டால், இவ் ஆலயம் இடித்து, தரைமட்டமாக்கி எமது கோவிலைக் கட்டுவோம். இது உறுதி என்று சொல்லிப் போய்விட்டான். போர்த்துக்கீசப் பிர தானியின் வார்த்தையைக் கேட்ட பூசகர், ஏங்கி என்னசெய்வதென்று அறியாது, கண்களினின்று கண்ணீர் ஆறுபோல் பாய நட்டமரம்போல் நின்றார். பின் உணர்வுபெற்று ஆலயப் பெரு மான் முன்நின்று வேண்டுதல் செய்து, அன்று இரவு முழுவதும் தூங்காது விழித்திருந்தார். பொழுது விடிந்ததும் போர்த்துக்கீசப் பிரதானி தனது படைபட்டாளங்களுடன், கோயிலை

இடிக்கும் ஆயத்தத்துடன் நின்றான். அப்பொழுது பூசகர் ஒரு தாம்பாளத்தில் பசும்பால் தோய்த்த அறுகம்புல்லுடன் வந்து, நந்திமுன் நீட்டினார். என்ன அற்புதம்! என்ன அதிசயம்! கல்மாடு பெருமாடுபோல் உருவெடுத்து அறுகம்புல்லை தின்றது. அது மாத்திரமன்றி சாணமும் போட்டது. இச்செயலைக் கண்ட பிரதானி நடுநடுங்கி கண்ணீர் பெருக பூசகர் காலில் விழுந்து, மன்னிக்கும்படி மன்றாடினான். இக்கோவில் திருப்பணிக்கு ஏராளம் பணம் தருவதாகவும் வாக்குறுதி அளித்தான். அன்று தொடக்கம் அவன் சைவக் கோவில்கள் இடிப்பதை கைவிட்டான். தீரபுத்திரர் என்ற பெயரைக்கொண்ட பூசகர் அச்சுவேலி, இடைக்காடு, கொத்தவளவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தான்தோன்றி ஈஸ்வரன் இந்த அடியானின் மனைவியை இறக்கச்செய்து, மனக் குழப்பத்தை இவருக்கு ஏற்படுத்தி, இரு ஆண் குழந்தைகளுடன் ஊரை விட்டு வெளியேறி இறைவன் கனவில் சொன்ன தென்கிழக்குத் திசை ஒட்டுசுட்டான் என்னும் இடத்தையும் உணரவைத்து, அங்கு குடியமர வைத்து, பல அற்புதங்களைக் காட்டி சிவலிங்கத்தையும் காட்டி பூசை செய்ய வைத்தான் என்ற வரலாறு கூறுகின்றது. ஆறுமுகநாவலர் சிவனின் தன்மையைக் கூறியதுபோல் (எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர்) ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் நிகழ்வு நிகழ்ந்துள்ளது. இதனால் ஆறுமுக நாவலரை ஐந்தாம் குரவரென மக்கள் அழைக்கின்றனர்.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாண மக்கள் பணத்திற்கும் உத்தியோகம் பெறுவதற்காகவும் சைவ சமய மக்கள் மதம் மாறினார்கள். இதை உணர்ந்த சிவன் ஆறுமுக நாவலரைத் தோற்றுவித்து பிற சமயத்தவரின் பொய்ப்பிரசாரத்தில் மயங்கியவர்களுக்கு உண்மைநிலையை விளக்கி கண்டனப் பிரசாரம் செய்ததுடன் நில்லாது, பிரசுரங்களை அச்சிட்டு, மக்களுக்கு வழங்கி பிற சமயத்தில் சேர்வதைத் தடுத்து நிறுத்தினார். சிவபெருமானின் பெருங்கருணையினால் அறுபத்துமூன்று நாயன்மார்களுடன் யோகிகளும், சிவனடியார்களும் தோற்றம் பெற்றதுடன், பின்னாளில் நம் ஈழத்தில் செல்லப்பா சுவாமி, யோகர் சுவாமி- கடையிற் சுவாமி போன்றோரையும் தோற்றுவித்தார்.

எமது சமயம் சைவசமயம், சிவனை முதலாகக் கொண்ட சமயம். சிவனால் ஆக்கப்பட்ட சமயம் என்பதினால் வேண்டிய இடங்களில் வேண்டிய அடியார்களைத் தோற்றுவித்து சைவத்தை இறைவன் அழியாது காப்பாரென்பது திண்ணம்.

எனவே சைவசமயத்தவர்களாகிய நீங்கள் உங்கள் கடமைகளை மனச்சாட்சிப்படி செய்யுங்கள். எமது சமயத்தைக் காக்க கலியுக வரதன் செல்வச்சந்நிதியான் இருக்கின்றான். அவன் தொண்டைமானாறு ஆற்றங்கரையில் இருந்து வரும் அடியவர்கள் துயர் நீக்கி அருள் வழங்கி வருகிறான். வினையை நீக்கும் தலமாக செல்வச்சந்நிதியான் ஆலயம் விளங்குகின்றது. அரிய பிறவியெடுத்த மானிடர்களே! இனியாவது இறக்கும்போது மண், பொன், பெண் ஒன்றும் எம்முடன் வராது நாம் செய்த பாவ புண்ணியங்கள் மட்டும் வரும் என்ற உண்மையை உணருங்கள். தினமும் செல்வச் சந்நிதியான் ஆலயம் சென்று இறைபணி செய்யுங்கள். சந்நிதியான் எந்நிதியும் தருவான், நின்மதியையும் தருவான். ஆறுமுகநாவலர் கூறிய சிவனின் பெருமையை உணர்ந்த நீங்கள் தினமும் இப்பாடலைப் பாடுங்கள்.

**"ஆடும்பரிவேல் அணி சேவலென**
**பாடும் பணியே பணியாய் அருள்வாய்**
**வீடுபேறு பெற சந்நிதியான் அருள்வான்**
**சிவனடியான் ஆறுமுகநாவலர் வழியில் நடப்போம்"**

இன்பமே சூழ்க; எல்லோரும் வாழ்க!

*புத்தகங்கள் காலம் என்னும் கடலின் கரையிலே நிறுத்தப்பட்டுள்ள கலங்கரை விளக்கங்கள்.*

# இராவணனுக்குச் சிவன் அருளிய ஆத்மலிங்கம்

– **ஆர்.வீ. கந்தசுவாமி** அவர்கள் –

விச்சிரவசு முனிவர் மிகச் சிறந்த மகிமையுள்ளவர். இம்முனிவருக்கும் கேகசி என்ற அரக்கிக்கும் பிறந்தவன் இராவணன்.

இவன் ஒரு கொடுமையே வடிவானவன். அவனுக்குப் பாவம் என்றால் பால், பாயாசம். அக்கிரமம் என்றால் அதிரசம். காமாதுரனாக வாழ்ந்தான். தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பெரும் கொடுமைகள் செய்து இலங்கையை கொடுங்கோல் ஆட்சி புரிந்து வந்தான். முள்ளுக்கு இடையே றோசா மலர் இருப்பதுபோல் இவனுடைய கொடுமைகளுக்கு இடையே சிவபக்தி இருந்தது.

இராவணன் ஒரு சமயம் திருக்கயிலாய மலைக்குச் சென்று சிவபெருமானை வணங்கி நின்றான்.



"எம்பெருமானே! ஆலமுண்ட மணி கண்டனே! அடியேன் நித்திய வழிபாடு செய்ய ஆத்துமலிங்கம் ஒன்று தந்தருள வேண்டும் எனப் பணிந்து நின்றான். வேண்டியவர்களுக்கு வேண்டியன வற்றை வேண்டியவண்ணம் வழங்கும் வள்ளல் பரமேஸ்வரன். அவனுக்கு ஆத்ம லிங்கம் ஒன்றை அளித்தருளி னார். பரமேஸ்வரன் "அப்பா ராவணா! இந்தச் சிவலிங்கத்தை இலங்காபுரியில் வைத்தால், இலங்காபுரி ஒருகாலும் அழியாது ஓங்கி செழிப்புற்று இருக்கும். இதனை லங்காபுரிக்கு கொண்டு செல் வாயாக. இடையில் எங்கும் வைக்கக் கூடாது. வைத்தால் திரும்ப எடுக்க முடியாது என்று கூறினார். இராவணன் ஆத்ம லிங்கத்தைப் பெற்றுக்கொண்டு இலங்கையை நோக்கி வந்து கொண் டிருந்தான். இந்திராதி தேவர்கள் முனி வர்கள் இதனையறிந்து பயந்து நடுங் கினார்கள். இந்த ஆத்மலிங்கம் இலங்கா புரியில் வைக்கப்பெற்றால் இராவணனும்

இலங்காபுரியும் அழிய முடியாதே; உலகங்கட்கும் பெருந்தீங்கு விளையுமே! நாம் என்ன செய்வோம்? என்று எண்ணி எண்ணி ஏங்கினார்கள். பிரமதேவரிடம் சென்று முறையிட்டார்கள். பிரமதேவர் திருமாலிடம் சென்று முறையிட்டார். அரவணையில் துயில் புரியும் திருமால், இதற்கு நாம் செய்யத்தக்கது யாது? எனச் சிறிது நேரம் சிந்தித்தார். அடியார்களின் இடர்களைக் களையும் விநாயகப் பெருமானை வழிபட்டால் இந்த இடர் நீங்கும் என்று கருதி முடிவு செய்தார்.

திருமாலும் திசைமுகன் முதலிய தேவர்களும் விநாயகப்பெருமானை வேண்டித் துதித்தனர்.

விக்ன விநாயகனே கருணையங் கடலே! அடியவர் இடர்களையும் ஐந்து கரத்து அண்ணலே! கொடியவனாகிய இராவணன் திருக்கயிலாய மலையில் சிவபெருமானிடம் இருந்து ஆத்ம லிங்கம் ஒன்று பெற்றுக் கொண்டு இலங்கையை நோக்கிப் போகிறான். இலங்காபுரி அழியாது. அக்கிரமங்கள் கொடுமைகள் அதிகமாகும். எம்பெருமானே இவ் வேளையில் அருள்புரிந்து எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கூறி முறையிட்டனர். விநாயகப் பெருமான் அவர்கள்மேல் இரக்கம் கொண்டு அவர்கள் முன்தோன்றி அருளினார்.

இந்திராதி தேவர்களே, வானவர்களே, முனிவர்களே நீங்கள் வருந்தவேண்டாம். நாம் அருள் புரிவோம் என்று கருணை புரிந்தார்.

விநாயகப் பெருமான் இராவணன் வயிற்றிலே ஏழு நதிகளையும் பெருகுமாறு கட்டளையிட்டருளினார். இராவணனுடைய வயிற்றில் நீர் நிரம்பி வயிறுமுட்டித் துன்பமுற்றான். சிவலிங்கத்தைக் கையில் வைத்துக் கொண்டு சிறுநீர் கழிக்கக்கூடாது. சிவலிங்கத்தையும் கீழே வைக்கக்கூடாது என் செய்வேன். மிகவும் வருத்தம் அடைந்தான், திண்டாடினான். அங்கே விநாயகர் ஒரு சிறிய அந்தணச் சிறுவனைப்போல் வந்தார். இராவணன் "அப்பா! மறைச் சிறுவனே! இந்த லிங்கத்தை வைத்துக் கொள். நான் சிறுநீர் கழித்துவிட்டு வந்து பெற்றுக்கொள்கிறேன்" என்றான்.

அந்தணச் சிறுவன் "ஐயா! நான் பாடசாலை போகின்றேன். அதிக நேரம் தாமதிக்க முடியாது" எனக் கூறினான்.

இராவணன் "சிறுநீர் கழிக்க அதிக நேரம் ஆகாது. விரைவில் வந்து விடுவேன்" எனக் கூறினான். வேதியச் சிறுவன் "மூன்று முறை அழைப்பேன், அதற்குள் வரவில்லை ஆனால் லிங்கத்தை நிலத்தில் வைத்துவிடுவேன்" என்றான்.

சரி என்று கூறிய இராவணன் சிவலிங்கத்தை அச் சிறுவன் கையில் கொடுத்துவிட்டு ஒதுக்குப்புறத்தில் சிறுநீர் கழிக்கச் சென்றான். சிறுநீர் பெருகிக்கொண்டே இருந்தது. அதை நிறுத்த முடியாது அல்லல் உற்றான்.

அந்தணச் சிறுவன் "ஏ பத்துத் தலையனே முதலாம் முறை! ஏ பத்துத் தலையனே இரண்டாம்முறை! ஏ பத்துத் தலையனே மூன்றாம் முறை! என்று கூறிவிட்டுக் கீழே லிங்கத்தை வைத்துவிட்டான். இராவணனுக்கு சிறுநீர் நின்றுவிட்டது. அவன் நீராடிவிட்டு வந்து அச்சிறுவனைப் பார்த்து வெகுண்டான். அச் சிறுவனின் தலையில் ஓங்கிக் குட்டினான்.

சிவலிங்கத்தை எடுக்க முயன்றான். அது முடியவில்லை. இருபது கரங்களாலும் வலிந்து எடுக்க முயற்சித்தான். அச்சிவலிங்கம் பசுவின் காதுபோல் குழைந்துவிட்டது. மிக்க வருத்தத்துடன், வெறும் கையுடன் இலங்காபுரி வந்தடைந்தான்.

பசுவின் காதுபோல் குழைந்தபடியால் "கோகர்ணம்" எனப் பெயர் பெற்றது. இராவணனால் லிங்கத்தை எடுக்க முடியாமல் போனபடியால் இறைவனை மகாபலேசுரர் என்றும் இறைவியை கோகர்ணநாயகி என்றும் அழைக்கின்றார்கள்.

*நாட்கள் கற்றுத் தராததை வருடங்கள் கற்றுக்கொடுக்கின்றன.*

மேற்குக் கரையில் இன்றும் இத்தலம் பூலோக கைலாயமாக விளங்குகின்றது. அங்குள்ள விநாயகருடைய தலையில் காற்படி சந்தனம் பிடிக்கும் அளவில் குழியுள்ளது. இத்தலம் மிகவும் புனிதமானது.

திரு அங்கமாலை என்னும் பதிகத்தில் அப்பர் பெருமான் பின்வருமாறு பாடியுள்ளார்.

கால்களால் பயன் என்? கறைகண்டன் உறைகோயில்
கோலகோபுர கோகர்ணம் சூழாக் கால்களால் பயனென்?

இராவணனுக்கு விநாயகர் காட்சி கொடுத்து நீ கவலைப்பட வேண்டாம். இச்சிவலிங்கம் இங்கே இருந்து அருள்பாலிக்கட்டும் என்று கூறி அருளினார்.

"முடியாதவனை மன்னித்துவிடு, விரும்பாதவனைத் தண்டித்துவிடு" என்பது சமுதாயக் கோட்பாடு. தன்னால் செய்ய முடிந்த ஒன்றைச் செய்ய விரும்பாதவன் சமுதாய விரோதி. ஆனால் அதே காரியத்தைச் செய்ய விரும்பியும் செய்ய முடியாதவன் அனுதாபத்துக்குரியவன். நாடிழந்த பாண்டவர்கள் துரியோதனனிடம் கேட்டது என்ன? "குறைந்த பட்சம் வாழ ஊர்களாவது, வீடுகளாவது கொடுங்கள்" என்றுதான். செய்ய முடியாதா துரியோதனனால்? முடியும். ஆனால் விரும்பவில்லை. அதன் விளைவே பாரதப்போர். அனுமானும், விபீஷணனும் கூறியபடி சீதையைத் திரும்பக் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்திருக்க முடியாதா ராவணனால்? முடியும்.... ஆனால் விரும்பவில்லை. அதன் விளைவே ராம - ராவண யுத்தம். "அறஞ்செய விரும்பு" என்றார் ஔவைப் பாட்டி. "செய்" என்று வற்புறுத்தவில்லை. "விரும்பு" என்றுதான் சொன்னார். அதன் காரணம் செய்ய முடியாதவர்கள்கூட விரும்பினால் போதும். அதுவே கருணையின் பரப்பளவாக விரிந்துவிடும். யூதர்களை ஹிட்லரால் மன்னித்திருக்க முடியாதா? போரின் நாசத்தை அவன் தடுத்திருக்க முடியாதா? எல்லாவற்றையும் தவிர்க்கக் கூடியதாக இருந்தபோதிலும், அவன் அதை விரும்பவில்லை. விளைவு... மற்றவர்களை அவன் எப்படி நடத்தினானோ, அப்படியே இறைவன் அவனை நடத்தினான்.

வண்டி மாட்டை நீ ஒரு அடி அடித்தால், அதற்குப் பதிலடி உனக்குக் கிடைக்கும். ஆனால் அதற்கு நீ வைக்கோல் போட்டால்கூட, அதற்குக் கைமாறாக ஒரு கவளம் சோறு உனக்குக் கிடைக்க இறைவன் வழிவகுப்பான்.

எனவே விரும்பு, முடிந்தால் செய். முடியாவிட்டால் விரும்பிக்கொண்டே இரு. "விரும்பு" என்றதுமே விபரீதமாக நினைத்துவிடாதீர்கள், அதன் பெயர் "விருப்பம்" அல்ல "ஆசை". விரும்புவது என்ற வார்த்தை நல்லனவற்றை விரும்புவதையே குறிக்கும்.

மண்ணுலகத்திலிருந்து நாம் விண்ணுலகத்து சொர்க்கத்துக்குச் செல்வது சாதனையல்ல. மண்ணுலகத்தையும் சொர்க்கமாக மாற்றுவதே சாதனை.

*செய்த வினையும், செய்கின்ற தீவினையும் ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறையாது.*

# பறம்பு மலை பாரிவள்ளலின் பரிவு

– திருமதி ஜெகவதனராசா அவர்கள் –

தென் இந்தியாவிலே பறம்பு என்னும் மலைநாட்டிலே பல நூற்றாண்டுகளுக்கு முன் முந்நூறு சிற்றூர்கள் வரையில் பாரிமன்னன் ஆண்டு வந்தான். பாரி வள்ளல் ஏழைகளுக்கு இல்லை என்னாது வாரி வழங்கும் கொடை வள்ளல். கருணைமிக்க மன்னன் இந்தப் பாரி. இம்மன்னனிடம் வறுமையினால் பீடிக்கப்பட்டோர் அங்கு சென்று பொன்னும் பொருளும் பெற்று வளமாக வாழ்வர். நல்ல பைந்தமிழ்ப் பாக்களை இயற்றிவரும் ஏழைப் புலவர்கட்கு முந்நூறு சிற்றூர்களையும் பரிசாகப் பாரி கொடுத்து மகிழ்ந்தான்.

மக்களிடம் இரக்கம் காட்டுவதுபோல செடி கொடி தாவரங்கள்மீதும் அளவு கடந்த கருணைகாட்டி வந்தான். ஒரு பயணம் காட்டு வழியே தனது தேரைச் செலுத்தி சென்று கொண்டிருக்கும்போது செழித்து வளர்ந்து படர்வதற்கு கொழு கொம்பின்றி குழைந்து கிடந்த முல்லைக்கொடி தவித்ததைக் கண்ட மன்னன் தேரினின்றும் குதித்து அதற்கு உறுதுணையாகப் பற்றிப் படர தனது பொற் தேரை நிறுத்திவிட்டு கால்நடையாக நடந்து தனது அரண்மனைக்குச் சென்றான். அவ்வளவு கருணை நிரம்பியவன் இந்தப் பாரி மன்னன்.

இம்மன்னனுக்கு அழகிய இரண்டு புத்திரிகள் உண்டு. அவர்கள் அங்கவை. சங்கவை எனப் பெயருடையவர்களாவர். இவர்களை மணம்புரிய விரும்பிய சேர சோழ பாண்டியர்கள் பாரியிடம் தூதனுப்பினர். பாரி சம்மதம் தெரிவிக்காது மறுத்துவிட்டான். அதனால் ஆத்திரம் அடைந்த சேர சோழ பாண்டியர்கள் பாரி மன்னனுடன் போர் புரிய படை திரட்டினர். அவர்கள் பெரும் படை திரட்டி பறம்பு மலையை முற்றுகையிட்டனர். அவர்கள் உள்ளேயோ வெளியேயோ செல்ல முடியாதவாறும் எவ்வித உணவு வகைகளும் உள்ளே செல்லவிடாது தடுத்தனர். இதனால் இவர்கள் உணவிற்கு யோசிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. பாரிக்கு உற்ற நண்பர் கபிலர் என்ற புலவர். அவர் கிளிகளை பழக்கி உணவிற்காக நெற்கதிர்களை எடுப்பித்துக் கொடுத்தார்.

அரசர்களிடமும் சென்று அரசர்களே உங்களது போர் தொடுப்பினால் எனது நண்பன் பாரி அஞ்சவும் மாட்டான். பணிந்து வரவும் மாட்டான். மக்களின் அன்பை பெற்றவன் இம்மன்னன். மக்களே அவனுக்காகப் போர் தொடுப்பர். பறம்பு மலையிலே நெல் விளைகின்றது. அதி சுவையுடைய பலாக் கனிகள் இருக்கின்றன. தேவையான அளவு தேன் இருக்கின்றது. பாரியிடம் கொண்ட அளவற்ற அன்பினால் கிளிகள் நெற்கதிர்களை அறுத்து வருகின்றன. ஆகவே நீங்கள் போர் தொடுத்து முற்றுகை இட்டு பணிய வைக்கலாம் என்று நினைப்பது தவறு. அந்த எண்ணம் பகற்கனவாகும் என பாரியின் வீரத்தையும் கொடையையும் கருணையையும் எடுத்துரைத்தார். நீங்கள் இப்படிச் செய்வதை விடுத்து தமிழ்ப் பாக்களை பாடிக்கொண்டு சென்று பறம்பு மலையை பரிசாகக் கேட்டால் தருவான். தயங்கவே மாட்டான் என கூறினார். கபிலர் நினைத்தது ஒன்று நடந்தது வேறொன்று. அப்படி அவர் கூறியது மூவேந்தரையும் இழிவுபடுத்தியது. அவர்கள் முற்றுகையை நிறுத்தி தம்மூர் செல்வர் என கபிலர் நினைத்தார். ஆனால் பாரியுடன் நேருக்கு நேர் நின்று வெல்லமுடியாத சேர சோழ பாண்டியர்கள் வஞ்சனையால் அம்மன்னனைக் கொல்ல முயன்றனர்.

*கலங்காத [illegible]ம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.*

பாணர்களைப்போன்று வேசம் தாங்கி அரண்மனைக்கு உள்ளே சென்று பாரியுடன் போர் செய்து பாரியைக் கொன்றனர். தனது சிந்தனையற்ற செயல் தன் நண்பரின் உயிருக்கு யமனாக மாறியதை எண்ணி எண்ணி கபிலர் மனம் புண்படலாயிற்று. தந்தையை இழந்து தவித்த பெண் பிள்ளைகள் அங்கவை சங்கவை இருவரையும் அநாதைகளாக்காமல் தானே அழைத்துச் சென்றார். பலர் அவர்களை மணக்க விரும்பியும் சேர சோழ பாண்டியர்க்குப் பயந்து மணக்க முன்வரவில்லை. தனது செய்கையால் வேதனையுற்ற கபிலர் நோய்வாய்ப்பட்டு இறக்கும் தறுவாயில் ஔவையாரிடம் பொறுப்புக்கொடுத்துவிட்டு கபிலர் இறந்துவிட்டார். செய்வதறியாது திகைத்த ஔவையார் ஒருவாறு மனம் தெளிந்து அப் பெண்கள் இருவரையும் திருக்கோவலூர் மன்னனுக்கு மணமுடித்துக் கொடுத்துத் தனது கடமையைச் செவ்வனே நிறைவாக்கினார். அப் பெண்களும் தந்தை போன்று இரக்கமுள்ளவர்களாக அன்புள்ளவர்களாக இனிதே வாழ்ந்தனர்.


நமக்கெல்லாம் நோய் வந்தால் மருத்துவர்களையும் மருந்துகளையும் நம்புகின்ற அளவுக்கு நாமெல்லாம் பிரார்த்தனைகளை நம்புவதில்லை. ஆனால் பிரார்த்தனை எவ்வளவு வலுவானது என்பதற்குப் பாம்பன் சுவாமிகளது வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவமே சான்று. 1923ஆம் வருடம் டிசம்பர் மாதம் 27ஆம் திகதி வியாழக்கிழமை சுவாமிகள் தெருவிலே நடந்து சென்றுகொண்டிருந்தார். வேகமாக வந்த குதிரை வண்டி ஒன்றின் சக்கரம் அவரது காலில் ஏறியதால் கணுக்கால் எலும்பு முறிந்தது. உடனே சுவாமிகளை மருத்துவமனையில் சேர்த்த பக்தர்கள், அவரது பக்கத்திலே இருந்து ஷண்முக கவசத்தைப் பாராயணம் செய்தபடி இருந்தனர்.

"ஏரகத்தேவன் என்தான் இரு முழங்காலும் காக்க
சீருடைக் கணுக்கால் தன்னைச் சீரலை வைத்தே காக்க"

என்ற வரிகளை மீண்டும் மீண்டும் பக்தியுடன் உள்ளமுருகப் பாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது சுவாமிகளது கால்கள் அருகினிலே ஜொலி- ஜொலித்துக்கொண்டு இரண்டு வேல்கள் இருப்பதை சுவாமிகளும் ஒருசில பக்தர்களும் கண்டு மெய்சிலிர்த்துப் போனார்களாம். அங்கே இரண்டு மயில்கள் நிற்பதைக் கண்ட பாம்பன் சுவாமிகள் அந்த மயிலின் கால்கள் நிலத்தில் படாமலிருப்பதைக் கண்டு ஆனந்தத்தில் திளைத்தார். சிகிச்சை முற்றாக முடிவடையும் முன்னரே சுவாமிகளின் கால்களில் முறிந்த எலும்புகள் ஒன்றாகச் சேர்ந்ததை மருத்துவர்கள் ஒரு அதிசயமாகவே கருதினார்கள். மயில்களைத் தான் கண்ட அந்த நாளை "மயூரவாகன சேவனம்" என்று பெயரிட்டு தனது வாழ்நாள் முழுவதும் கொண்டாடி வந்தார் பாம்பன் சுவாமிகள்.

நோயைத் தீர்க்க மருந்துமட்டும் போதாது. மந்திரமும் தேவை. அதற்காக மந்திரம் மட்டுமே போதும் என்று பொருள் கொள்ளக்கூடாது. மந்திரத்தால் கிடைக்கும் இறையருளால் நோய்க்குக் காரணமான பாவம் தீரும். நாம் உட்கொள்ளும் மருந்தால் நோய் குணமாகும்.

# படங்கள் தரும் பதிவுகள்



ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



உண்மையாகத் தியா செய்வதினால் மட்டுமே பிறரின் உள்ளங்களை வெல்ல முடியும்.



ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



உங்களை அதிகமாகச் சிந்திக்க வைக்கும் புத்தகங்கள் உங்களுக்கு உதவி புரிபவை.



சமுதாயப் பணிகளின் வரிசையில் வறுமைக்கோட்டின்கீழ் உள்ளவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டபோது...



*புத்தகங்கள் சிந்தனைக்கு விருந்தாகும் புனிதப் பொருட்கள்.*



சமுதாயப் பணிகளின் வரிசையில் வறுமைக்கோட்டின்கீழ் கல்வி கற்கும் மாணவருக்குத் துவிச்சக்கரவண்டியும், உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலையம் சார்பான முன்பள்ளியின் கலை விழாவிற்கான பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டபோது...



கோபம் என்பது பிறர் செய்யும் தவறுக்கு உனக்கு நீயே கொடுத்துக்கொள்ளும் தண்டனை.



சமுதாயப் பணிகளின் வரிசையில் கல்வி ஊக்குவிப்பிற்காக ஸ்பிரிங்வெலி- பண்டாரவளை கோட்டக்காடு தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டபோது...



(தொடர் -16)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமனான தும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு என்பது விஞ்ஞானத்தின் ஒரு விதி (நியூற்றனின் மூன்றாம் விதி)

எதைச் செய்தாலும் அதற்கு ஒரு விளைவு இருக்கிறது. அடித்த பந்து நம் மிடமே திரும்பி வருகிறது. அமைதியான நீரில் கல்லை எறிந்தால் அலைகள் தோன்றி நான்கு திசைகளிலும் பரவுகிறது. எந்தச் செயலுக்கும் ஒரு விளைவு இருக்கிறது. ஒரு செயலைச் செய்பவன் அதன் விளைவுகளிலிருந்து தப்பி விட முடியாது. ஒருவன் செய்கின்ற செயல் எதுவாயினும் அதற்குப் பொறுப்பேற்க வேண்டிய வனாக இருக்கிறான். "முற்பகல் செய்தது பிற்பகல் விளையும்" என்கிறார்கள். குற்றங் களுக்குத் தண்டனை உண்டு. நல்ல செயல் களுக்கு வெகுமதியும் உண்டு. தினை வி[illegible]தவன் தினை அறுக்கிறான். வினை வி[illegible]வன் வினை அறுக்கிறான். "விதை ஒன்று [illegible] சுரை ஒன்று முளைக்காது" எனச் சொல்லுவ[illegible]கள். எதை விதைக்கிறோமோ அதைத்தான் அறுவடை செய்யமுடியும்.

இந்துமதம் கர்ம பலன் என்று கூறு வதும் இந்த அடிப்படையில்த்தான். சற்றுத் தெளிவாகப் பார்த்தால் இந்துமதம் சொல்லு கின்ற பல வாழ்க்கை உண்மைகளை நம் முடைய அன்றாட அனுபவங்களிலேயே உணர்ந்துகொள்ள முடியும்.

எனக்குத் தெரிந்த வர்த்தகர் ஒருவர், தொழிலில் நாணயமாக நடப்பவர். தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு தாராளமாக உதவு வார். அறுசுவை உணவை அவர்களுக்கு அளித்து, அவர்கள் உண்பதைப் பார்த்து மகிழ்வார். ஆனால் வாயார, வயிறார அவரால் உணவு சாப்பிட முடியாது. நீரிழிவு, குருதி அமுக்கம் நோய். செல்வத்தில் புரண்டும் சாப் பிட முடியவில்லை. கொடுத்து வைக்க வில்லை என்கிற சொல்லிலே அர்த்தமுள்ளது. முற்பிறப்பில் கொடுத்து வைத்திருந்தால்த்தான் இந்தப் பிறப்பில் சாப்பிடமுடியும்.

வசதிபடைத்தவர்கள் எல்லாம் மகிழ்ச்சி யாக இருக்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. வசதி வேறு, மகிழ்ச்சி வேறு. ஆயிரம் பஞ்சு மெத்தைகளை விலை கொடுத்து வாங்கிவிடலாம். ஆனால் தூக்கத்தை விலை கொடுத்து வாங்க முடியுமா? இறைவன் உங் களை அனுமதித்தால்த்தான் நீங்கள் தூங்க முடியும். தூக்க மாத்திரைகள் செயற்கையாக தூக்கத்தை உண்டாக்கலாம். ஆரம்பத்தில் ஒன்று சாப்பிட்டால் தூக்கம் வந்துவிடும். பிறகு இரண்டு, மூன்று என்று ஏறிக்கொண்டே போகும். பின்னர் எத்தனை எடுத்தாலும் தூக்கம் வராது. அளவுக்கு அதிகமாக எடுத்தால் நிரந்தரமான நித்திரைக்கு இட்டுச் சென்றுவிடும்.

எத்தனை செல்வந்தர்களால் தூங்க முடிகிறது. இரவில் யாழ்ப்பாணம் பெரிய கடைப் பகுதியை சுற்றி வாருங்கள். வானமே கூரையாக, பூமியே பாயாகக் கொண்டு படுத் திருக்கும் ஏழைகள், இந்த உலகையே மறந்த நிலையில் நித்திரை செய்வதைக் காணலாம்.

எனது ஆசிரியர் ஒரு தடவை "எவன் படுத்தவுடன் நித்திரை போகிறானோ, அவன் நிம்மதியான ஆத்மா" என்றார். ஆக, ஒருவன் மகிழ்ச்சியாக இருப்பதற்கு இறைவனின் அருள்

*நல்ல நட்பை இழப்பதைவிட கொஞ்சம் பணத்தை இழப்பது மேல்.*

தேவைப்படுகிறது. முற்பிறப்பில் பட்ட கடனை சிலர் தூங்காமல் விழித்திருந்து அடைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நித்திரை கடவுள் தந்த வரம். இவ் வாறுதான் குழந்தையும் கடவுள் தரும் வரம். கடவுளா குழந்தையைத் தருகிறான்? என்று நவீன விஞ்ஞானம் கேட்பது காதுகளில் விழுகிறது. "இரண்டு பேரிடமும் எந்தக் குறை யும் இல்லை. ஆகவே குழந்தை பிறப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது" என்றுதான் மருத்துவரால் சொல்லமுடிகிறதே தவிர, "உங்களுக்கு கட் டாயம் குழந்தை பிறக்கும்" என்று அவர்களால் உறுதியாகச் சொல்லமுடிவதில்லை. மாறாக "எல்லாம் சரியாகத்தான் இருக்கு, இனிக் கட வுளின் அருள்தான்" என்று சொல்லும் வைத் தியர்களைக் காண்கிறோம். என்ன காரணம்?

இறைவன் வழங்கினால்த்தான் குழந் தைப் பேறு உண்டாகும். குழந்தை "கடவுள் தந்த பொருளல்லவோ" என்று கவியரசு கண்ண தாசன் பாடியது முற்றிலும் உண்மை.

வாழ்க்கையில் எந்தச் சுகத்தையும் இறைவன் அனுமதிக்காமல் நாம் அனுபவிக்க முடியாது. சிறு சிறு விடயங்களில்கூட கர்ம பலனை அனுபவித்துத் தீரவேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம் என்பதுதான் உண்மை. எதை விதைக்கிறோமோ, அதைத்தான் அறு வடை செய்யமுடியும். எனவேதான் இந்துமதம் எல்லாச் சூழ்நிலையிலும் "நல்லதையே நினை, நல்லதையே செய்" என்று அறிவுறுத்துகிறது. தர்மம் தலை காக்கும் என்று சொன்னார்கள். நிச்சயம் நாம் செய்கின்ற நல்ல காரியங்கள் நமக்குப் பாதுகாப்பாக விளங்குகின்றன.

மற்றவர்களுக்கு நம்மால் உபகாரம் செய்ய முடியாமல் போகலாம். உபகாரம் செய்ய முடியாவிட்டாலும் அவர்கள் நன்றாய் இருக்க வேண்டும் என்று எண்ணலாம் அல் லவா? பிறருக்குத் தீமை செய்வதையே சிலர் வாழ்க்கையாகக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மனிதர்கள் சிலரை நான் பார்த்து இருக்கிறேன்; பார்த்துக்கொண்டும் இருக்கிறேன். அவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இல்லை என்பதும் எனக்குத் தெரியும்.

நமக்கு கஸ்டம் வரும்போதும் நம்பிக் கையுடன் நல்லதை நினைத்தால் நல்லதே நடக்கிறது. அது என் வாழ்க்கை அனுபவம். பணம் இல்லாமல் கஸ்டப்படும் ஒவ்வொரு முறையும் என் கஸ்டத்தை தீர்க்கும் விதத்தில், எப்படியோ எனக்கு பணம் கிடைப்பதை நான் பார்த்திருக்கிறேன். என்னைப் பொறுத்தமட்டில் துன்பங்களுக்கு நான் கண்ட மருந்து "சந்நிதி முருகன்"தான். இது எனது நம்பிக்கை. நம்பிக்கைதான் இந்து மதம்.

நாம் அனுபவிக்கின்ற துன்பங்களுக்கு இப்போது காரணம் புரியாமல் இருக்கலாம். இந்தத் துன்பம் ஏதோ ஒரு காரியத்துக்காகத் தான் நடைபெறுகிறது என்கிற தெளிவு நமக்கு இருக்குமானால், அந்தத் துன்பத்தை தாங்கிக் கொள்வதில் எந்தச் சிரமமும் இருக்காது.

அதனால்த்தான் வள்ளுவன் துன்பம் வரும்போது சிரிக்கச் சொன்னான். கஷ்டம்தான், பழகிக் கொண்டால் சரியாகிவிடும். துன்பத் தைத் தாங்கிக்கொள்ளத் தாங்கிக்கொள்ள அதுவே இன்பமாகிவிடும்.

குளிர்ந்த நீரில் காலையும் கையையும் நனைக்கும்போது குளிர்கிறது. ஆனால் அதைப் பொருட்படுத்தாமல் குளிர்ந்த நீரில் உடல் முழுவதையும் நனைத்து, மூழ்க ஆரம் பித்துவிட்டால் அந்தக் குளிர்ச்சியைப் போன்ற சுகம் வேறு எதுவும் இருப்பதில்லை. துன்பமும் அது போன்றதுதான். துன்பத்தைத் தாங்கிக் கொள்கின்ற மனப்பக்குவம் வந்துவிட்டால், துன்பமே இன்பமாகி விடுகிறது. அதனால்த் தான் துன்பங்கள் எல்லாம் இறைவன் நமக்கு வைக்கின்ற சோதனை என்று நமது புராண இதிகாசங்கள் கூறுகின்றன. துன்பத்துக்கு பழக்கப்படுவதைவிட துன்பங்களிலிருந்து

விடுதலை அடைவதற்கு என்ன வழியுள்ளது என்று சிந்திக்க வேண்டும்.

நாட்டையே கட்டி ஆண்டவர்கள் எல்லாம் கூட கோர்ட்டை மிதிக்கும்படி விதி வைக்கிறதே! உனக்கும் எனக்கும் வருவது துன்பமா என்ன? இந்த மனநிலையை ஏற்படுத்தி விடுவோமானால் துன்பம் இன்பமாகிவிடும். துன்பம் வருவதற்கு இரண்டு காரணங்கள் கூறலாம். ஒன்று மனிதன் தானாகவே அவனுடைய செயல்களினால் உருவாக்கிக் கொள்வது, மற்றொன்று அவனுக்கு சம்பந்தமில்லாமலேயே விதி விளையாடுவது.

நாமே நமக்கு உருவாக்கிக்கொள்ளும் துன்பங்களை அகற்றிக் கொள்வது எப்படி என்று சிந்திக்கவேண்டும். இன்று நமக்கு ஏற்படும் துன்பங்கள் யாவும் நமது ஆசைவயப்பட்ட செயற்பாடுகளினால் ஏற்படுவதுதானே!

"இது என்ன செய்துவிடப் போகிறது" என்று ஏதாவதொரு தவறான வழியில் நீ இறங்கிவிட்டால், அதில் உன் செயல் முக்கால் பங்கு, விதி கால்பங்குதான்.

ஒவ்வொரு துன்பத்திற்கும் ஒரு பின்னணி இருக்கிறது. அதனால்த்தான் புத்தி தாமதமாக உதயமாகிறது.

இந்தத் துன்பங்களிலிருந்து நிம்மதி அடைய சித்தர்களும், ஞானிகளும் சொன்னது போல பந்த பாசங்களை தூக்கி வீசிவிட்டு இருப்பதுதான் வழி என்று சொல்ல நான் விரும்பவில்லை.

குடும்ப வாழ்வில் இருப்பவனுக்கு இப்படியொரு யோசனையைச் சொல்வதைவிட மடத்தனம் வேறு இருக்க முடியாது.

(தொடரும்...

**பெரு மஞ்சம் காண வாரீர்**

உலகப்பெரு மஞ்சம் இணுவையில்
நிலவுலாவுகின்ற அற்புதமே(ர)
கலகமிலா வாழ்வு தரும்;

விலகுமே துன்பங்கள் வீட்டினிலே
விடுதலை கிடைக்கும் நாட்டினிலே
வில்லங்கம் போயகலும்;

அலகில் சோதியன் அம்பலத்தரசன்
ஆனந்திக்கும் திருமஞ்சம்
அப்பப்பா அதிசயமே;

நலமே பெருக பெரிய சந்நாசியார்
நாமம் சொல்லும் திருமஞ்சம்
நல்லிணுவையில் பாரீர்!

-கே.எஸ்.எஸ் -

*கண்கள் உறங்கலாம். ஆனால் கனவுகள் உறங்கக்கூடாது.*

# சந்நிதியான் ஆச்சிரமம் சமுதாயப் பணிகள் – 2018

– தொகுப்பு: வல்வையூர் அப்பாண்ணா –

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகள் பலதிறப்பட்டவை. நித்திய அன்னப்பணி ஆச்சிரமத்தின் பிரதான அம்சமாக இருந்தபோதிலும் ஏனைய கல்விப்பணி, மருத்துவப்பணி, மலையகப்பணி எனப் பல்வேறு பரிமாணம் பெற்று வந்த வரிசையில் கடந்த ஆண்டினில் (2018) வன்னிப் பகுதியிலும் கால்பதித்து பல்வேறு நலப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பல்கலை மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த உதவித்தொகை, வறுமைக் கோட்டிற்குக் கீழ்ப்பட்ட குடும்பங்களுக்கான மாதாந்த உதவிகள் என்பன மாதந் தவறாது வழங்கப்பட்டு வருவதற்கும் மேலாக கடந்த ஆண்டினில் மேற்கொள்ளப் பட்ட சமுதாய உதவிகள் கீழே தரப்பட்டுள்ளன.

*01.01.2018 திங்கள்:*

அமரர் மகேஸ்வரன் ஞாபகார்த்தமாக 95 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

*03.01.2018 புதன்:*

வவுனியா- கணேசபுரம் விநாயகர் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தரம் 1 முதல் 11 வரையிலான 314 மாணவர்களுக்கு புத்தகப் பைகள், கணித உபகரணப் பெட்டிகள், பேனா- பென்சில் முதலான பாடசாலைப் பொருட்கள் வழங்கப்பட்டன. லண்டனைச் சேர்ந்த விவேகானந்தன் நினைவாக வழங்கப்பட்ட இவ்வுதவியினை ஆச்சிரம சுவாமிகளும்- ஆர்வலர்கள் சிலரும் நேரில் சென்று வழங்கினர்.

*07.01.2018 ஞாயிறு:*

பதுளை கதிரேசன் கோவில் அறநெறிப் பாடசாலை, மற்றும் பண்டாரவளை கிரேக் பாடசாலையின் கீழ்த்தர வகுப்பு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அந்தந்த பாடசாலைகளில் வைத்து நேரில் வழங்கப்பட்டது.

*12.01.2018 வெள்ளி:*

கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதி முகாமையாளர் திரு S. சிவநாதன் அவர்களால் அன்பளிப்பு செய்யப்பட்ட துவிச்சக்கர வண்டியானது, யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் தரம் 7இல் கற்கும் மாணவி சி. கேசிகா என்பவருக்கு ஆச்சிரம வாராந்த நிகழ்வினில் வழங்கப்பட்டது.

*நன்றாகப் பேசுவது நல்லது. நன்றாகச் செயற்படுவது அதனிலும் நல்லது.*

*19.01.2018 வெள்ளி:*

யா/ அல்வாய் இந்து தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களின் இல்ல மெய்வல்லுனர் போட்டியை முன்னிட்டு 40 புத்தகப் பை, 40 தண்ணீரப் போத்தல், 40 சாப்பாட்டுப் பெட்டி என்பன வழங்கப்பட்டன.

*20.01.2018 சனி:*

தரம் 9,10,11இல் கல்வி பயிலும் 104 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் இலுப்பைக்கடவை கலாச்சார மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது.

*26.01.2018 வெள்ளி:*

2018 தைமாத ஞானச்சுடர் வெளியீட்டு வேளையில் ஆறு மாணவ மாணவியருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. விபரங்கள் கீழே:

1) கபிலன் நிஷாந் - தரம் 10
வ/ வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயம், கனகராயன்குளம்.
2) ஆனந்தரூபன் வினுஜன் - தரம் 11
வ/ வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயம், கனகராயன்குளம்.
3) லோ. யன்சிகா தரம் 9
யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், ஏழாலை.
4) பி. பிரவீன் - தரம் 9
யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், ஏழாலை.
5) ரங்கநாதன் ரேணுகா - தரம் 6
கிளி/ புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், கிளிநொச்சி.
6) தியாகலிங்கம் றோஜிவன் தரம் 8
கிளி/ பரந்தன் இந்து மகா வித்தியாலயம், பரந்தன்.

*03.0[illegible]18 சனி:*

1) பொலநறுவை சமனப்பிட்டி அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்குவத[illegible]காக ரூபா 15000/= நேரில் வழங்கப்பட்டது. (இந்தச் சத்துணவானது பிரதி ஞாயிறுதோறும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்டு வருகிறது.)

2) பண்டாரவளை தெமோதரைத் தோட்டத்திலுள்ள முருகன் கோவில் கட்டிட வேலைக்கான உதவிக் கோரிக்கையை- நேரில் பார்வையிட்டு- புனரமைப்புக்காக ரூபா 50,000/= வழங்கப்பட்டது.

3) பண்டாரவளை கிரேக் கீழ்ப்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த பெண்களுக்கு உடுபுடவைகள் வழங்கப்பட்டன.

*09.03.2018 வெள்ளி:*

வவுனியா முஸ்லீம் மகா வித்தியாலயத்தில் தரம் 4இல் கல்வி பயிலும் செல்வி பைஸல் றிக்ஷா எனும் மாணவிக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது. மேற்படி மாணவி வவுனியா பட்டகாடு எனும் ஊரில் வசித்து வருகிறார்.

*சாதிக்கப் பிறந்தவன் தூங்கும்போதும் விழித்திருக்கிறான்.*

*17.03.2018 சனி:*

இணுவில் தெற்கு, இணுவிலில் வசிக்கும் விஸ்வலிங்கம் பாலசிங்கம் எனும் மாற்றுத்திறனாளிக்கு மூன்று சில்லு சைக்கிள் வழங்கப்பட்டது.

*30.03.2018 வெள்ளி:*

சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த வெள்ளி நிகழ்வினில் வைத்து 5 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டது. விபரம் கீழே:

1) தெல்லிப்பளை யா/ தந்தை செல்வா தொடக்க முன்பள்ளி நிர்வாகத்தினரின் வேண்டுகோளை ஏற்று, பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்கான பரிசுப் பொருளாக 300 பொது அறிவு நூல்கள் வழங்கப்பட்டன.

2) வவுனியா- கற்பகபுரம்- பாலாமைக்கல் ஸ்ரீ முத்துமாரியம்பாள் அறநெறிப் பாடசாலை ஆசிரியை திருமதி கமலதேவி சிவறஞ்சனி என்பவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

3) துணைவி, சங்கரத்தை எனும் இடத்தில் வசிக்கும் திருமதி மலைராசா ஜெயலலிதா என்பவருக்கு, அவரது பிள்ளைகளின் பாவனைக்கென துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

4) வட்டுக்கோட்டை- இன்பச்சோலையில் வசிப்பவரும், யா/வட்டு. இந்துக் கல்லூரியில் தரம் 6இல் கல்வி பயிலும் மாணவன் ரவீந்திரன் ரனுஜன் என்பவருக்கு, அவரது போக்குவரத்து வசதி கருதி துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

5) புன்னாலைக்கட்டுவன்- சுன்னாகத்தில் வசிப்பவரும், யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தில் தரம் 4இல் கல்வி கற்கும் சி. தூயவன் எனும் மாணவனுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

*04.05.2018 வெள்ளி:*

அமரர் நித்திய தசீதரனின் முதலாம் ஆண்டு நினைவாக, யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் செல்வி சி. சர்மி எனும் மாணவிக்கும், இருபாலையில் வசிப்பவரும் யா/ மத்திய கல்லூரியில் கல்வி பயிலுபவருமான வே. வினுதாஸ் எனும் மாணவனுக்கும் ஆச்சிரமத்தின் சார்பாக துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

*25.05.2018 வெள்ளி:*

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் நடாத்திய நிறைமதி கலை விழாவிற்காக ரூபா 15,000/= வழங்கப்பட்டது.

அம்பாறை தம்பிலுவில் சிவதொண்டன் அன்னதான சபையினருக்கு 20 வேட்டிகள் வழங்கப்பட்டன.

*29.05.2018 செவ்வாய்:*

இன்றைய வைகாசிப் பெருவிழா நிகழ்வின்போது, இரண்டு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. விபரம் கீழே:

1) யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் பாடசாலையில் கல்வி கற்பவரும், குப்பிளானில் வசிப்பவருமான மாணவன் உ. லதுர்ஷன் என்பவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

2) கிளி/ புனித அந்தோனியார் றோ.க. வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவன் ச. வினோத் என்பவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

*16.06.2018 சனி:*

செஞ்சோலை சிறுவர் பராபரிப்பு இல்லத்திற்கு 50கிலோ சீனி, 50கிலோ பருப்பு, 25கிலோ பயறு, 25கிலோ கௌபி மற்றும் உழுத்தம் பருப்பு கடலை ஆகியனவும் வழங்கப்பட்டன.

*19.06.2018 செவ்வாய்:*

கதிர்காம பாத யாத்திரைக் குழுவினரின் குடி தண்ணீர் வசதி கருதி தம்பிலுவில் சிவதொண்டர் அணியினரின் வேண்டுகோளை ஏற்று 5000 லீற்றர் கொள்ளளவுடைய நடமாடும் தண்ணீர்த் தாங்கி ஒன்றினை ஆச்சிரம சுவாமிகள் நேரில் சென்று வழங்கினார்.

**06.07.2018 வெள்ளி:**

வழமையான வெள்ளி வாராந்த நிகழ்வினில் வழங்கப்பட்ட 4 துவிச்சக்கரவண்டிகளைப் பெற்றுக்கொண்ட நால்வர் விபரம் கீழே:

1) செல்வி பா. சௌமியா - தரம் 6
   யா/ வட இந்து ஆரம்பப் பாடசாலை- பருத்தித்துறை.
2) செல்வி ஜெ. ஜெயலோஜினி - உயர்தரம்
   யா/ இராமநாதன் கல்லூரி- மானிப்பாய்.
3) செல்வி ர. ராகினி - தரம் 10
   யா/ சிறீநாரதா வித்தியாலயம்- கரவெட்டி.
4) பா. பாதுகாதேவி
   (சுயதொழில் முயற்சிக்காக, பருத்தித்துறை)

*27.07.2018 வெள்ளி:*

வாராந்த வெள்ளி நிகழ்வின்போது வழங்கப்பட்ட உதவி விபரம் கீழே.

1) பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வி ச. நிலானி என்பவருக்கு துவிச்சக்கர வ. வழங்கப்பட்டது.

2) யாழ்ப்பாணம் யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவி.. முன்னிட்டு கீழ்க்காணும் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

100 கொப்பி - 80 பக்கம்
75 கொப்பி - 120 பக்கம்
50 கொப்பி - 200 பக்கம்
50 கணித உபகரணப் பெட்டி

3) ஒட்டுசுட்டான்- கற்சிலைமடு- சம்மளந்துளாய் பிள்ளையார் ஆலய கட்டிட நிர்மாணப் பணிக்காக, அக்கோவிலின் பொறுப்பாளர் துரைராசா அன்னலெட்சுமியிடம் ரூபா 50,000/= வழங்கப்பட்டது.

*14.09.2018 வெள்ளி:*

வரணி- இயற்றாலையைச் சேர்ந்த கி. சண்முகராசா என்பவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

*ஆணவம் கொள்ளாமல் இருந்தால் அரசமர வேர்போல் ஊன்றி வாழ்வான்.*

*28.09.2018 வெள்ளி:*

முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான தினத்தை முன்னிட்டு,

1) வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலகம்,
2) வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலகம்,
3) மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம், யாழ்ப்பாணம்

மூன்று செயலகங்களுக்கும் தனித்தனியாக 17 ஆண்களுக்கான வேட்டி- சாரம் முதலானவையும், 17 பெண்களுக்கான உடுபுடவைகளும் வழங்கப்பட்டன.

*01.10.2018 திங்கள்:*

செஞ்சோலை சிறுவர் இல்லத்திற்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

*12.10.2018 வெள்ளி:*

1) கொக்குவில் மேற்கு, குளப்பிட்டியில் வசிக்கும் திருமதி கதிரேசன் கலைமதி என்பவருக்கு சுயதொழில் முயற்சிக்காக தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.

2) கரவெட்டி- கரணவாய் தெற்கு- வெற்றிக்காடு எனும் இடத்தில் வசிக்கும் S. ராஜன் என்பவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

*19.10.2018 வெள்ளி:*

1) யா/ அல்வாய் வடக்கு றோ.க.த. பாடசாலையில் நடைபெற்ற நவராத்திரி விழாவினை முன்னிட்டு, பாடசாலை மாணவர்களுக்காக 400 கொப்பிகளும், 50 கணித உபகரணப் பெட்டி முதலான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

2) முதியோர் தினத்தை முன்னிட்டு கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு 30 உடுபுடவைகள் வழங்கப்பட்டது.

*26.10.2018 வெள்ளி:*

அச்சுவேலியைச் சேர்ந்த யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தரம் 12இல் கல்வி பயிலும் ஶ்ரீ விதுஷிகா என்பவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

*23.11.2018 வெள்ளி:*

கொழும்புத்துறையைச் சேர்ந்த, யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் தரம் 5இல் கல்வி பயிலும் மாணவனுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

*02.12.2018 ஞாயிறு:*

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் "கருவி" மாற்றுத் திறனாளிகள் சமூக வள நிலையத்தினருக்கு 300 உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

*சுறுசுறுப்பாக உழைத்துக்கொண்டிருக்கும் தேனீக்கு உறங்கக்கூட நேரமில்லை.*

*21.12.2018 வெள்ளி:*

இன்றைய திருவாசக விழாவினை முன்னிட்டு வழங்கப்பட்ட உதவிகள் வருமாறு:

1) கரவெட்டி யா/ விக்னேஸ்வராக் கல்லூரியில் தரம் 13இல் கல்வி பயிலும் அ. கோவிந்தன் எனும் மாணவனுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

2) தொண்டைமானாற்றைச் சேர்ந்தவரும், யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவியுமான கா. கார்த்திகேயினி என்பவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

*28.12.2018 வெள்ளி:*

ஆச்சிரமத்து வெள்ளி வாராந்த நிகழ்வினில் வழங்கப்பட்ட உதவிகள் கீழே தரப்பட்டுள்ளது.

1) அச்சுவேலி மேற்கு- கைத்தொழிற்பேட்டையில் வசிக்கும், தரம் 11இல் கல்வி கற்கும் ஆ. கௌஷிகா எனும் மாணவிக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

2) நாவலர் சனசமூக நிலையம் சார்ந்த உடுப்பிட்டி முன்பள்ளியின் கலை விழாவிற்கான பரிசுப் பொருட்களாக 20 புத்தகப் பைகள் வழங்கப்பட்டன.

## வெள்ள அனர்த்தம்

மார்கழி 2018, ஞானச்சுடர் சஞ்சிகையில் பக்கம் 57,58இல் வன்னி மாவட்ட வெள்ள அனர்த்தம்பற்றி விபரங்களும், பலரதும் உதவியுடன் சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கிய உதவிகள் பற்றிய விபரமும் வெளியாகியிருந்தது.



வெள்ள அனர்த்த உதவியின் 2ஆம் கட்டமாக 05.01.2019 சனிக்கிழமையன்று வன்னேரிக் குளம் - ஆனைவிழுந்தான் ஆகிய இரு கிராமங்களைச் சேர்ந்த 130 குடும்பங்களுக்கு 6லெட்சம் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் (பாய், பெற்சீற் போன்றவை உட்பட) வழங்கப்பட்டன. இந்த உதவியானது சுவிஸ் சைவநெறிக்கூட அன்பர்களின் உதவியுடன், செல்வி அ. கந்தையா, திரு செ. நவரத்தினராசா ஆகியோரின் பங்களிப்புடன் சந்நிதியான் ஆச்சிரமமும் இணைந்து வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இன்றே செய்யவேண்டியதை நாளைவரை தள்ளிப்போடாதே.

# இனிமையாகப் பழகிப் பேசி இன்பமாக வாழ்வோம்

– திரு பூ.க. இராசரத்தினம் அவர்கள் –

நாம் எல்லோரும் இனிமையாகப் பழகிப் பேசி நல்லுறவை ஏற்படுத்தினால் நலமாக வாழ்க்கையை மன அமைதியுடனும் திருப்தியுடனும் வாழலாம் என்பதை மறுக்க முடியாது. இனிமையாகப் பேசுதல் பற்றி வள்ளுவரின் கருத்தைக் குறிப்பிடுவது மிகப் பொருத்தமாகும்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந் தற்று"

-குறள் - 100

கனிகள் இருக்கும்பொழுது காய் களைத் தேடுவது போன்று இனிய சொற்கள் இருக்கும்பொழுது கசப்பான சொற்களை ஏன் உபயோகிக்க வேண்டும். மனிதர்கள் இயற்கை யாக கூடிவாழும் மனப்பாங்குடையவர்கள் என கிரேக்க தத்துவ ஞானி கூறியுள்ளார்.

"மனிதன் ஒரு சமூக மிருகம்" என சுருக்கமாக விளக்கியுள்ளார். இக்கூற்றிற்கு ஏற்ப மனிதர்கள் சேர்ந்து, ஒரு தோப்பாக இவ்வுலகில் மனித சமுதாயமாக வாழ்ந்து வருகிறார்கள். "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" போன்ற பல பழமொழிகள் உண்டு. "ஒருவர் எல்லோருக்காகவும் எல்லோரும் ஒரு வருக்காகவும்" என்ற கூட்டுறவுத் தத்துவம் மேலோங்கி நிற்கின்றது.

எனவே ஒருவருக்கொருவர் சார்ந்து வாழும் மனித வாழ்க்கையில் அனைவரும் ஒருவரோடு ஒருவர் இனிமையாகப் பேசி இனி மையாகப் பழகி இன்பமாக வாழ வேண்டும். மூதாதையர் வாழ்ந்து காட்டியமைக்கும் இலக் கிய சரித்திரச் சான்றுகள் பல உண்டு. உதா ரணமாக ஆலயங்கள். தொண்டர் இயக்கங்கள் இனிமையாகப் பேசப் பழக வாய்ப்புக்களை வழங்கி வருகின்றன. இன்றைய உலகில் இன்னல்களும் குழப்பங்களும் அதிகரித்து வருகின்றன. இவற்றைக் குறைப்பதற்கு இனி மையாகப் பழக வேண்டும்- பேச வேண்டும். ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொருவரிடமும் நிறைகள் குறைகள் ஆகிய இரண்டும் உள்ளன என்பதற்கு விளக் கம் தேவையில்லை. நாங்கள் ஒருவரிடம் பழகும்போது அவருடைய குறைகள் நிறை கள் பற்றி அறிய வாய்ப்புக்கள் உண்டு. நிறைகளைப் பாராட்டி குறைகள் பற்றி இனிமை யாகப் பேசி விளங்க வைத்தல் நன்று. சிலர் குறைகளைப் பேச மாத்திரம் விரும்புகிறார்கள். இதை ஒரு பொழுதுபோக்காகவும் கருதிக் கொள்கிறார்கள். ஒருவரது குறைகளைக் களைய நாம் சில உபாயங்களைக் கைக்கொள்ள லாம். உதாரணமாக அவருடன் அன்புடன் பழகி சாதுரியமாகக் குறைகளைத் திருத்த முயலலாம். அதற்கு வேண்டிய சூழ்நிலையை உருவாக்கலாம். அவரும் சில குறைகளை காலப்போக்கில் உணர்ந்து கைவிடுவார் எனக் கருதினால் அவைகளைப் பற்றி பேசாமல் விடுதல் நன்று. அவருடைய நல்வாழ்வை விரும்புகின்ற உறவினர்களிடம் நண்பர்களிடம் குறைகளைக் கூறி அவருடைய குறைகளைக் களைய ஊக்குவிக்கலாம். பொதுவாக ஒரு மனிதனுக்குத் தேவையான குணாதிசயங்கள்

*உற்சாகமுள்ளவனுக்கு எந்த எதிர்ப்பும் தடையாக இருப்பதில்லை.*

பற்றி விளக்குவதற்கு வாய்ப்புக்கள் கிடைக்கும்பொழுது அதனைப் பயன்படுத்த வேண்டும். சகிப்புத்தன்மை விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கின் மகிமை, கோஷ்டி மனப்பாங்கு, கூட்டுப் பொறுப்பு, நீதியான செயற்பாடு, தலைமைத்துவத்தை பேணுதல் போன்ற குணாதிசயங்களை ஒவ்வொருவரும் கடைப்பிடித்தல் நன்று. இவற்றை பாடசாலைகளிலும் விளையாட்டு மைதானங்களிலும் கற்றுக் கொள்ள வாய்ப்புக்கள் அதிகமாக உண்டு என்பதை ஒரு உதாரணம் வாயிலாக விளக்குவது பொருத்தமாகும். உலகப் புகழ்பெற்ற பிரான்சிய சக்கரவர்த்தியை இங்கிலாந்து படைத்தலைவன் நெல்சன் என்ற உவெல்லிங்கரன் கோமகன் ஊவாட்டலூ என்ற போர்க்களத்தில் தோற்கடித்தான். யுத்தமந்திரி எவ்வாறு "நெப்போலியனைத் தோற்கடித்தீர்" என வினாவினான். "நான் நெப்போலியன் என்ற வீரனை உவாட்டலூவில் தோற்கடிக்கவில்லை. நான் படித்த ஈற்றன், ஹறோ என்னும் இரு பாடசாலைகளின் மைதானத்தில் வைத்துத் தோற்கடிச்[illegible]தன்" எனக் கூறினான். இச் செயல் சரித்[illegible]மாகி விட்டது.

இன்றைய சமூகத்தில் தெளிவான விளக[illegible] தேவைப்படுகின்றது. நம் மனம் தெளிவுபெ[illegible] நம்பும்பொழுது அங்கே உன்னதமான சக்தி பி[illegible]றக்கின்றது. நலமாக நல்லெண்ணம் தோன்றுகின்றது. எண்ணங்கள் வினாக்கள், செயல்கள், எண்ணங்களின் கனிகள். "நல்லஎண்ணங்கள் நம்பிக்கையை ஏற்படுத்திச் செயலாகப் பரிணமிக்கும்" என ஆங்கில அறிஞன் டிரைன் கூறியுள்ளார். நாம் சமூக அமைப்புக்களையும் பயன்படுத்தலாம். சூரிய கதிர்களை ஒழுங்குபடுத்தும்பொழுதுதான் அவை சூடுபெற்று தீயாக மாறுகின்றது. அதே போல நாம் நமது கருத்துக்களை நலமாகப் பேசி ஒருமுகப்படுத்தும்பொழுது பயன் கிடைக்கின்றது.

ஒருவருடைய இன்பத்தில் மட்டுமின்றி துன்பத்திலும் கைகோர்த்து அவருடைய வாழ்வில் மட்டுமின்றி தாழ்விலும் துணை நிற்பது இனிது பழகுதலின், பேசுதலின் ஒரு பிரதான அம்சம். இதற்கு மனிதாபிமானமே அடிப்படை. நம் வாழ்க்கை எவ்வித பிரச்சினையுமின்றி இனிதாக அமையுமென்று எண்ணுபவர்கள் நேர்மறை அணுகுமுறை உடையவர்கள். இவர்களது கொள்கை வாழ்க்கையில் ஏற்படும் அனைத்து பிரச்சினைகளையும் மன உறுதியுடன் சமாளிக்க உதவும் கொள்கையாக அமையும்.

ஒரு தனிமனிதனின் உள் உணர்வு, அன்பு என்ற ஈர்ப்புச் சக்தி கொண்டதாய் இருக்கும்போது; தூய்மை என்ற வலிமை கொண்டிருக்கும்போது அது பிறரைத் தாக்குகிறது, பாதிக்கிறது, கவர்கிறது. புத்தர், ஆதிசங்கர், மகாத்மாகாந்தி போன்ற சான்றோர் அப்படிப்பட்டவர்கள். நாம் இனிமையாகப் பழகப், பேச நல்லெண்ணம் அடிப்படையாக அமைகின்றது. மக்களின் எண்ணத் தொகுதிதான் ஒருநாட்டின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக இருக்கின்றது. குறிக்கோள் அல்லது இலட்சியம் நம் மனதில் எண்ணங்களை ஏற்படுத்துகிறது. நல்ல குறிக்கோளை நோக்கி ஓயாது உழைத்தால் விதியை வெல்லலாம் எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார். உலகில் இன்று காணப்படுகின்ற பொருத்தமற்ற செயற்பாடுகளால் அமைதி குலைகிறது. மக்கள் மனதில் கவலையை ஏற்படுத்திய வண்ணம் உள்ளன. இனிமையாகப் பழகப் பேச வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படுகிறது. உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ்பியர் கூறியதைக் கருத்தில் கொள்வது பொருத்தமாகும். "உதட்டில் நல்லதும், உள்ளத்தில் கெட்டதும் எனக்குப் பிடிக்காது. ஒருவன் சிரித்த முகத்துடனே கெட்டவனாக இருக்க முடியும்." எனவே, ஒரு செய்தியை

*சுறுசுறுப்பே மனிதனின் அரும் பொருள்.*

நாம் மற்றவர்களிடம் கூறும்பொழுது அதை மிகைப்படுத்திக் கூறக்கூடாது. விதண்டாவாதம் செய்யக் கூடாது. நாம் நகைச்சுவை உணர்வு களுடன் பழகலாம். ஆனால் மற்றவர்களின் மனதைப் புண்படுத்தாதவாறு இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். ஒருவருடைய தோற்றத்தை அல்லது உடலமைப்பு குறித்து நாம் பரிகாசம் செய்யக் கூடாது. ஒருவருடன் வேறு ஒருவரை ஒப்பீடு செய்வதைத் தவிர்த் தல் நன்று. குறிப்பாக 13வயது தொடக்கம் 19 வயது உடையவர்கள் மத்தியில் தவிர்த் தல் மிகமிக நன்று. மனிதனுடைய அடிப்படை மனோபாவங்கள் மாறாதவரை எந்தவிதப் படி முறைகளோ, கல்வி வளர்ச்சியோ பொருளா தார வளர்ச்சியோ நிரந்தரமான மாற்றத்தை ஏற்படுத்துவது சுலபமானதல்ல. அறிவும் ஒழுக்கமும் வண்டியின் இரு சக்கரங்கள். ஒரு கட்டுப்பாட்டில்த்தான் பிரபஞ்சம் இயங்கு கிறது. எனவே இனிய வாழ்வுக்கு இனிமை யாகப் பழகுதலும் பேசுதலும் சுயகட்டுப்பாடும் தேவை. நம்புலனுக்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் சக்தி - ஒரு பேரறிவு- எப்போதும் எமக்கு உதவத் தயாராக இருக்கிறது. இதைச் சரிவர நாம் உணராமலும் புரியாமலும் ஏதோ தற்செயலாக நிகழ்ந்தது - அதிசயம் என எடுத்துக்கொள்கிறோம்.

எனவே நாம் உயர்ந்த உணர்வுக்கு அழைத்துச் செல்லப்பட வேண்டும். "வாழ்வது முக்கியமல்ல, சிறப்பாக வாழ வேண்டும்" என சோக்கிரட்டீஸ் அறிவுரை கூறுகிறார். எனவே நாம் இனிது பழகிப் பேசி அமைதி யான சமுதாயத்தை உருவாக்கும் முயற்சி யில் ஈடுபடுபவர்களோடு இணைந்து மானுட மும் சிறக்க உழைப்போமாக.

முன்னொரு தடவை தட்சிணேஸ்வரர் ஆலயத்தில் சுவாமி சிலையில் அணிவிக்கப்பட்டிருந்த நகைகளை யாரோ திருடிச் சென்றுவிட்டார்கள். அப்போது பக்தர் ஒருவர் ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் "பார்த்தீர்களா சுவாமி! இந்த உலகமே கடவுளின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது என்கிறார்களே! ஆனால் கடவுளால் தன்னுடைய நகைகளையே காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை!" என்றார். அதைக்கேட்ட ராமகிருஷ்ண பரமஹம்சரும் "இந்த நகைகளையெல்லாம் செய்வித்து கடவுளுக்கு அணிவித்தவர் யார்?" என்று கேட்டார். அதற்கு அந்தப் பக்தரும் "நானேதான் சுவாமி" என்று கூறினார். அதைக் கேட்டதும் "கடவுள் எப்போதாவது தனக்கு நகை வேண்டுமென்று உங்களிடம் கேட்டாரா?" என்று ராமகிருஷ்ண பரமஹம்சர் அவரைக் கேட்க. "இல்லை சுவாமி, நான்தான் விரும்பி அவற்றைச் செய்வித்து அணிவித்தேன்" என்றார் அந்தப் பக்தர். உடனே ராமகிருஷ்ண பரமஹம்சரும் "ஓ அப்படியா! உங்கள் இஷ்டத்துக்கு நீங்கள் அணிவித்திருக்கிறீர்கள்... தனது இஷ்டத்துக்கு இன்னொருவன் அவற்றை எடுத்துச் சென்று விட்டான். உங்கள் இருவருக்கும் இடையில் ஏன் கடவுளை நிறுத்துகிறீர்கள்? அப்படி ஒருவன் திருடிவிட்டாலும் இந்த உலகத்தின் ஏதோ ஒரு மூலையில்த்தான் இருக்கிறான். இந்த உலகமே கடவுளின் கட்டுப்பாட்டில்த்தான் இயங்குகிறது. அப்படி இருக்கும்போது திருடியவன் எங்கே ஓடப்போகிறான்? அவனையும் கடவுள் கண்காணித்துக்கொண்டுதான் இருக்கின்றார்" என்றார்.

ஆலயம் என்பது மனிதன் கடவுளுக்காகக் கட்டிக்கொடுக்கிற வீடு. அந்த வீடு ஆண்டவனுக்குத் தேவைப்படுவதில்லை. அது மனிதனுக்குத் தேவைப்படுகிறது. உள்ளம் என்கிற பெருங்கோயிலின் உள்ளே ஆண்டவன் இருப்பதாக உண்மை உணர்ந்தவர்கள் சொல்கிறார்கள். இதயக் கதவுகளைத் தட்டுங்கள் இறைவன் உங்கள் கண்ணுக்குத் தெரிவார்.

*கீழ்ப்பணிவதற்கு கற்றுக்கொண்டால் பதவி உயர்வு தானாக வரும்.*

# 2018ஆம் ஆண்டு வாசகர் போட்டிக்கான விடைகள்

| | மாதம் | பக்கம் |
|---|---|---|
| 1. கர்ம யோகம் | ஐப்பசி | 19 |
| 2. மயூரகவி | தை | 40 |
| 3. பொய்யாமொழிப் புலவர் | புரட்டாதி | 13 |
| 4. கொடைவள்ளல் S. ஆறுமுகப் பெருந்தகை | மாசி | 39 |
| 5. மனத்தைத் தொண்டு மனம் ஆக உருவாக்கியவன் | சித்திரை | 01 |
| 6. மாணிக்கவாசகர் | வைகாசி | 35 |
| 7. மூலிகை மரத்துக்கு | ஆனி | 54 |
| 8. முத்தி | தை | 60 |
| 9. உள்ளத்தில் இடம்பெற்ற ஆங்காரம் நீங்கி ஓங்காரத்தின்மூலம் ஞானம் உதயமாக வேண்டும். | ஐப்பசி | 41 |
| 10. அன்பு செலுத்தி ஆனந்தமாக வாழுதல் | புரட்டாதி | 38 |
| 11. கவிஞர் கண்ணதாசன் | ஆவணி | 53 |
| 12. கல்வித் திறமையை வளர்க்க வேண்டும் | ஆனி | 16 |
| 13. ஆறுமுகநாவலர் | வைகாசி | 02 |
| 14. கலிங்க மாகோன் | ஆனி | 35 |
| 15. சுயநம்பிக்கை | ஆவணி | 10 |
| 16. காலி | ஆடி | 37 |
| 17. பசிப்பிணி | ஆவணி | 02 |
| 18. தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவர் | ஆடி | 50 |
| 19. பசுமையானது | புரட்டாதி | 39 |
| 20. தூய உள்ளம் கொண்ட அடியவர்களை இறைவன் ஆட்கொண்டு அருள் செய்வதை | சித்திரை | 51 |
| 21. சேக்கிழார் பெருமான் | வைகாசி | 41 |
| 22. ரமண மகரிஷி | மாசி | 59 |
| 23. திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | சித்திரை | 44 |
| 24. கங்கா பூசை | பங்குனி | 65 |
| 25. உண்மையைத் தெளிந்து எல்லாப் பற்றினையும் விடுத்து திருவருளுக்கு பின்னே செல்வர். | பங்குனி | 15 |

*இன்றைய தினத்தைச் சவாலாக எடுத்துக்கொள்ளும்போது நாளைய தினம் எளிதாகிறது.*




1ஆம் பரிசு — திருமதி கலையரசி லோகேஸ்வரன்
யாமாவளவு, காசிப்பிள்ளையார் கோவிலடி,
தெல்லிப்பழை.

2ஆம் பரிசு — செல்வி தர்மரட்ணம் ஆரணி
பிள்ளையார் கோவிலடி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

3ஆம் பரிசு — திருமதி காந்தரூபி நாகராசா
மடத்தடி லேன், மடத்தடி,
மாவிட்டபுரம்.

## ஆறுதல் பரிசு பெறுவோர் விபரம்

1. திருமதி மதுரை மீனாம்பாள் சிறீஸ்கந்தராசா
குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

2. திருமதி வத்சன் சத்தியவாணி
இல.7, பயணியர்வீதி,
மட்டக்களப்பு.

3. ருக்குமணிதேவி ஆறுமுகம்
சிவன்வீதி,
ஆவரங்கால்

4. வ. கணபதிப்பிள்ளை
19/1, பெரேரா லேன்,
கொழும்பு- 06

5. செ. கனகரெத்தினம்
975, அன்புவழிபுரம்,
திருகோணமலை.

6. திருமதி மலர்மகள் ஞானலிங்கம்
159/6, K.R. ஒழுங்கை,
பலாலிவீதி, கோண்டாவில்.

7. ஸ்ரீரஞ்சன் ஆத்விக்
சம்பூர்- 7,
மூதூர்.

8. திருமதி உ. பேரானந்தம்
கிளானை வீதி, 2ம் இடது ஒழுங்கை,
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

9. பா. சாஜினி
முடக்கந்தோட்டம்,
அல்வாய்.

10. சி. சாருகாந்
வீரபத்திரர் கோவிலடி,
உடுப்பிட்டி.

**வாசகர் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் மாசிமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது (22.02.2019) வழங்கப்படும்.**

*கடுமையான போராட்டத்தின் பலனாகக் கிடைக்கும் வெற்றிகளே மதிப்புடையவை.*

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் மலையகக் கல்விப்பணி (தொடர்ச்சி...

– மோகனதாஸ் சுவாமிகள் –

அன்றைய தினம் நடைபெற்ற கற்றல் செயற்பாடுகளை முடித்த ஆசிரியர்களின் கருத்தை உள்வாங்கியபோது வருகை புரிந்த மாணவர்கள் அனைவரிடமும் கற்கவேண்டும் எனும் ஆர்வம் முனைப்புப் பெற்று நிற்கின்றது. ஆனால் கற்பிப்பதற்குரிய நேரம்தான் போதாது. ஆனாலும் கூடியவரை கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்போம் என்று கூறியதன் பிரகாரம் எமது பதுளை நோக்கிய பிரயாணம் ஆரம்பமாயிற்று. பயணத்தின் இடையில் தொலைபேசி அழைப்பு. அவ் அழைப்பினை இரா. செல்வவடிவேல் அவர்கள் ஏற்படுத்தி இருந்தார்.



மாணவ மாணவிகள் இரவு ஒன்பது மணிவரை கற்பதற்கு ஆர்வமாக இருப்பதாகவும் தங்களுக்கு கற்பிப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள் என்ன செய்ய என்ற வினாவினை எம்மிடம் தெரியப்படுத்தினார்கள். நானும், உங்களால் கற்பிக்க

*கோபமும் பொறாமையும் மனிதனைக் கொன்றுவிடும் சக்தியைப் படைத்தது.*

முடியுமானால் மற்ற ஆசிரியர்களோடும் கலந்து உரையாடி இச் செயற்பாட்டை முன்னெடுங்கள் நல்ல விடயம். ஆனாலும் பெண் பிள்ளைகளும் கல்வி கற்பதற்கு வருவதனால் பாடசாலை அதிபரிடம் கூறி பாடசாலைக்குச் சமீபமாக இருக்கும் ஆசிரியை ஒருவரையும் கற்றல் செயற்பாடு முடியும்வரை இருக்கச் சொல்லுமாறும் சொல்லி உங்களால் முடிந்தளவு கற்றல் செயற்பாட்டை முன்னெடுங்கள் என்று கூறித் தொடர்பைத் துண்டித்தேன். நாமும் இரவு மலையகச் சிறுவர் இல்லத்தை அடைந்து எமது இரவு உணவுச் செயற்பாட்டை முடித்து பதுளை கதிரேசன் ஆலயத்தை அடைந்து எமது இரவுப் பொழுதைக் கழித்தோம்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை வழமைபோன்று மலையகச் சிறுவர் இல்லத்தில் எமது காலை உணவினை முடித்து பதுளை கதிரேசன் ஆலயத்தில் இயங்கிவரும் அறநெறிப் பாடசாலை மாணவர்களைப் பார்வையிட்டு அவர்களுக்கு நாம் வழங்குவதற்காகக் கொண்டு வந்திருந்த பொருட்களை வழங்கி அப்பிள்ளைகளின் பெற்றோர்களிடமும் அறநெறிக் கல்வி பற்றிய கருத்தரங்கை நடாத்தி விட்டு பிற்பகல் இரண்டு மணியளவில் கற்றல் செயற்பாடு நடைபெறும் பாடசாலையை அடைந்தோம். நாம் போன சமயம் கற்றல் செயற்பாடு மிக மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. மேலதிகமாக உள்ள ஆசிரியர்கள் 10ஆம் ஆண்டு மாணவர்களுக்கும் சமய வகுப்புக்களை நடாத்திக் கொண்டிருப்பதையும் காணமுடிந்தது.

பிற்பகல் மூன்று மணியளவில் தமது கற்றல் செயற்பாட்டை முடிக்கும் எண்ணத்துடன் ஆசிரியர்களும் மாணவர்களும் ஆர்வமுடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். தமக்குரிய மதிய உணவுச் செயற்பாட்டை மறந்து கற்பித்த வண்ணம் இருந்தனர். நிகழ்வு முடியும் தறுவாயில் மாணவர்களது அன்றைய நிகழ்வின் எண்ணப் பதிவுகளை எழுதித் தரும்படி கேட்டுக்கொண்டதன் பிரகாரம் மாணவர்கள் அத்தனை பேரும் தமது எண்ணக் கருத்துக்களை எழுதி ஆசிரியர்களிடம் கையளித்தனர். வகுப்பறைகளைவிட்டு வெளியே வந்த ஆசிரியர்களிடம் பிரயோசனமான காரியமாக இருந்ததா? என்று கேட்டபொழுது, மேலதிகமாக மறுநாளும் நின்று கற்பிக்கவேண்டும்போல் இருக்கிறது - அப்படியான ஒரு மீட்டல் வகுப்பு. அதிகாலை ஐந்து மணிக்கு ஆரம்பமான செயற்பாடு மாணவர்களின் ஆர்வத்தினால் மிகத் திறம்பட நடத்தக் கூடியதாக இருந்தது என்று பதிலுரைத்தனர் ஆசிரியர்கள்.

(தொடரும்...

## அறிவென்னும் ஆயுதம்

சிக்கலை விரைவாகத் தீர்த்துவிட வேண்டி உணர்ச்சிவயப்பட்டுச் செயலாற்றினால் பெரும்பாலும் அச்சிக்கல் பெருகிவிடும். மனிதன் எப்போதும் தன் செயலால் எந்தச் சிக்கலையும் முடிவுக்குக் கொண்டு வருவதில்லை. எங்கு ஒரு சிக்கலை முடித்ததாக எண்ணுகிறானோ அங்கேயே, அதன் வேரிலேயே மற்றொன்று முளைத்துவிடும். மகளுக்குத் திருமணம் முடிந்துவிட்டால், தனது கவலையெல்லாம் தீரும் என ஒருவர் எண்ணுவார். ஆனால், மணம் முடிந்த பின்னர் எத்தனை சிக்கல்கள் எழுகின்றன. வீடு ஒன்று கட்டினால், இரண்டு ஏக்கர் நிலம் வாங்கிவிட்டால் இதுபோன்றே ஏதோ விரும்பியதை அடைந்துவிட்டால் வாழ்வில் கவலைகள் தீரும் என்று கற்பனை செய்து கொள்வோம். ஆனால், உண்மை என்ன? எதை முடிப்பதாக எண்ணுகிறோமோ, அங்கேயே இன்னொன்று தொடங்கிவிடும். அதிலிருந்து பல கவலைகள் கிளைவிடுவதும் உண்டு. எல்லாச் சிக்கல்களுக்கும் முடிவு இயற்கையிலேதான் உண்டு. ஒவ்வொரு சிக்கலையும் வெற்றிகொள்வது தெளிந்து தேர்ந்த அறிவேயாகும். அத்தகைய அறிவு எல்லோரிடமுமிருக்கிறது. அதைத் தூண்டி, அதையே வலுவுள்ள ஆயுதமாகக் கொண்டு கவலைகளை ஒழித்து வாழ்வில் அமைதியும், மகிழ்ச்சியும் பெறுவோம்.

*அழகான உருவத்தைவிட அழகான நடத்தையே மிக நல்லது.*

# மாசி மாத வாராந்த நிகழ்வுகள்

01.02.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :– "பண்ணிசை" (பக்கவாத்திய சகிதம்)

வழங்குபவர் :– திரு சி. தில்லைமணி அவர்கள்

(நல்லை ஆதீன ஓதுவார்)

---

08.02.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

15.02.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :– "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :– திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

22.02.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

ஞானச்சுடர் மாசி மாத வெளியீடு 254ஆவது மலர்

வெளியீட்டுரை :– திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள்

(இளை. ஆசிரியர்)

மதிப்பீட்டுரை :– திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள்

(முதுநிலை விரிவுரையாளர், யாழ்ப்பாணம்)

பதிவு இல. QD/10/NEWS/2019

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

